www.padippakam.com

# புரட்சிகர கட்சி குறித்து...

முனீஜுனா

இந்த ஆவணமானது புரட்சிகர கட்சி பற்றிய ஒரு சித்திரத்தை முன்வைப்பதற்கு முயற்சிக்கின்றது. இத்தகைய சித்திரத்தை பூரணமாக்குவதற்கு, பொதுவாக அரசியல் கட்சிகள் என்றால் என்ன? அவை வரலாற்றில் எப்போது தோன்றின என்பவை பற்றிய விபரங்களையும் பரிசீலிப்பது அவசியமாகிறது.

அரசியல் கட்சிகள் என்பவை வரலாற்று ரீதியானவை. அதாவது அவை வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் உருவானவை. முதல் முதலாக, முதலாளித்துவ சமூக அமைப்பிலேயே அரசியல் கட்சிகள் தோன்றின. முதலாளித்துவத்திற்கு முந்திய சமூகங்களில், குறிப்பாக நிலப்பிரபுத்துவ சமூகங்களில் அதிகாரமும் இறைமையும் அரசனுக்குச் சொந்தமாக்கப்பட்டிருந்தன. அரசியல் விவகாரங்களை கையாள்வதற்கும் தீர்மானிப்பதற்குமான உரிமை அரசனுக்கும் அவனை சூழ்ந்திருந்த சொற்ப எண்ணிக்கையான நில உடமை வர்க்கத்தினருக்கும் உரித்தாக்கப்பட்டிருந்தது. மத்திய காலத்தைச் சேர்ந்த இத்தகைய சமூகங்களில் அரசியல் என்பது ஒரு தனியான துறையாகக் கூட இருக்கவில்லை. அரசுக்கும், மக்களுக்கும் இடையே எத்தகைய நேரடித் தொடர்பும் இருக்கவில்லை. அரசியல் விவகாரங்களில் சம்பந்தப்படுவதிலிருந்து மக்கள் முற்றாக விலக்கப்பட்டிருந்தார்கள். இவ்வாறு அரசியலில் இருந்து மக்கள் விலக்கி வைக்கப்பட்டதையும் அதிகாரமும், இறைமையும் அரசனுக்கு சொந்தமாக்கப்பட்டிருந்ததையும் நியாயப்படுத்துகின்ற சித்தாந்தக் கருவியாக மதங்கள் செயற்பட்டன.

மத்திய கால சமூகங்களில் மதம் மிக முக்கிய பாத்திரம் வகித்தது. அன்றைய சமூகங்களில் சகல வாழ்க்கை நெறிகளையும் மதமே நிர்ணயித்தது, கட்டுப்படுத்தியது. அது அரசுடன் மிக நெருக்கமாக பிணைந்திருந்தது. மதமே அரசியலாகவும் விளங்கியது. அரசன் என்பவன் மக்களை ஆள்வதற்காக, கடவுளால் அனுப்பப்பட்ட பிரதிநிதி என மதங்கள் கூறின. இதன் மூலம் அரசனிடம் குவிந்திருந்த வரம்பற்ற அதிகாரத்தையும் இறைமையையும் சித்தாந்த ரீதியில் மதங்கள் நியாயப்படுத்தின. மறுபுறத்தில் மதங்கள் மனித வாழ்க்கைக்கான நெறிமுறைகளை வகுத்து அவற்றை பின்பற்றும்படி மக்களை ஆன்மிக ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் (அரசன் மற்றும் உடமை வர்க்கத்தின் ஆதரவுடன் வன்முறைகளைப் பாவித்து) நிர்ப்பந்திப்பதனூடாக அவை மக்கள் மீதான தமது கட்டுப்பாட்டை மிக வலுவாக உறுதிப்படுத்திக் கொண்டன.

இவ்வாறு மதங்களினால் கட்டுப்படுத்தப்பட்ட சமூகங்களில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட பிரிவினரோ அல்லது அங்கு உருவான புதிய சமூகப் பிரிவினரோ அரசனின் அடக்குமுறைக்கும் வரம்பற்ற அதிகாரத்துக்கும் எதிராக கிளர்ந்தெழுந்த போதும் அல்லது வெவ்வேறு சமூகப்பிரிவினரிடையே முரண்பாடுகள் தோன்றி, அவை நேரடி மோதலாக வெளிப்பட்டபோதும் அவை யாவும் மதங்களுக்கு அல்லது மதப் பிரிவுகளுக்கிடையிலான மோதல்களாகவே வெளிப்படையாக தோற்றமளித்தன. இவ்வகையில் ஐரோப்பாவில் நூற்றாண்டுகளாக இடம்பெற்ற சிலுவை யுத்தம் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து மதப்பிரிவுகளுக்கிடையிலான மோதல்கள் என்பவை தொடங்கி, இந்தியாவில் இடம்பெற்ற

படிப்பகம்

www.padippakam.com

சைவ-சமண மதப்பிரிவுகளுக்கிடையி லான மோதல்கள் வரை ஏராளமான உதாரணங் களை நாம் வரலாற்றில் இருந்து பெற முடியும்.

மதத்தின் சித்தாந்த நியாயப்படுத் தல்களுடனும் மக்கள் மீது அது கொண்டிருந்த இறுக்கமான கட்டுப் பாட்டின் துணையுடனும் அரசனும் அவனைச் சூழ்ந்திருந்த நில உடமை வர்க்கத்தினரும் பூரண இறைமையையும் அதிகாரத்தையும் கொண்டிருந்த நிலமையானது பல நூற்றாண்டுகள் நீடித்தன எனினும் இந்த சமூகங்களில் முதலாளித்துவ வர்க்கம் தோன்றியதோடு இணைந்ததாக இந்நிலை படிப்படியே மாற்றத்திற்குள்ளாகத் தொடங்கியது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் அரசனும் உடமை வர்க்கத்தினரும் அனுபவித்து வந்த வரம்பற்ற அதிகாரமும், இறைமையையும், அந்நாடுகளில் தோன்றி பலம் பெற்று வந்த முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமையில் கீழ் மேற் கொள்ளப்பட்ட எதிர்ப்புகள் மற்றும் போராட்டங்களினால் தீவிர மாற்றத்திற்குள்ளாகின.

பொருளாதார ரீதியில் பலம்பெற்று வந்த ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கத்தினருக்கு, மத்திய காலத்திற் குரிய சமூக பொருளாதார அரசியல் நிலமைகள் பொருத்தமானவையாகவும், சாதகமானவையாகவும் அமைந்திருக்க வில்லை. அரசினிடம் குவிந்திருந்த வரம்பற்ற அதிகாரமும் சித்தாந்த ஆதிக்கம் பெற்றிருந்த மதமும் மக்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தியும், எல்லைப்படுத்தியும் வந்தன. இத்தகைய நிலைமையானது முதலாளித்துவ வர்க் கத்தின் எல்லையற்ற விரிந்த வளர்ச்சிக்கு தடைக்கற்களாக அமைந்திருந்தன. ஏனெனில் தமது வாழ்க்கையை தாமே தீர்மானிக்கக் கூடிய தமது விருப்பப்படி தடையின்றி இயங்கக்கூடிய சுதந்திரமான மக்கள் காணப்படுகின்ற சூழ்நிலை தான் முதலாளித்துவ வர்க்கத்தின் இருப்பு க்கும், அதன் தொடர்ந்த வளர்ச்சிக்கும் அவசியமான ஆதாரப் படைகளாக அமைகின்றன. இத்தகைய சூழலை ஏற்படுத்த வேண்டுமாயின் அரசன் மற்றும் நில உடமை வர்க்கத்தின் ஆதிக்கத்தி லிருந்தும் மதத்தின் பிடியிலிருந்தும் மக்களை விடுவிப்பது அவசியமாக இருந்தது. இதை சாத்தியமாக்குவதற் கான வழிமுறையாக அதாவது, அரசனின் வரம்பற்ற அதிகாரத்தையும் மதத்தின் ஆதிக்கத்தையும் அகற்றுவதற்கான அல்லது கட்டுப்படுத்துவதற்கான தர்க்க ரீதியான வழிமுறையாக இறைமையானது மக்களுக்குரியதாகவும் அரசுடன் மக்கள் நேரடியாக தொடர்புகொள்ளக் கூடியதா கவும் அமைந்த அரசியல் முறைமையை (Political system) உருவாக்குவது அவசியமாகியது. இதற்கேற்ப முதலா ளித்துவ வர்க்கமானது, சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் என்ற கோஷங்களை முன்வைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் பலமான ஆதரவுடனும் பங்கு பற்றுதலுடனும் அரசியல் அதிகாரத்தை வென்று கொண்டது இவ்வாறு வரலாற்றின் புதிய அரசு வடிவமாக முதலாளித்துவ அரசு தோற்றம் பெற்றது.

வரலாற்றில் முதன்முதலாக மிகவும் மையப்படுத்தப்பட்ட, ஒழுங்கமைக்கப் பட்ட நிறுவனமாக முதலாளித்துவ அரசு உருவாக்கப்பட்டது. இந்த அரசின் எல்லைக்குள் அடங்கிய சகல மக்களும் எவ்வித வேறுபாடுகளுமின்றி இவ்வரசுக்கு கட்டுப்பட வேண்டியவர்களானார்கள். முன்னர் இன, மத, கலாச்சார ரீதியாகவும் பிரதேசரீதியாகவும் வேறுபட்டும் பிரிந்தும், தமக்கேயுரிய தனித்துவமான முறையிலும் வாழ்ந்து வந்த மக்கள் இப்போது முதலளித்துவ அரசின் கீழ் இத்தகைய வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து, ஒரே விதமான வாழ்க்கை முறைக்குள், சட்ட ஒழுங்குக்குள் கொண்டு வரப்பட்டார்கள். முன்பு அரசியல் ரீதியாக மதம் வகித்த சித்தாந்தப் பாத்திரத்தை, இப்போது பல்வேறு வகையான அரசியல் கொள்கைகள் வகிக்கத் தொடங்கின.

படிப்பகம்

www.padippakam.com

முன்பு அரசனிடம் குவிந்திருந்த அதிகாரங்கள் இப்போது, முதலாளித்துவ அரசுக்கு மாற்றப்பட்டன, அதே வேளை அரசனுக்குரியதாக இருந்த இறைமை, மக்களுக்குரியதாக மாற்றப்பட்டது. அதாவது முதலாளித்துவ அரசிடம் குவிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள், மக்களுடன் எவ்வித தொடர்புகளுமற்ற தனிநபர்/குழுக்களினால் பிரயோகிக்கப் படுவதற்குப் பதிலாக, மக்களினால் தெரிவு செய்யப்பட்ட, மக்களின் ஆதரவைப் பெற்ற வர்களினால் பிரயோகிக்கப் படுவதாக மாற்றமடைந்தன. இவ்வாறு அரசியல், ஜனநாயகமயப்படுத்தப்பட்டது. மக்கள் அரசியல் விவகாரங்களுடன் தொடர்பு கொள்கின்ற நிலை உருவாகியது.

இவ்வாறு மக்களுக்கும் அரசுக்கும் இடையே இணைப்பு உருவாகிய பின்னர், வெவ்வேறு வர்க்கங்கள்-சமூகப்பிரிவுகள் தமது நலன்களை பெற்றெடுப்பதற் காகவும், அவற்றைப் பேணி வளர்ப்பதற்கா கவும் தம்மை அரசியல் ரீதியாக ஒன்றிணைக்கின்ற போக்கு விரைவில் உருவாகத் தொடங்கியது. முதலாளித் துவ அரசானது நன்கு மையப்படுத்தப் பட்ட, அதிகாரங்கள் குவிக்கப்பட்ட நிறுவனமாக மாறியதால் இந்த அரசின் மீது செல்வாக்கு செலுத்துகின்ற பிரிவினர் தமது நலன்களை வென்றெடுக்கவும் அவற்றைப் பேணி வளர்க்கவும் முடியும் என்ற நிலை தோன்றியது. இதன் காரணமாக ஒவ்வொரு சமூகப் பிரிவும்-வர்க்கமும் தமக்கிடையே காணப்பட்ட பிரத்தியேக நலன்களின் அடிப்படையில் தம்மை அரசியல் ரீதியாக ஒன்றிணைக்க ஆரம்பித்தன.

முதலாளித்துவ அரசு இன்னமும் வலுவாக, முழு நிறைவாக உருவாகாதிருந்த ஆரம்ப நிலையில் செல்வாக்கு மிக்க சமூகப் பிரிவுகள்/வர்க்கங்களை சேர்ந்த தனி நபர்களே அரசுடன் தொடர்பு கொள்ளவும், அரசியல் விவகாரங்களை கையாளவும், அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிக்கவும் கூடியவர்களாக இருந்தார்கள். எனினும் 18ம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸில் இடம்பெற்ற முதலாளித்துவப் புரட்சியோடு அரசியலானது ஜனநாயக மையப்படுத்தப் படுகின்ற போக்கு வேகமாக அதிகரிக்கத் தொடங்கியது. இதன் பின்னர் தனிப்பட்ட ரீதியில் செல்வாக்கு மிக்க நபர்கள் அரசில் அங்கம் வகிப்பதற்கு பதிலாக, மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அரசில் அங்கம் வகிக்கின்ற நிலை உருவாகத் தொடங்கியது. இதன் விளைவாக அரசில் அங்கம் வகிக்க-அரசை கட்டுப்படுத்த விரும்புகின்றவர்கள் தாம் சார்ந்துள்ள சமூகப்பிரிவு வர்க்கத்தை அரசியல் ரீதியாக விழிப்புணர்வூட்டி அவர்களை நிறுவன ரீதியாக ஒன்று திரட்டவும் அவர்களது நலன்களை அரசியல் ரீதியாக ஒன்று குவிக்கவும் ஆரம்பித்தார்கள். இவ்வாறு வரலாற்றில் முதற்தடவையாக அரசியல் கட்சிகள் என்ற நிறுவனங்கள் தோன்றின. கூடவே தொழில் முறைரீதியாக அரசியலை மேற்கொள்கின்றவர்களும் (Professional Politicians) உருவாகினார்கள். இதன் பின்னர், அரசியல் என்பது ஒரு தனியான துறையாக வளர்ச்சியடையத் தொடங்கியது.

அரசியல் கட்சிகள் என்பவை சமூகப் பிரிவுகள்/வர்க்கங்களை அரசியல் ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிறுவனங்கள் ஆகும். இவை இந்த சமூகப் பிரிவுகள் /வர்க்கங்களின் நலன்களையும் அபிலாசைகளையும் அரசியல் தளத்தில் ஒன்று குவிக்கின்றன. மேலும் இச்சமூகப் பிரிவுகள் தமது நலன்களையும் அபிலாசைகளையும் அரசின் மூலமாக அடைந்து கொள்வதற்கான கருவிகளாகவும் அரசியல் கட்சிகள் தொழிற்படுகின்றன. இவ்வாறு சாராம்சத்தில் அரசியல் கட்சிகள் என்பவை வெவ்வேறு மக்கள் பிரிவுகள் சார்பாக அரசில் அங்கம் வகிக்கின்ற நிறுவனங்களாக அமைகின்றன.

www.padippakam.com

முதலாளித்துவ சகாப்தத்தின் தொடக்க காலங்களில் உடமை வர்க்கங்களே தமக்கென அரசியல் கட்சிகளைக் கொண்டிருந்தன. தொழிலாளர்களை பொறுத்தவரை அவர்கள் ஆரம்பத்தில் தமக்கென சொந்த அரசியல் கட்சிகளை கொண்டிருக்கவில்லை. அவர்களிடையே சமூக, பொருளாதார, கலாச்சார தளங்களில் குறிப்பிட்ட வளர்ச்சிகள் ஏற்பட்ட பின்பே, அவர்கள் தமக்கென சொந்த அரசியல் கட்சிகளை உருவாக்குவது சாத்தியமாகியது. ஆரம்பத்தில் தொழிலாளர்கள் தாம் தொழிலிலிருந்து விலக்கப்படுவதற்கும் தமக்கு நிச்சயமற்ற எதிர்காலத்தைத் தோற்றுவிப்பதற்கும் காரணமாக அமைந்த இயந்திரங்களை உடைதெறிகின்ற தன்னியல்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். எனினும் இத்தகைய நடவடிக்கைகள் தம்மை மேலும் அதிகளவில் வேலையற்றவர்களாக்கியதோடு தமக்கு சிறப்பான வாழ்க்கை உருவாவதற்குரிய வாய்ப்புகள் எதனையும் வழங்காததையும் தொழிலாளர்கள் விரைவிலேயே உணர்ந்து கொண்டார்கள். இதன் பின்னர் இத்தகைய நடவடிக்கைகளை கைவிட்டு தமது உழைப்பு சக்தியை நியாயமான கூலிக்கு விற்கவும் தமது தொழில் நிலைமைகளை மேம்படுத்தவும் தாம் தொழிலிலிருந்து விலக்கப்படுவதை தடுக்கவும் அவர்கள் தொழிற் சங்கங்களின் கீழ் தம்மை ஒருங்கிணைக்க ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களில் ஒன்றிணைந்து செயற்பட்டதனால் கிடைத்த அனுபவங்களின் மூலமாக தம்மைச் சூழ்ந்திருக்கின்ற ஒடுக்குமுறைகள், தளைகள் என்பவற்றை புரிந்து கொள்கின்ற நிலை படிப்படியே உருவாகியது. தொழிற்சங்க நடவடிக்கைகளும் தொழிற்சங்க போராட்டங்களும் தம்மை சூழ்ந்துள்ள ஒடுக்குமுறைகள், துயரங்கள் என்பவற்றிலிருந்து தம்மை விடுவிக்கப் போதுமானவை அல்ல என்ற உண்மையை அவர்கள் உணரத் தொடங்கினார்கள். அரசியல் ரீதியான போராட்டங்கள் மூலமாகவே இவற்றை அகற்ற முடியும் என்ற விழிப்புணர்வை அவர்கள் படிப்படியே பெறக்கூடிய நிலை உருவாகியது. இதே காலப்பகுதியில் விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்கள் தர்க்க ரீதியாகவும், தெளிவாகவும் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் பரப்பப்பட்டன. இவ்வாறு தொழிலாளர்களிடையே படிப்படியே தன்னியல்பாக உருவாகிவந்த அரசியல் விழிப்புணர்வும், தொழிலாளர்களுக்கு வெளியே பிரக்ஞை பூர்வமாக வகுக்கப்பட்ட விஞ்ஞான சோஷலிசமும் ஒன்றிணைந்ததன் விளைவாக தொழிலாளர் கட்சிகள் உருவாகத் தொடங்கின குறிப்பாக ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கம்யூனிஸக் கட்சிகள் (சமூக ஜனநாயகக் கட்சிகள்) தோற்றம் பெறலாயின.

விஞ்ஞான சோஷலிசத்தின் மூலவர்களான மார்க்சும், ஏங்கெல்சும் தொழிலாளர் வர்க்கம் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கைகளையும் ஏனைய தன்னியல்பான எதிர்ப்பு நடவடிக்கைகளையும் ஆர்வத்துடன் வரவேற்ற அதே நேரத்தில் தொழிலாளர் வர்க்கம் தன்னை விடுதலை செய்வதற்கும் சோஷலிச சமூகத்தை தோற்றுவிப்பதற்கான தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றவும் தனக்கென சொந்த அரசியல் கட்சியை கொண்டிருப்பது அவசியம் என்று வலியுறுத்தினார்கள்.

*"உடமை வர்க்கங்களின் கூட்டு அதிகாரத்துக்கு எதிரான தனது போராட்டத்தில், உடமை வர்க்கங்களினால் உருவாக்கப்பட்டுள்ள அனைத்துப் பழைய கட்சிகளுக்கும் எதிராக அவற்றிலிருந்து வேறுபட்டதான ஒரு அரசியல் கட்சிக்குள் தன்னை ஒருங்கிணைத்துக் கொள்ளாமல் உழைக்கும் வர்க்கம் செயற்பட முடியாது"*

என அவர்கள் வலியுறுத்தினார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு தொழிலாளர்களுக்கென தனியான அரசியல் கட்சி அவசியமென மார்க்சும் ஏங்கெல்சும் வலியுறுத்திய போதிலும் அத்தகைய கட்சிக்குரிய சில ஆதாரப் பண்புகளை (உதாரணமாக ஜனநாயக மத்தியத்துவம்) அங்காங்கே குறிப்பிட்ட போதிலும் இத்தகைய கட்சி தொடர்பாக ஒரு முழுமையான கோட்பாட்டை அவர்கள் உருவாக்கவில்லை. அவர்களின் காலத்திலேயே பல ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸக் கட்சிகள் உருவாகிய போதிலும், அவை எதுவும் ஒரு திட்ட வட்டமான கோட்பாட்டின் அடிப்படையில் உருவாகியிருக்க வில்லை.

ஐரோப்பிய நாடுகளில் அன்று நிலவிய விரிவான ஜனநாயக சூழலில், இக்கம்யூனிஸ்ட் கட்சிகள் பகிரங்கமான, பாராளுமன்ற அரசியலை முன்னெடுப்பனவாக செயல்பட்டன. இக் கட்சிகள் பாராளுமன்றத்தில் பாடடாளி வர்க்கத்தின் நலன்களை ஒரு குறிப்பிட்ட அளவு உயர்த்திப் பிடித்த போதிலும் இவை ஒரு புரட்சியை நோக்கி பாட்டாளி வர்க்கத்தை அணி திரட்டக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை. பொதுவாக இவை பாராளுமன்றக் குழுக்களாகச் செயற்பட்டனவே தவிர, புரட்சிகர அர்த்தத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சிகளாக செயல்படவில்லை. மறுபுறத்தில் வரலாற்றில் முதன் முதலாக பாட்டாளி வர்க்க அரசை தோற்றுவித்த பாரீஸ் பாட்டாளிகள் தமக்கென நிறுவனமயப்பட்ட ஒரு புரட்சிகர கட்சியை கொண்டிராததன் காரணமாக, குறுகிய காலத்திலேயே முதலாளித்துவ வர்க்கத்தினால் தோற்கடிக்கப்பட்ட சோக அனுபவத்தையும் அன்றைய புரட்சியாளர்கள் பெற்றிருந்தார்கள்.

இவ்வாறு பாட்டாளி வர்க்கக் கட்சி தொடர்பாக முற்றிலும் வேறு பட்ட இரு விதமான அனுபவங்கள் நிலவிய சூழலில் தான் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்யத் தொழிலாளர் வர்க்கம் புரட்சியை தனது நிகழ்ச்சி நிரலில் வைத்துச் செயல்பட்டது, எனினும் ரஷ்யப் பாட்டாளி வர்க்கம் தனது நாட்டின் கொடிய ஏதேச்சதிகார சூழலையும் மறு புறம் பெரும்பாலான ஐரோப்பிய தொழிலாளர் கட்சிகள் பாராளுமன்ற வாதத்தில் முடங்கிக் கிடந்த நிலையையும் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. இத்தகைய சூழலில் இவற்றை முகம் கொடுக்கக் கூடிய விதத்தில் தொழிலாள வர்க்கக் கட்சி பற்றிய மார்க்஀ியக் கருத்துக்களை வளர்த்து. இத்தகைய கட்சி குறித்து ஒரு தெளிவான உள்ளிணக்கமான கோட்பாடொன்றை உருவாக்கவேண்டிய அவசியமான வரலாற்றுப் பணியை லெனின் நிறைவேற்றினார். இவ்வாறு ஒரு புதிய வகை____கட்சிக்குரிய கோட்பாடு உருவாகியது.

தொழிலாளர் வர்க்கத்துக்கென சொந்தமாக புரட்சிர அரசியல் கட்சி அவசியம் என்ற மார்க்ஸியக்கருத்தை லெனின் மேலும் உறுதியாகவும் தீவிரமாகவும் முன்வைத்தார். எல்லாவற்றுக்கும் மேலாக பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு புரட்சிகரக் கட்சியே முக்கியமானது என்று அவர் வலியுறுத்தினார்:

> *"தொழிலாள வர்க்கத்தின் சக்தி- ஸ்தாபனமாகும். ஸ்தாபனமின்றி பாட்டாளி மக்கள் எதுவுமற்றவர்கள், ஸ்தாபன ரீதியாக இருக்கும் அவர்கள் அனைத்தும் பெற்றவர்கள்..."*

> *"ஆட்சி அதிகாரத்திற்கான தனது போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு ஸ்தாபனத்தைத் தவிர வேறு ஆயுதம் ஏதும் கிடையாது..."*

> *"பாட்டாளி வர்க்கமானது சோஷலிசத்திற்கான ஒரு வர்க்கப் போராட்டத்தை, மிக மிக ஜனநாயகத் தன்மையும், குடியாட்சித் தன்மையும் கொண்ட முதலாளித்துவ வர்க்கத்துக்கும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்துக்கும் எதிராகக் கூட தவிர்க்க முடியாதபடி நடத்த வேண்டியிருக்கும் என்பதை*

படிப்பகம்

www.padippakam.com

*ஒரு சமூக ஜனநாயகவாதி ஒருகணமும் மறந்துவிடக் கூடாது. இதில் ஐயத்துக்கே இடமில்லை. எனவே சமூக ஜனநாயகத்துக்கு ஒரு தனியான, சுதந்திரமான, கறாரான வர்க்கக் கட்சி என்பது முற்றிலும் அவசியமானது..."*

இவ்வாறு லெனின் தொழிலாள வர்க்கத்துக்கு என தனியான கட்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அதே நேரத்தில் ரஷ்யாவில் அத்தகைய கட்சியைக் கட்டுவதற்காக கடுமையாகவும் விடாப்பிடியாகவும் போராடினார்.

*"சோஷலிசக் கருத்துக்களையும் அரசியல் சுயவுணர்வையும் பாட்டாளி வர்க்க வெகுஜனங்களுக்கு ஊட்டுவதும் தன்னியல்பான தொழிலாளர் இயக்கங்களுடன் பிரிக்க முடியாதபடி தொடர்பு கொண்டதுமான புரட்சிகர கட்சியைக் கட்டுவதும் தான் அப்பணியாகும்..."*

*"ஸ்தாபன ஒழுங்கமைப்பின்றி பாட்டாளிகளால் வர்க்க உணர்வு மிக்க போராட்டம் நடாத்தும் நிலைக்கு உயர முடியாது இத்தகைய ஸ்தாபன ஒழுங்கமைப்பின்றி தொழிலாளர் இயக்கம் சக்தியற்றதாகிவிடும் தன்மையும் ருஷ்ய மக்கள் அனைவரையும் அரசியல் மற்றும் பொருளாதார அடிமை வாழ்விலிருந்து விடுவிக்கும் மாபெரும் வரலாற்றுக் கடமையை, தொழிலாளர் வர்க்கத்தால் நிதிகளையும் குழுக்களையும் பரஸ்பர நலச் சங்கங்களையும் மட்டும் நம்பி நிறைவேற்ற முடியாது ஒரு இயக்கத்தை உருவாக்கி, அதற்கு தலைமை தாங்கிச் செல்லவல்ல தனது அரசியல் தலைவர்களை, முன்னணிப் பிரதிநிதிகளை உருவாக்காத எந்த ஒரு வர்க்கமும் வரலாற்றில் ஆதிக்க நிலையை அடைந்ததில்லை..."*

*"நம்மீது குண்டையும் வெடியையும் பொழிந்து நமது தலைசிறந்த வீரர்களை விழுங்கிக் கொண்டிருக்கும் பகைவனது கோட்டை நம்முன் முழுப் பலத்துடன் உயர்ந்து நிற்கின்றது. இந்தக் கோட்டையை நாம் கைப்பற்றியாக வேண்டும். விழித்தெழும் பாட்டாளி வர்க்கத்தை, ரஷ்யப் புரட்சியாளர்களின் எல்லா சக்திகளுடனும் ஒன்றிணைத்து ரஷ்யாவிலுள்ள உயிராற்றலும், நேர்மையும் கொண்ட யாவற்றையும் கவர்ந்திழுக்கக் கூடிய ஒரு கட்சியை உருவாக்குவோமாயின் இந்தக் கோட்டையை நாம் பிடித்து விடலாம்..."*

இவ்வாறு உருவாக்கப்படுகின்ற கட்சியானது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக விளங்க வேண்டும் என்று லெனின் தொடர்ச்சியாக வலியுறுத்தினார்.

*"கட்சியென்பது ஒரு வர்க்கத்தின் அரசியல் ரீதியான உணர்வு பெற்ற வளர்ச்சியடைந்த பிரிவாகும். இது அவ்வர்க்கத்தின் முன்னணிப் படையாகும். இந்த முன்னணிப் படையின் வலிமை, அதிலுள்ளவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் ஒரு நூறு மடங்கு அதிகமானதாகும். நூறு மடங்குக்கும் அதிகமானதும் ஆகும்..."*

*"ஒரு முன்னணிப்படை தான் வழிநடத்துகின்ற மக்களிடமிருந்து தனிமைப் படுவதை தவிர்க்கவும் மக்கள் திரள் முழுவதையும் முன்னோக்கி வழிநடத்தவும் உண்மையிலேயே ஆற்றல் பெற்றிருக்கும் போதுதான் ஒரு முன்னணிப் படையென்ற வகையில் அது தன் கடமையை செய்கின்றது..."*

*"...முன்னணிப் பிரிவுக்கும், அதனை நோக்கி கவரப்படுகின்ற வெகுஜனங்களின் முழுமைக்கும் இடையிலான வேறுபாட்டை மறப்பதும், பெருந்திரளானோரை முன்னேறிய நிலைக்கு உயர்த்த வேண்டிய தனது*



படிப்பகம்

www.padippakam.com

*நிலையான கடமையை முன்னணிப் பிரிவு மறப்பதும் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதையே குறிக்கிறது. எங்களது உடனடியான பணிகள் குறித்து கண்களை மூடிக்கொள்வதையும், இத்தகைய பணிகளை குறுக்கிக் கொள்வதையுமே குறிக்கின்றது..."*

இத்தகைய கட்சி நிலைத்து நீடிப்பதும் தனது இலக்கில் முன்னேறுவதும் அடிப்படையில் தொடர்ச்சியாக தலைவர்களை உருவாக்கக்கூடிய அக்கட்சியின் ஆற்றலிலும் அக்கட்சி கொண்டிருக்கக் கூடிய முழு நேரப் புரட்சியாளர்களிலும் தங்கியிருக்கின்றது என்று லெனின் வலியுறுத்தினார்.

"...நான் அறைந்து கூறுகின்றேன்:

1. ஒருவருக்குப் பின்னால் ஒருவர் செயலாற்றுகின்ற தலைவர்களைக் கொண்ட ஒரு நிலையான அமைப்பில்லாமல், எந்த புரட்சிகர இயக்கமும் நிலைத்து நிற்க முடியாது.
2. போராட்டத்தில் தன்னியல்பாக இழுக்கப்பட்டுவரும் மக்கள் தான், இயக்கத்துக்கு அடிப்படையாக இருந்து கலந்துகொள்கின்றார்கள். அப்படிப்பட்ட மக்கள் திரள் எவ்வளவுக்கெவ்வளவு விரிந்து பரந்து இருக்கின்றதோ அவ்வளவுக்கு இப்படிப்பட்ட அமைப்பு அவசர தேவையாகும். அவ்வளவுக்கு இந்த அமைப்பு மேலும் கெட்டியாக இருந்து திர வேண்டும். (காரணம் மக்களின் கூடுதலாக பிற்பட்ட நிலையிலுள்ள பகுதிகளை பலரகமான வாய்வீச்சு வீரர்கள் திசை திருப்புவது மேலும் சுளுவானது.)
3. புரட்சி நடவடிக்கையில் முழு நேரமாக ஈடுபட்டுள்ள நபர்கள் தான் முதன்மையான இப்படிப்பட்ட அமைப்பில் இருக்க வேண்டும்.
4. ஒரு எதேச்சதிகார அரசில், முழு நேரமாக புரட்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பவர்களாகவும், அரசியல் பொலிஸை எதிர்த்துப் போராடும் கலையில் தொழில் முறைப் பயிற்சி பெற்றவர்களாகவும் உள்ள நபர்களை மட்டும் கொண்டதாக இப்படிப்பட்ட அமைப்புகளை எவ்வளவுக்கு கட்டுப்படுத்துகின்றோமோ அவ்வளவுக்கு இந்த அமைப்பைக் 'கில்லியெறிவது' கஷ்டமாகும்.

மற்றும்

5. அவ்வளவுக்கு இயக்கத்தில் சேர்ந்து அதில் தீவிரமாக பணிபுரியக்கூடிய தொழிலாள வர்க்க நபர்களும் ஏனைய சமுதாய வர்க்க நபர்களும் அதிக மாக இருப்பார்கள்..."

இவ்வாறு லெனின் முன்வைத்த புதிய வகைக்கட்சிக்குரிய அடிப்படை அம்சங்களை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. பாட்டாளி வர்க்கக் கட்சியானது, புரட்சிகர கோட்பாட்டினால்-மார்க்சியத்தினால் வழிகாட்டப்பட வேண்டும்.
2. இக்கட்சியானது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகவும் அவ்வர்க்கத்தின் கூட்டான அரசியல் தலைமையாகவும் விளங்க வேண்டும்.
3. இத்தகைய கட்சி, தனது போராட்டத்தின் குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகள் குறித்து துல்லியமான மதிப்பீட்டையும் அவற்றை அடைவதற்கான மூலோபாயம், தந்திரோபாயம் என்பவற்றையும் கொண்டிருக்க வேண்டும்.
4. கட்சியில் உறுதியான கட்டுப்பாடும் அமைப்பொற்றுமையும் நிலவுவதோடு கட்சியானது ஜனநாயக மத்தியத்துவத்தை தனது அடிப்படையான அமைப்புக் கொள்கையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. கட்சியானது தொழிலாள வர்க்கத்துடனும் ஏனைய உழைக்கும் வர்க்கங்களுடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.
6. இக்கட்சி தொழிலாள வர்க்க அரசு



படிப்பகம்

www.padippakam.com

அமைக்கப்படுவதை உறுதி செய்வதையும் முதலாளித்துவ சமுதாயத்தை சோஷலிச சமுதாயமாக மாற்றியமைப்பதையும் தனது வரலாற்றுக் கடமையாக கொண்டிருக்க வேண்டும்.

7. இக்கட்சி சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தின் அனுபவங்களை விஞ்ஞான பூர்வமாக மதிப்பீடு செய்யவும் பொருத்தமான வற்றைப் பயன்படுத்தவும் வேண்டும்.

8. இக்கட்சி பாட்டாளி வர்க்க சர்வதேசிய கொள்கைகளை பின்பற்ற வேண்டும்.

இத்தகைய கட்சி குறித்து தெளிவான விளக்கத்தை பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் தலைப்புகளில் புரட்சிகர கட்சியை பரிசீலிப்பது பொருத்தமாக அமையும்.

1. கட்சியின் சித்தாந்தத் துறை
2. கட்சியின் அக வாழ்க்கை
3. கட்சியின் நிறுவன கட்டமைப்பு



படிப்பகம்

www.padippakam.com

# 1. கட்சியின் சித்தாந்தத் துறை

ஒரு புரட்சிகர கட்சியின் சித்தாந்த துறையில், பொதுவாக பின்வரும் விடயங்கள் உள்ளடங்குகின்றன.

1. கோட்பாடு
2. கட்சித் திட்டம்
3. மூலோபாயம் ,
4. தந்திரோபாயம்.
5. செயற் திட்டம்
6. கட்சி வெளியீடுகள்

இவி, இவையொன்றையும் தனித் தனியாக விளங்கிக் கொள்வோம்.

## 1. கோட்பாடு (Theory)

ஒரு சமூகத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த விரும்புகிற புரட்சியாளர்கள், முதலில் அச்சமூகம் குறித்து சரியான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு சமூகத்தில் நிலவுகின்ற பல்வேறு சிக்கலான உறவுகளையும், நிகழ்வுகளையும் போக்குகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டால் மட்டுமே, புரட்சியாளர்கள் அச்சமூகத்தில் தாம் எதிர்பார்க்கின்ற மாற்றத்தை ஏற்படுத்துவது சாத்தியமாகும். இவ்வாறு எந்த ஒரு சமூகத்தையும் புரிந்து கொள்ள வேண்டுமாயின், தர்க்கரீதியாக முறைப் படுத்தப்பட்ட, முற்றிலும் உள்ளிணக்கமான புரட்சிகரமான கோட்பாடு அவசியமாகிறது. ஏனெனில் சமூக இயக்கம் என்பது வெறுமனே தற்செயல் நிகழ்வுகளின் தொகுப்பு அல்ல. மாறாக சமூக இயக்கம் என்பது தமக்குரிய விதிகளினால் ஆளப்படுகின்ற, ஒழுங்குக் குட்பட்ட நிகழ்வுக ளின் தொகுப்பு ஆகும். இத்தகைய நிகழ்வுகளைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப தமது போராட்ட இலக்குகளையும், வழிமுறைகளையும் தீர்மானிப்பதற்கு, சமூக விதிகள் பற்றிய அறிவுடன் தொடர்புடைய புரட்சிகரமான கோட்பாட்டை புரட்சியாளர்கள் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வாறு சமூகவிதிகள் பற்றிய அறிவை வழங்குகின்ற, தர்க்க ரீதியில் முறைப்படுத்தப்பட்ட, உள்ளிணக்கமிக்க ஒரு புரட்சிகரக் கோட்பாட்டைக் கொண்டிருப்பதன் மூலமாக மட்டுமே புரட்சியாளர்கள் (மற்றும் புரட்சிகர கட்சி) தாம் செயற்படுகின்ற சமூகத்தில் ஏற்படுகின்ற எத்தகைய நிகழ்வுகளையும் புரிந்து கொள்வதும், திடீர்த் திருப்பங்களின் போது நிலைகுலையாமல் இருப்பதும், எத்தகைய சூழலிலும் தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகத்தை /சமூகப் பிரிவை தொடர்ச்சியாக வழி நடத்திச் செல்வதும் சாத்தியமாகிறது.

இத்தகைய ஒரு கோட்பாட்டின் துணையுடன் தான்

*"...கட்சி தன் தலைமை இடத்தில் நின்றபடியே நிகழ்ச்சிகளின் முன்னேற்ற நடை வேகமடையும் பொழுது, எந்த மாற்றத்திலும் தன் கடமையை நிறைவேற்று வதற்கான தயார் நிலையையும் உறுதிப் படுத்துவதற்கு... முடிகின்றது..." ...அப்பொழுதுதான் சம்பவங்களினால் ஒரு கட்சி ஆளப்படுவதைத் தவிர்த்து, சம்பவங்களை அக்கட்சி ஆளக் கூடிய நிலை உருவாக முடியும்..."*

என்று எழுதினார் லெனின்.

ஒரு புரட்சிகர கட்சியைப் பொறுத்த வரை அதன் உருவாக்கக் கட்டத்திலிருந்தே கோட்பாடானது முக்கியத்தும் பெறுகின்றது. குறிப்பாக ஆரம்ப



படிப்பகம்

www.padippakam.com

நிலையில், கட்சிக்குள் நிலவக்கூடிய பல்வேறு போக்குகளை வெற்றி கண்டு, அங்கு திடமான சித்தாந்த ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு முன்னேறிய கோட்பாடு மிகவும் அவசியம்.

லெனின் கூறினார்:

*"...மேலும் ரஷ்ய சமூக ஜனநாயக வாதிகளைப் பொறுத்தவரை கோட்பாட்டு முக்கியத்துவமானது, அடிக்கடி மறக்கப்படுகின்ற, வேறு மூன்று நிகழ்வுகளினால் முதன்மைப் படுத்தப் படுகின்றது.*

*முதலாவது, எமது கட்சியானது அதன் உருவாக்கக் கட்டத்திலேயே இருக்கின்றது. அதன் உருவமானது இப்போது தான் வரையறுக்கப் படுகின்றது. மேலும், சரியான பாதையிலிருந்து கட்சியைத் திசைதிருப்பக் கூடியவகையில் அமைந்துள்ள புரட்சிகர சிந்தனையின் ஏனைய போக்குகளுடன் கணக்குத் தீர்த்துக் கொள்வதிலிருந்து நாம் இன்னமும் வெகுதூரத்தில் இருக்கின்றோம்...*

*இரண்டாவது சாராம்சத்தில் சமூக ஜனநாயகமானது ஒரு சர்வதேச இயக்கமாகும். இது நாம் தேசிய வெறியை எதிர்க்க வேண்டும் என்பதை மட்டும் குறிக்கவில்லை, ஆனால் ஒரு இளம் நாட்டில் தொடக்க நிலையில் உள்ள இயக்கமும் கூட, ஏனைய நாடுகளின் அனுபவங்களைப் பயன்படுத்தினால் மட்டுமே வெற்றிபெற முடியும் என்பதையும் குறிக்கின்றது. இத்தகைய அனுபவங்க ளைப் பயன்படுத்துவதற்கு இவற்றை மேலோட்டமாகத் தெரிந்து கொள்வது மட்டுமோ அல்லது கடைசியாக வெளியிடப்பட்ட தீர்மானங்களை பிரதியெடுப்பதோ போதுமானது அல்ல. இத்தகைய அனுபவங்களை விமர்சன பூர்வமாகக் கையாளவும் அவற்றை சுதந்திரமான முறையில் பரிசீலிக்கவுமான ஆற்றலே தேவைப்படுகின்றது. நவீன தொழிலாளர் வர்க்க இயக்கம் எவ்வளவு பிரமாண்டமாக வளர்ந்திருக்கின்றது, முன்னேறியிருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்கின்ற ஒருவர், இந்தப் பணியை முன்னெடுப்பதற்கு எத்தகைய வளமான கோட்பாடு சக்திகளும் அரசியல் (அதே போன்று புரட்சிகர) அனுபவமும் அவசியம் என்பதைப் புரிந்து கொள்வார்.*

*மூன்றாவதாக, ரஷ்ய ஜனநாயகத்திற்குள்ள தேசியப் பணிகள் உலகிலுள்ள வேறு எந்த சமூக-ஜனநாயகக் கட்சிகளும் எதிர்கொள்ளாதவைகளாக இருக்கின்றன. எதேச்சதிகார கொடுமைகளில் இருந்து அனைத்து மக்களையும் விடுவிப்பதற்கான அரசியல் மற்றும் தாபன கடமைகளை நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறோம். இந்நிலையில், முன்னணிப் போராளியின் பாத்திரமானது, மிகவும் முன்னேறிய கோட்பாட்டினால் வழிகாட்டப் படுகின்ற ஒரு கட்சியினால் மட்டுமே நிறைவேற்றப்பட முடியும்.."*

இவ்வகையில், ஒரு புரட்சிகர கட்சியின் உறுப்பினர்களிடையே சித்தாந்த ஐக்கியத்தை ஏற்படுத்தவும் அக்கட்சி தனது புரட்சிகர இலக்கில் தொடர்ச்சியாக முன்னேறவும், சரியான கோட்பாடு ஒன்று இன்றியமையாத தாகின்றது. எனவேதான் லெனின் பின்வருமாறு வலியுறுத்தினார்:

*"புரட்சிகரக் கோட்பாடு இல்லாமல் ஒரு புரட்சிகரக் கட்சி இருக்க முடியாது."*

இவ்வாறு ஒரு புரட்சிகர கட்சியைப் பொறுத்தவரை, சரியான, முன்னேறிய, புரட்சிகர கோட்பாட்டைக் கொண்டிருப்பதும், இத்தகைய கோட்பாட்டின் அடிப்படையில் கட்சிக்குள்ளும், கட்சிக்கு



படிப்பகம்

www.padippakam.com

வெளியேயும் சித்தாந்த மேலாண்மைக்காகப் போராடுவதும் அவசியமான பணிகளாக விளங்குகின்றன. எனவேதான் ஒரு புரட்சிகரக் கட்சியானது அரசியல் மற்றும் பொருளாதாரப் போராட்டங்களை முன்னெடுப்பது போன்று கோட்பாட்டுப் போராட்டத்தையும் முன்னெடுக்க வேண்டியது தவிர்க்க முடியாத அவசியமாகின்றது. ஜேர்மன் தொழிலாளர் இயக்கம் குறித்துப் பேசுகையில் எங்கெல்ஸ் கூறினார்:

*"ஒரு தொழிலாளர் இயக்கம் தோன்றியதிலிருந்து முதல் தடவையாக, போராட்டமானது அதன் மூன்று பக்கங்களில் கோட்பாட்டு, அரசியல் மற்றும் நடைமுறை-பொருளாதார ரீதியாக அவற்று க்கிடையிலான இடைத்தொடர்புகளிலும் ஒழுங்கமைப் பட்ட நிலையிலும் ஒரு ஒழுங்கான முறையிலும் முன்னெடுக்கப் படுகின்றது..."*

பாட்டாளி வர்க்கக் கட்சிகளைப் பொறுத்தவரை இத்தகைய புரட்சிகர கோட்பாடாக மார்க்சியம் விளங்கி வந்திருக்கின்றது. எனினும் எந்தவொரு கட்சியும் மார்சியக் கோட்பாட்டை வெறும் சூத்திரங்களாகவோ, சமூக வளர்ச்சிக்கு வழிகாட்டுவதற்காக முன்னரே நிறுவப் பட்ட முடிவுகளாகவோ எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் ஒவ்வொரு நாடும்/சமூகமும், அதன் புரட்சிப் போராட்டமும் பிரத்தியேகமான வரலாற்று நிலைமை களில் வளர்ச்சியடைகின்றன. எனவே ஒவ்வொரு புரட்சிகரக் கட்சியும், தான் எதிர்கொள்கின்ற குறிப்பான சூழலுக்கேற்ப மார்சியக் கோட்பாட்டை சுயேட்சையாக வளர்த்தெடுப்பதன் மூலமாகவே போராட்டத்தை சரியான திசையில் வழிநடத்திச் செல்ல முடியும்.

*"...மார்க்சியக் கோட்பாட்டை நாங்கள் முற்றும் முடிவான ஒன்றாக, மீறவொண்ணாத ஒன்றாகக் கருதவில்லை. மாறாக அது சோஷலிஸ்டுகளுக்குரிய விஞ்ஞானத் தின் அடிக்கல்லை மட்டுமே அமைத்து கொடுத்திருக்கின்றது. சோஷலிஸ்டுகள் வாழ்க்கையுடன் சேர்ந்து நடைபோட விரும்பினால் இந்த விஞ்ஞானத்தை எல்லாத் திசைகளிலும் வளர்த்துச் செல்வது அவசியம்.."*

என்றார் லெனின்

இவ்வாறு ஒரு புரட்சிகரக் கட்சியைப் பொறுத்தவரையில் அது சித்தாந்த ரீதியில் ஒரு படித்தானதாகக் கட்டப் படவும், போராட்டச் சூழலில் சித்தாந்த மேலாண் மையைப் பெற்றுக் கொள்ளவும், போராட்டச் சூழலில் ஏற்படக் கூடிய எந்த ஒரு திருப்பத்திலும் சரியான திசையை அடையாளம் கண்டு முன்னேறவும், தனது சொந்த போராட்ட நிலைமைக்கேற்ப புரட்சிகரக் கோட்பாட்டைக் கொண்டிருப்பது அவசிய நிபந்தனையாகின்றது.

## 2. கட்சித் திட்டம் (Party Programme)

கட்சித் திட்டம் என்பது, ஒரு கட்சி எந்த நோக்கங்களுக்காக போராடுகின்றது என்பது தொடர்பாக தனது கொள்கைகளை விஞ்ஞானபூர்வமாக தொகுத்து முன்வைப்பதைக் குறிக்கின்றது.

*"கட்சித்திட்டம் என்பது ஒரு கட்சி எதற்காக பாடுகின்றது, போராடுகின் றது என்பதை சுருக்கமாகவும் தெளிவாகவும், கச்சிதமாகவும் விளக்கும் அறிக்கையா கும்"*

என்று லெனின் கூறினார்.

இவ்வகையில் திட்டமானது குறிப்பிட்ட சமூகத்தை புறநிலையாகவும் அதன் சகல தளங்களிலும் ஆராய்கின்றது: ஒரு சமூகத்தின் பொருளாதார அடித்தளம், அங்குள்ள பல்வேறு வர்க்கங்கள்-சமூகப் பிரிவுகளின் எதார்த்த நிலைமைகள் அவற்றுக்கிடையிலான உறவுகள், கலாச்சாரம் மற்றும் சித்தாந்தம் போன்றவற்றை பரிசீலிப்பதினூடாக, திட்டமானது அச்சமூகத்தின் அரசியல் இலக்குகளை



படிப்பகம்

www.padippakam.com

வரையறுக்கின்றது.

ஒவ்வொரு புரட்சிகர கட்சியும் தனது போராட்ட பாதையில் முதல் கட்டத்தில் செய்து முடிக்கக் கூடிய இலக்குகளையும் நீண்டகாலத்தில் செல்லக் கூடிய இலக்குகளையும் கொண்டிருக்கின்றது. இவ்விருவகையான இலக்குகளும் அரசியல் திட்டத்தில் குறுகியகாலத் திட்டம் மற்றும் நீண்டகாலத் திட்டம் என்று அடிப்படையில் குறிப்பிடப்படுகின்றன.

ஸ்டாலின் எழுதினார்:

*"...திட்டமானது பாட்டாளிவர்க்க இயக்கத்தின் குறிக்கோள்களைத் தீர்மானிக்கின்றது. இக்குறிக்கோள்கள் திட்டத்தின் அம்சங்களாக அறிவியல் ரீதியில் முறைப்படுத்தப் படுகின்றன. திட்டமானது முதலாளித்துவ வளர்ச்சிக் காலகட்டம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் அமையலாம். அல்லது முதலாளித்துவ வளர்ச்சியின் ஒரேயொரு திட்டவட்டமான கட்டத்தை மட்டுமே உள்ளக்கியதாகவும் இருக்கலாம். இதற்கமைய திட்டமானது இரு பகுதிகளாக அமையும்: (1) அதிகபட்சத் திட்டம், (2) குறைந்தபட்ச திட்டம்."*

கட்சித் திட்டமானது கட்சி உறுப்பினர்களிடையே சித்தாந்த ஒற்றுமை ஏற்படுத்துவதற்கான அடித்தளமாக அமைகின்றது. கட்சி உறுப்பினர்களிடையே, பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஏற்படுகின்ற முரண்பாடுகள் அகற்றப்பட்டு, அவர்களிடையே உறுதியான சித்தாந்த ஒற்றுமை ஏற்படுவதற்கு கட்சித் திட்டம் உதவுகின்றது.

லெனின் கூறினார்:

*"...கட்சியை உருவாக்குவது, அதனைப் பலப்படுத்துவது என்பதன் அர்த்தம், அனைத்து சமூக ஜனநாயகவாதிகளிடையே ஐக்கியத்தை உருவாக்கி பலப்படுத்துவது என்பதாகும்... இந்த ஐக்கியமானது கட்டளைகளினாலோ, பிரகடனங்களின் சக்தியின் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களாலோ உருவாகிவிட முடியாது. இதற்காக அதிகம் உழைக்க வேண்டும். முதலாவதாக, வெளிப்படையாகச் சொன்னால், இப்போது ரஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளிடையே கட்சி செலுத்தும் வேறுபாடுகள், குழப்பங்கள் போன்று ஏற்று அகற்றக் கூடிய விதத்தில் உறுதியான சித்தாந்த ஒற்றுமைக்காக உழைக்க வேண்டியது அவசியம். இந்த சித்தாந்த ஒற்றுமையானது திட்டத்தினால் பலப்படுத்தப்பட வேண்டும்."*

மேலும் கட்சித் திட்டமானது சமூக அமைப்பை மாற்றியமைப்பதன் அவசியத்தையும் கட்சியின் நோக்கங்களையும் மக்களுக்குத் தெளிவாக விளக்குகின்ற அறிக்கையாகவும் அமைகின்றது.

லெனின் எழுதினார்:

*"மக்கள் அனைவரும் அதைத் தெரிந்து கொள்ளவும், பார்க்கவும் வேண்டும் என்பதற்காகவும், பூர்ஷ்வா நுகத்தடியிலிருந்து எல்லா உழைப்பாளி மக்களும் விடுதலை பெற வேண்டும் என்று உண்மையில் விரும்புகின்றவர்களையும் இந்த போராட்டத்தில் யார் யார் ஒன்றுபட வேண்டும் போராட்டம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பன போன்ற விடயங்களை வழியாக புரிந்து கொண்டவர்களையும் மட்டுமே கட்சி கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவும் ஒரு தெளிவான, கச்சிதமான திட்டத்தை முன்வைத்துள்ள ஒரே கட்சி சமூக ஜனநாயகக் கட்சிதான்..."*

இவ்வாறு ஒரு புரட்சிகர கட்சியானது தான் எந்த நோக்கங்களுக்காகப் போராடுகின்றது என்பதை அதன் உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் தெளிவாக விளக்குவதற்காகவும் கட்சி



படிப்பகம்

www.padippakam.com

உறுப்பினர்களிடையே ஏற்படக் கூடிய முரண்பாடுகள் மற்றும் குழப்பங்களை அகற்றி, அவர்களிடையே உறுதியான சித்தாந்த ஐக்கியத்தை ஏற்படுத்துவதாகவும் கட்சித் திட்டம் அமைகின்றது. இத்தகைய முக்கியத்துவம் பெற்ற கட்சித் திட்டமானது, குறிப்பிட்ட சமூகத்தை புறநிலையாகவும், சரியாகவும் மதிப்பீடு செய்வதினூடாக,

*'இறுதி இலட்சியம் பற்றிய தெளிவான சிந்தனையையும், அந்த இலட்சியத்திற்கு இட்டுச் செல்லும் பாதை பற்றிய சரியான புரிதலையும், குறிப்பிட்ட களத்திலுள்ள யதார்த்த நிலைமை அல்லது அக்களத்தின் உடனடிப் பணிகள் பற்றிய மிகச் சரியான சிந்தனையையும்'*

(லெனின்) உள்ளக்கியதாக அமைகின்றது.

மேலும் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி லெனின் பின்வருமாறு சுருக்கமாகக் கூறுகின்றார்:

*'ஒரு திட்டமின்றி, ஒரு கட்சியானது எவ்விதமான நிகழ்ச்சிகள் ஏற்பட்ட போதிலும், தன்னுடைய பாதையை அனுசரித்து செல்கின்ற, ஓர் ஒருங்கிணைந்த உயிரோட்டமுள்ள அரசியல் பொருளாக இருக்க முடியாது.'*

## 3. மூலோபாயம்/யுத்த தந்திரம் (Strategy)

மூலோபாயம் என்பது, கட்சித் திட்டத்தில் முறைப்படுத்தப்பட்டுள்ள இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு, ஒரு குறிப்பிட்ட காலகட்டம் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற தயாரிப்பு மற்றும் திட்டமிடுதலைக் குறிக்கின்றது. இதன் போது மிகவும் சாதகமான விளைவுகளைக் கொடுக்கக் கூடிய வழிமுறைகள் தெரிவு செய்யப்படுகின்றன.

*'மூலோபாயம் என்பது இறுதித் தாக்குதலை எத்திசையில் மேற்கொண்டால் மிக அதிகபட்ச விளைவுகளைச் சாதிக்க முடியுமோ, அத்திசையை நோக்கி இறுதித் தாக்குதலை நடாத்தத் திட்டமிடுவதாகும்.'*

என்றார் ஸ்டாலின்.

எனவே ஒரு புரட்சிகர கட்சி தான் தலைமை தாங்குகின்ற வர்க்கம்/சமூகப் பிரிவுகளுக்கு சாதகமாக அமையக் கூடிய விதத்தில், பல்வேறு சமூக சக்திகளை அடையாளம் காண்பதையும், அவற்றுடன் ஐக்கிய முன்னணி அமைப்பதற்கான சாத்தியங்களை அடையாளம் காண்பதையும் மூலோபாயம் குறிக்கின்றது.

*'மூலோபாயமானது புரட்சிகர பாட்டாளி வர்க்கம் தொடக்க நிலையிலும், வளர்ந்து செல்கின்ற சக்திகளின் உதவின் கீழும் மிகப் பெரும் விளைவுகளைச் சாதிக்கின்ற நோக்கத்துடன் வழிநடத்திச் செல்லப்பட வேண்டிய பொதுவான பாதையையும், பொதுவான திசையையும் வரையறுக்கின்றது. இதற்கு ஏற்றவாறு இது சமுதாய முனையில், பாட்டாளி வர்க்கம் மற்றும் அதன் நட்பு சக்திகளின் நிலைப்பாட்டைப் பற்றிய ஒரு வரைபடத்தின் எல்லைக் கோட்டை வரையறுக்கிறது.'*

என்றார் ஸ்டாலின்.

மூலோபாயமானது ஒரு குறிப்பிட்ட போராட்டக் கட்டம் முழுவதும் மாற்றமின்றி அமைந்திருக்கும். எனினும் போராட்டச் சூழலில் தீவிர மாற்றங்கள் ஏற்படும் போது, அதற்கேற்ப மூலோபாயமும் மாற்றப்பட வேண்டும்.

உதாரணமாக தனது நாட்டின் ஆளும் வர்க்கத்திற்கும் அதன் அரசுக்கும் எதிராக சோஷலிசப் போராட்டத்தை இலக்காகக் கொண்டு, அதற்கென பொருத்தமான மூலோபாயத்தை வகுத்துச் செயற்படுகின்ற ஒரு புரட்சிகரக்

www.padippakam.com

கட்சி, தனது நாட்டின் மீது அந்நிய ஆக்கிரமிப்பு ஏற்படுகின்ற நிலையில் அங்கு உருவாக்கக் கூடிய மாறுபட்ட சூழலைக் கவனத்தில் கொள்வது அவசியம். இதன் போது உடனடியான சோஷலிசப் போராட்டம் கைவிடப்பட்டு அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட் டத்தை முன்னெடுக்கவும் அதற்காக ஆளும் வர்க்கத்துடனும் கூட ஐக்கிய முன்னணி அமைப்பதற்கான சாத்தியம் பற்றி பரிசீலிக்கவும் வேண்டிய அவசியம் அக்கட்சிக்கு ஏற்படலாம். இவ்வாறு, மூலோபாயம் என்பது ஒரு நீண்டகால கட்டத்தை உள்ளடக்குகின்ற போதிலும், அதை நிலையான மாற்றப்பட முடியாத ஒன்றாகக் கருதாமல், இயக்கத்திற் குட்படுகின்ற, மாற்றப்படக் கூடிய ஒன்றாகக் கருதுவதன் மூலமாக, எத்தகைய சூழலையும் எதிர் கொள்ளக் கூடிய ஒரு உறதியான நிலையை ஒர புரட்சிகர கட்சி பெற முடியும்.

ஒரு போராட்டச் சூழலுக்குரிய மூலோ பாயம் அங்கீகரிக்கப்படுவதோ அல்லது மூலோபாயத்தில் மாற்றங்கள் செய்யப் படுவதோ கட்சிக் கொங்கிரஸிலேயே இடம் பெறுகின்றன இதன் மூலமாக, மூலோபாய மானது கட்சிப் பெரும்பான்மையினால் அங்கீகரிக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்படுவது சாத்தியமாகிறது.

## 4. தந்திரோபாயம்/ போர்த்தந்திரம் (Tactics)

ஒரு குறிப்பிட்ட சூழலில் புரட்சிகரக் கட்சி எவ்வாறு செயற்பட விரும்புகிறது என்பதை அதன் தந்திரோபாயம் குறிக்கின்றது. லெனின் கூறினார்:

*'கட்சியின் தந்திரோபாயம் என்பதன் மூலம் கட்சியின் அரசியல் நடத்தை அல்லது பண்பு, திசை மற்றும் அதன் அரசியல் செயற்பாட்டு முறைகள் என்பனவற்றையே நாம் கருதுகி றோம்...'*

*'தந்திரோபாயமானது ஒரு குறிப்பிட்ட திருப்பத்தின், ஒரு குறிப்பிட்ட மூலோபாயக் காலப்பகுதியின் அடிப்படையில் இடம் பெறுகின்ற எற்ற இறக்கங்களினால் தீர்மானிக்கப் படுகின்றது...'* என்றார் ஸ்டாலின்.

*'புரட்சிகர நிலைமை மாறுகின்ற போது, அதற்கேற்ப புரட்சிகர தந்திரோ பாயமும், தலைமையின் வழிமுறைகளும் மாறவேண்டும்...'*

என்றார் மாவோ.

ஒரு புரட்சிகரக்கட்சி குறிப்பிட்ட சூழலில் தனது செயலுக்கான தந்திரோ பாயத்தை வகுக்கும் போது அந்தக் கட்டத்தில் குறித்த சமூகம் அடைந்துள்ள வளர்ச்சி, சர்வதேச நிலைமை கள்...போன்ற பலதரப்பட்ட விடயங்க ளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

*'...குறிப்பிட்ட சமூகத்திலுள்ள அனைத்து வர்க்கங்களுக்கும் இடையிலான உறவுகளின் முழுமை யான நிலை பற்றிய புறநிலையான மதிப்பீடும், அதே போன்று அச்சமூகம் அடைந்துள்ள புறநிலையான வளர்ச்சி பற்றிய மதிப்பீடும், அந்த சமூகத்திற்கும் ஏனைய சமூகங்க ளுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய மதிப்பீடுமே ஒரு முன்னேறிய வர்க்கத்தின் சரியான தந்திரோபா யத்துக் குரிய அடிப்படைகளாக அமைகின்றன...'*

என்றார் லெனின்.

பிரதானமாக. தந்திரோபாயமானது, ஒரு புரட்சிகரக் கட்சி தான் செயற்படுகின்ற சமூகத்திலுள்ள பல்வேறு சக்திகளையும் சரியாக மதிப்பீடு செய்து அவற்றுடனான தனது உறவுகளை வரையறுத்துக் கொள்வதைக் குறிக்கி ன்றது.

*'...பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை என்கின்ற, அதன் வர்க்க*



படிப்பகம்

www.padippakam.com

*உணர்வுள்ள பிரிவாகிய பொதுவுடைமைக் கட்சி, சூழ்நிலைகளைக் கையாள்வதில் மாற்றங்களை மேற்கொள்வதும், பாட்டாளிகளிடையே உள்ள பல்வேறு குழுக்களுடனும், பல்வேறு தொழிலாளர் கட்சிகளுடனும் சிறுபட்டறை உரிமையாளர்களுடனும் உடன்பாடுகளையும் சமரசங்களையும் மேற்கொள்வதும் அவசியமாகிறது. முற்றிலும் அவசியமானது. இது பாட்டாளி வர்க்க உணர்வின், புரட்சி உணர்வின், போராடுவதற்கும் வெற்றி பெறுவதற்குமான ஆற்றலின் பொது அளவைத் தாழ்த்தாமல், அதை உயர்த்துகின்றவண்ணம் இந்த செயல் தந்திரங்களைப் பிரயோகிப்பது எவ்வாறு என்பதைத் தெரிந்துகொள்கிற விஷயமே தவிர வேறல்ல..."*

என்றார் லெனின்.

*"...தற்போதைய கட்டத்தில் பாட்டாளி வர்க்கமும் அதன் முன்னணிப்படையாகிய சீனப் பொதுவுடைமைக் கட்சியும் கட்சிக்கு வெளியே உள்ள சிறு முதலாளிய மக்கள் திரளுடன் ஒரு உறுதியான, பரந்த நேச அணியை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். ஒருபுறம் அவர்களைக் கையாள்வதில் இணங்கிப் போக வேண்டும். அவர்களது மிதவாதக் கருத்துக்களும் வேலைப்பாங்கும் பகைவனுக்கு எதிரான போராட்டத்துக்கு தடை செய்யாமலோ அல்லது நம் அனைவருக்கும் பொதுவான சமூக வாழ்வைச் சீர்குலைக்காமலோ இருக்கும் வரை, இக்கருத்துக்களையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். மறுபுறம் அவர்களுடனான நமக்குள்ள கூட்டை வலுப்படுத்துவதற்காக பொருத்தமான கல்வியை அவர்களுக்கு வழங்க வேண்டும்."*

என்றார் மாவோ.

தந்திரோபாயம், மூலோபாயத்திற்கு கீழ்பட்டது. மூலோபாயத்தின் வெற்றியை இலக்காகக் கொண்டது. மூலோபாயத்திற்கு ஏற்படக் கூடிய சாதகமான மற்றும் பாதகமான விளைவுகளைக் கொண்டே குறித்த சந்தர்ப்பத்திலான தந்திரோபாயம் தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு தந்திரோபாயம் குறிப்பிட்ட சூழலில் வெற்றியை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பினும், அந்த வெற்றியின் மூலம் கட்சியின் மூலோபாயத்துக்கு பாதிப்பு ஏற்படுமாயின் அத்தந்திரோபாயத்தை கைவிடுவது கூட அவசியம்.

*"ஒரு குறிப்பிட்ட தருணத்தின் தற்காலிக நலன்களுக்குக் கீழ்பட்டதாக தந்திரோபாயத்தை மேற்கொள்ளக் கூடாது. உடனடியான அரசியல் விளைவு என்ற எண்ணங்களால் அது வழிகாட்டப்படக்கூடாது. மேலும் உறுதியான நிலத்தில் ஊன்றி நிற்பதை விட்டு, ஆகாயத்தில் கோட்டை கட்டுவது இன்னும் கூடாது. மூலோபாயத்தின் நோக்கங்கள் சாத்தியப் பாடுகள் ஆகியவற்றுக்கு உகந்தவாறு தான் தந்திரோபாயம் உருவாக்கப்பட வேண்டும்..."*

என்றார் ஸ்டாலின்

அரசியல் முழக்கங்களும் (Political slogans) தந்திரோபாயத்தின் ஒரு கூறாக அமைகின்றன.

*"ஒருதலைமைக்குழு போராட்டத்தின் நோக்கங்களை (இவை உடனடி நோக்கங்களாகவோ, தொலைவான எதிர்கால நோக்கங்களாகவோ இருக்கலாம்) சுருக்கமாகவும் தெளிவாகவும் முறைப்படுத்திக் கூறுவதே முழக்கம் எனப்படும் போராட்டத்தின் வெவ்வேறு குறிக்கோள்களுக்கு ஏற்ப முழக்கங்களும் மாறுபடுகின்றன..."*

என்றார் ஸ்டாலின்.

இவ்வகையில் போராட்டத்தைத்



படிப்பகம்

www.padippakam.com

தலைமை தாங்குகின்ற ஒரு புரட்சிகர கட்சி, சூழ்நிலைக்குப் பொருத்தமான முழக்கங்களை உருவாக்கி முன் வைப்பது மிக முக்கியமானது.

*'இன்றைய நிலையில் சமூக-ஜனநாயகவாதிகளைப் பொறுத்த வரை மக்களை வழிநடத்திச் செல்வதற்குப் பொருத்தமான முழக்கங்களைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமானது. ஒரு புரட்சிகர சூழலில் கொள்கைரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட தந்திரோபாய முழக்கங்களின் முக்கியத்துவத்தைக் குறைப்பதை விட மிகவும் அபாயகரமானது வேறு ஒன்றும் இல்லை..'*

என்றார் லெனின்.

வெவ்வேறு குறிக்கோள்களுக்கு ஏற்ப, பொருத்தமான முழக்கங்களை உருவாக்குவதற்கு போராட்டச் சூழலை புறநிலையாக மதிப்பீடு செய்வது அவசியம்.

லெனின் கூறினார்:

*' உடனடியாக நெருங்கி வருகின்ற போராட்டத்திற்குரிய முழக்கங்களை, ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் பொதுவான முழக்கத்திலிருந்து எளிய முறையிலும், நேரடியாகவும் உருவாக்கி விட முடியாது... இதற்காக நாம் பருண்மையான வரலாற்று நிலைமைகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.'*

அரசியல் முழக்கங்கள் என்பவை, பிரச்சார முழக்கம் (propaganda slogan), கிளர்ச்சி முழக்கம் (agitation slogan) செயல் முழக்கம் (Action slogan) என வெவ்வேறு விதமாக அமைகின்றன. எனவே குறித்த ஒரு சூழலில் பொருத்தமான முழக்கம் எது என்பதை புரட்சிகர கட்சி தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் மாறாக சூழ்நிலைக்குப் பொருத்தமில்லாத முழக்கங்களை முன்வைப்பதன் காரணமாக ஒரு கட்சி மக்களிடமிருந்து அந்நியப்படக்கூடிய நிலை உருவாகிவிடும். அதே நேரத்தில், குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலை மாறாது நீடிக்கின்ற போது ஒரு குறிப்பிட்ட முழக்கமே பிரச்சார முழக்கமாகவும் கிளர்ச்சி முழக்கமாகவும் செயல் முழக்கமாகவும் அமைந்து விடுகின்றது. உதாரணமாக "எதேச்சதிகாரம் ஒழிக" என்ற முழக்கம் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரஷ்யாவில் உழைப்பாளர் விடுதலைக் குழுவினால் முதன் முறையாக முன்வைக்கப்பட்ட போது அது ஜாரிசத்துக்கு எதிரான ஒரு பிரச்சார முழக்கமாக அமைந்தது. பின்னர் ரஷ்ய ஜப்பானிய யுத்தத்தின் போது "எதேச்சதிகாரம் ஒழிக" என்பது ஜாரிசத்துக்கு எதிரான கிளர்ச்சி முழக்கமாக மாறியது. 1917 பெப்ரவரி புரட்சிக்கு சற்று முன்னர் "எதேச்சதிகாரம் ஒழிக" என்பது ஜாரிசத்துக்கு எதிரான செயல் முழக்கமாக மாறியது.

தொகுத்து நோக்கினால் ஒரு புரட்சிகரக் கட்சியானது நடைமுறை செயல்பாட்டுகளில் பெறக்கூடிய வெற்றியானது அக்கட்சியின் மூலோபாயம் மற்றும் தந்திரோபாயங்களினால் தீர்மானிக்கப் படுகின்றது. மூலோபாயமானது ஒரு குறிப்பிட்ட காலக்கட்டம் முழுவதையும் உள்ளடக்குகின்ற அதே நேரத்தில் தந்திரோபாயமானது அக்கட்டத்தின் ஒவ்வொரு திருப்பத்தையும் ஒவ்வொரு குறிப்பான நிலைமையையும் கவனத்திற் கொள்கின்றது. மூலோபாயம் தந்திரோபாயம் என்பனவற்றின் செயல்தகைமையானது போராட்டச் சூழல் குறித்த துல்லியமான விஞ்ஞான பூர்வமான மதிப்பீட்டில் தங்கியிருக்கின்றது.

## 4. வேலைத்திட்டம்/ செயல்திட்டம் (Working Programme)

செயற்திட்டமானது கட்சியின் முன்னுள்ள உடனடியான பணிகளை



படிப்பகம்

www.padippakam.com

திட்டவட்டமாக குறிப்பிடுகின்றது. ஒரு புரட்சிகரக்கட்சியின் செயற்திட்டமானது அக்கட்சியின் வளர்ச்சிக்கட்டம் அதனிடம் கைவசமுள்ள வளங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படு கின்றது.

ஒவ்வொரு புரட்சிகரக் கட்சியும் தனது வளர்ச்சிப் போக்கில் மூன்று கட்டங்களை சந்திக்கின்றது. முதலாவது புரட்சிகரக் கட்சியை அமைப்பதற்கான அடித்தள த்தை இடுகின்ற கட்டம். இரண்டாவது, இவ்வாறு உருவாகிய கட்சியைப் பலப்படுத்துகின்ற கட்டம். மூன்றாவதாக புரட்சிகரக் கட்சி தனியாகவோ அல்லது ஐக்கிய முன்னணிக் கூடாகவோ அரச அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற கட்டம். இந்த ஒவ்வொரு கட்டத்திலும் அவசியம் செய்தாக வேண்டிய குறிப்பான பணிகள், அணிதிரட்ட வேண்டிய மக்கள் பிரிவினர், தேவைப் படுகின்ற சாதனங்கள், செய்து முடிக்க வேண்டிய தயாரிப்புகள்... என பல பணிகள் திட்டமிட்ட ரீதியில் நிறைவேற்றப் படுவது அவசியம். உதாரணமாக புரட்சிகரக் கட்சியை அமைப்பதற்கான அடித் தளத்தை இடுகின்ற ஆரம்பக் கட்டத்தில் போராட்டம் குறித்தும் அதனுடன் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்தும் தெளிவான புரிதல்களைப் பெறுவதும் போராட்டத்தில் ஈடுபாடும் ஆர்வமும் அனுதாபமும் கொண்ட முன்னேறிய பிரிவினரை ஒரே அமைப்பின் கீழ் அணி திரட்டுவதும், போராட்டம் தொடர்பான விடயங்கள் குறித்து பல்வேறு கருத்துக்களையும் ஆழமாக விவாதிக்கக் கூடிய ஒரு கோட்பாட்டுப் பத்திரிகையை வெளியி டுவதும், ஒரு கட்சிக்கு அவசியமான பல்வேறு நிறுவன ஒழுங்குகளை (திட்டம், விதிகள், காங்கிரஸ், ஊழியர் பயிற்சி, குழு முறை... போன்றவை) மேற்கொள்வதும் அவசியமாகின்றன. இவ்வாறு உருவாக் கப்பட்ட கட்சியைப் பலப்படுத்துகின்ற இரண்டாவது கட்டத்தின் போது போராட்டத்தில் நேரடியாக இணைந்து கொள்ளக்கூடிய நபர்களை உள்வாங் கவும் மறைமுகமாக பங்களிப்பு செய்யக் கூடியவர்களுடன் முறையாக தொடர்பு களை ஏற்படுத்த வுமான நிறுவன ஒழுங்க மைப்புகளை கொண்டிருத்தல், போராட்ட த்தை அவசியமாகக் கொள்கின்ற போராட்டத்தை ஆதரிக்கின்ற பிரிவினரை அடையாளம் கண்டு அவர்களை அணிதிர ட்டுதல் மக்கள் தம்மீதான ஒடுக்கு முறைகள் குறித்தும், அவற்றிலிருந்து விடுபடுவதற் கான அவசியம் மற்றும் வழிமுறைகள் குறித்தும் மற்றும் புதிதாக உருவாக்கப்பட வேண்டிய சமூக முறைமை குறித்தும் புரிந்து கொள்ளக் கூடிய விதத்திலும் அவர்களை கிளர்ச்சி யூட்டக் கூடிய விதத்திலும் செயற்படக் கூடிய ஒரு அரசியல் பத்திரிகையை வெளியிடுதல், பொருத்தமான பிரச்சார மற்றும் கிளர்ச்சி முழக்கங்களை உருவாக்குதல் எதிரியிட மிருந்து தற்காத்துக்கொள்ளவும் எதிரி மீது தாக்குதல்களை மேற்கொள்ளவுமான பயிற்சியையும் ஆயுதங்களையும் பெற்றி ருத்தல் என்பவை அவசியமாகும். இதே போன்று அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடிய இறுதிக்கட்டத்தின் போது எதிரிக்கு எதிராகவும் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராடுகின்ற பல்வேறு அமைப்புகளுடன் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்துவதும் மக்களில் பெரும்பாலானோரை நேரடியாக அரசியல் போராட்டத்தில் ஈடுபடத் தூண்டுவதும், இதற்காக பொருத்தமான செயல் முழக்கங்களை உருவாக்குவதும் எதிரி மீதான இறுதித் தாக்குதலுக்குரிய சகல தயாரிப்புகளையும் மேற்கொள்வதும் அவசியமாகின்றன.

இவ்வாறு ஒரு புரட்சிகரக் கட்சி தனது வளர்ச்சிக் கட்டத்தின் ஒவ்வொரு நிலை யிலும் அவசியம் செய்து முடிக்கப்பட வேண்டிய உடனடிப் பணிகளை செயற்திட்டத்தில் திட்டவட்டமாக வரைய றுப்பதன் மூலமாக தன்னிடமுள்ள வளங்களுக்கேற்பவும் சூழலுக்கேற்பவும் தனது போராட்ட இலக்கில் தொடர்ச்

www.padippakam.com

மியாக முன்னேறுவது சாத்தியமாகின்றது.

## 4. கட்சி வெளியீடுகள் (Party publication)

கட்சி வெளியீடுகளைப் பொறுத்த வரை அவை கோட்பாட்டுப் பத்திரிகை, அரசியல் பத்திரிகை உட்கட்சிப் பத்திரிகை, கலை இலக்கியப் பத்திரிகை, சிறுநூல்கள் சுவிரொட்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் என பலவகைப்பட்டவையாக அமைகின்றன. இவை கட்சியின் வேலைத் திட்டத் திற்கு அமைவாக வெளியடப் படுகின்றன. அதாவது ஒரு கட்சியின் வளர்ச்சிக் கட்டத்திற்கும், அக்கட்டத்தில் செய்து முடிக்கப்பட வேண்டிய முதன்மைப் பணிகளுக்கு ஏற்ப, கட்சி வெளியீடுகளின் தன்மையும், உள்ளடக்கமும் தீர்மானிக் கப்படுகின்றன. உதாரணமாக, ஒரு கட்சியை உருவாக்குவதற்கான ஆரம்பக் கட்டத்தில், பல்வேறு விடயங்களையும் ஆழமாக விவாதிக்கின்ற கோட்பாட்டு பத்திரிகை அவசியமாகிறது. இதே போன்று, கட்சியானது மக்களுடன் தன்னை இணைத்துப் பலப்படுத்துகின்ற கட்டத்தில், அணிதிரட்டப்பட வேண்டிய மக்கள் பிரிவினருக்கு ஏற்ப வெகுஜன அரசியல் பத்திரிகையும், பிரச்சார மற்றும் கிளர்ச்சிப் பிரசுரங்களும் அவசியமாகின்றன.

ஒரு புரட்சிகர கட்சியை மக்கள் அடையாளம் காணவும் அதனுடன் தம்மை இணைத்துக் கொள்ளவும் உதவுகின்ற பிரதான ஊடகமாக கட்சி வெளியீடுகள் அமைகின்றன. மேலும், ஒரு புரட்சிகரக் கட்சியானது மக்கள் மத்தியிலும், ஏனைய புரட்சிகரப் பிரிவினர் மத்தியிலும் சித்தாந்த மேலாதிக்கத்தை செலுத்துவதற்கான பிரதான கருவியாகவும் கட்சி வெளியீடுகள் அமைகின்றன. இதனால் இவை திட்டமிட்ட ரீதியிலும், தலைமை அமைப்புக்களின் வழிகாட்டலின் படியும் வெளியிடப்படுவது அவசியம், கோட்பாட்டு விவாதங்கள் தொடங்கி, சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வரை கட்சி வெளியீடானது கவனமான பரிசீலனைக்கும் தயாரிப்புக்கும் 'உட்படுவது அவசியம். கட்சி வெளியீடுகள் அனைத்தும் மக்களின் பிரச்சினைகளை உடனடியாகவும் சரியாகவும் அடையாளம் காண்பவையாகவும் அவை தொடர்பான கட்சியின் நிலைப்பாடுகளை எப்போதும் சரியாகவும், தெளிவாகவும் முன்வைப்பனவாகவும் அமைந்திருக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# 2. கட்சியின் அக வாழ்க்கை

ஒரு புரட்சிகரக் கட்சி தனது இலக்குகளை நோக்கி முன்னேற வேண்டுமாயின் அதன் அங்கத்தினர்களிடையே திட்டவட்டமான உறவுமுறைகள் நிலை நாட்டப்படுவது அவசியம். இத்தகைய உறவுமுறைகளின் தொகுப்பாக ஒரு கட்சியின் அக வாழ்க்கை அமைகின்றது. ஒரு புரட்சிகர கட்சியின் அக வாழ்க்கையில் கீழ்வரும் விடயங்கள் அடங்குகின்றன

1. கட்சி விதிகள்
2. ஜனநாயக மத்தியத்துவம்
3. விமர்சனம் சுயவிமர்சனம்
4. உட்கட்சிப் போராட்டம்
5. சீர்செய் இயக்கம்
6. ஊழியர் கொள்கை

## 1. கட்சி விதிகள்

"ஒழுங்கமைத்தலின் சம்பிரதாய வெளியீடே விதிகள்" என்றார் லெனின். கட்சிவிதிகள் உறுப்பினர்களின் கடமைகள், உரிமைகள் என்பவற்றை வரையறுப்பதன் மூலமாக, அக்கட்சி ஒழுங்குக்கும், கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு இயங்குவதை நிச்சயிக்கின்றன.

ஒரு சமூகத்திலுள்ள அனைத்து நிறுவனங்களுமே தமக்கென சொந்த விதிகளைக் கொண்டிருக்கின்றன. ஒரு சமூகம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற பொலிஸ் படை தொடங்கி ஒரு கிராமப்புற வாசிகசாலை போன்ற சிறிய, வரையறுக்கப்பட்ட பாத்திரத்தையே ஆற்றுகின்ற ஒரு சாதாரண சமூக நிறுவனம் வரை ஒவ்வொன்றும் தனக்கென திட்டவட்டமான விதிகளைக் கொண்டிருக்கின்றன. இந்த விதிகள் தான் அந்த நிறுவனம் ஒழுங்காகவும், தொடர்ச்சியாகவும் இயங்குவதை உறுதிப்படுத்துகின்றன. மாறாக தனக்கென குறிப்பான விதிகளைக் கொண்டிருக்காமல் இயங்கக்கூடிய ஒரு சமூக நிறுவனம் ஒழுங்கின்மைக்கும் சீர்குலைவுக்கும் உட்பட்டு இறுதியில் அழிந்துவிடக் கூடிய நிலையை அடைகின்றது. இவ்வகையில் சமுதாயத்தை "தலைகீழாக" புரட்டிப் போடக்கூடிய மாற்றத்திற்கு தலைமை தாங்குகின்ற ஒரு புரட்சிகர கட்சியானது, மிகவும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட, கறாராகப் பின்பற்றப்படுகின்ற அமைப்பு விதிகளைக் கொண்டிராத போது, அங்கு குழப்பமும், சீர்குலைவுமே மிஞ்சும், அத்தகைய கட்சியினால் தனது இலக்கு நோக்கி ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாததோடு காலப்போக்கில் அது தேய்ந்து மறைவதும் கூட தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஒரு புரட்சிகரக் கட்சியில் தாபன நிறுவன கட்டமைப்பைப் பேணுவதற்கும், கட்சியின் அமைப்பு ரீதியான ஒற்றுமையை (organisational Unity) ஏற்படுத்துவதற்கும் கட்சி விதிகள் அவசியம். ஒரு புரட்சிகர கட்சியில்-அதன் உறுப்பினர்களிடையே - சித்தாந்த ரீதியான ஒற்றுமையோடு அமைப்பு ரீதியான ஒற்றுமையும் நிலவுகின்ற போதுதான் புரட்சியாளர்களின் செயற்பாடுகளில் உயர்ந்தபட்ச ஒற்றுமை ஏற்படுவது சாத்தியமாகின்றது.

*"கட்சித் திட்டம் தொடர்பாகவும், தந்திரோபாயம் தொடர்பாகவும் எழுகின்ற பிரச்சினைகளில் ஒற்றுமை*



படிப்பகம்

www.padippakam.com

*அத்தியாவசியமானது. ஆனால் அது ஒன்றுபட்டுமே கட்சி ஒருமைப்பாட்டுக்கும் கட்சிப் பணிகளை மையப்படுத்துவதற்கும் போதுமான நிபந்தனை ஆகாது. கட்சிப் பணிகளை மையப்படுத்துவதற்கு, கூடுதலான தாபன ஒற்றுமை வேண்டியிருக்கின்றது. வெறும் குடும்ப வட்ட குழுவுக்கு அப்பால் அதிகமாக வளர்ந்துவிட்ட ஒரு கட்சியில், சம்பிரதாயமான விதிகள் இல்லாமல், சிறுபான்மை பெரும்பான்மைக்கும், பகுதி முழுமைக்கும் கீழ்படிந்து நடந்து கொள்ளாமல் ஒற்றுமை குறித்து நினைத்துப் பார்க்கவே முடியாது..'*

*என்றார் லெனின்.*

கட்சியினுள் தவறான போக்குகள் தோன்றும் போதும் உட்கட்சி முரண்பாடுகள் ஏற்படுகின்ற போதும் அவற்றைக் கையாள்வதற்கான ஒழுங்குச் சட்டகமாக கட்சி விதிகள் பயன்படுத்தப் படுகின்றன.

லெனின் கூறினார்:

*'..விதிகளின் துணையோடு, சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக கிட்டத்தட்ட கூர்மையான ஆயுதம் ஒன்றை உருவாக்க முடியும். சந்தர்ப்பவாதத்திற்கான காரணங்கள் எவ்வளவு ஆழமாக உள்ளனவோ, அவ்வளவுக்கு இந்த ஆயுதம் கூரானதாக இருக்க வேண்டும்...'*

*'விளையாட்டுத்தனமாக, அவமரியாதையான நடத்தை குற்றச்சாட்டுக்களைக் கூறுகின்றவர்களுக்கு (அல்லது வதந்திகளைப் பரப்புபவர்களுக்கு) எதிராக இப்படிப்பட்ட விதி நல்லதொரு ஆயுதமாகப் பயன்படக் கூடும். இப்படிப்பட்டதொரு விதி இருக்குமானால், குற்றச்சாட்டுகளைச் சொல்கின்றவர் தார்மீகத் துணிவுடையவராக இருந்து, கட்சியின் முன்பாக ஒரு குற்றம் சாட்டுகிறவராக நின்று, பொருத்தமான ஒரு கட்சி நிறுவனத்திடம் தீர்வைப் பெற முயன்றாலொழிய, இவ்வாறான குற்றச்சாட்டுகள் அனைத்தும் உடனடியாக, கண்ணியமற்ற அவதூறுகள் என்று வகைப்படுத்தப்படும்..'*

கட்சிவிதிகள், ஒரு கட்சியின் அகவாழ்க்கையை பொதுவாக வரையறுத்து, ஒழுங்கமைக்கின்றன. இவை கட்சிக் கட்டமைப்புக்குரிய தாபனக் கொள்கைகளையும் (organisational principles of party's structure), கட்சி வாழ்வுக்கான நெறிகளையும் (norms), கட்சி நிறுவனங்களினால் பயன்படுத்தப் படக் கூடிய ஒழுங்கான வேலைமுறைகளையும் (routine methods) தீர்மானிக்கின்றன. இவ்வகையில் கட்சிவிதிகள் மூலமாக குழுக் கூட்டங்கள், மாநாடுகள், கொங்கிரஸ்... போன்றவை வரையறுக்கப் படுகின்றன. ஊழியர் தேர்வு, பயிற்றுவிப்பு, கண்காணிப்பு, தரமுயர்த்துதல், களையெடுப்பு... போன்ற ஊழியர் கொள்கைகள் தீர்மானிக்கப்படுகின்றன. ஜனநாயக மத்தியத்துவம், விமர்சன-சுயவிமர்சனம் உட் கட்சி போராட்டங்கள் சீர் செய் இயக்கம்... போன்றவற்றையும் கட்சி விதிகள் திட்டவட்டமாக வரையறுக்கின்றன.

எனினும் கட்சி விதிகள் கட்சியின் அகவாழ்விலுள்ள இத்தகைய ஒவ்வொரு கூறுகளினதும் அடிப்படை அம்சங்களையே வரையறுக்கின்றன. அதே நேரத்தில் இந்த ஒவ்வொரு கூறும் (உதாரணமாக கொங்கிரஸ், ஊழியர் தேர்வு...என) தனக்கென சுயமான தனித்துவமான இயங்குதளத்தையும் அதற்குரிய குறிப்பான இயங்கு விதிகளையும் கொண்டிருக்கின்றன. உதாரணமாக 'கட்சி உறுப்பினர்களிடையே கொள்கை ரீதியாக ஏற்படுகின்ற முரண்பாடுகள் உட்கட்சிப் போராட்டத்தின் மூலமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பது கட்சி விதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஆனால் அத்தகைய உட்கட்சிப் போராட்டம் எவ்வாறு முன்னெடுக்கப்பட



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும், முரண்பாடுகள் எந்த வழிகளில் தீர்க்கப்படவேண்டும் என்பன போன்ற குறிப்பான விடயங்கள் உட்கட்சிப் போராட்டத்துக்கென வகுக்கப் பட்ட குறிப்பான விதிகளினால் நிர்ணயிக் கப்படுகின்றன. இதே போன்று கட்சியின் உயர் அதிகார பீடமாக கொங்கிரஸ் அமைகின்றது என்பதும் கட்சித் திட்டம், விதிகள், மூலோபாயம், தந்திரோபாயம் என்பவை கொங்கிரஸிலேயே அங்கீகரி க்கப்பட வேண்டும் என்பதும் தலைமை உறுப்புக்கள் கொங்கிரஸிலேயே தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதும்" கட்சி விதிகளில் சேர்க்கப்பட்டிருக்கும். எனினும் நடைமுறையில் கொங்கிரஸ் கூட்டப் படுவதும் அதன் நிகழ்வுகள் மற்றும் தீர்மானங்கள் தேர்தல்கள் போன்றவை யும் கொங்கிரசுக்குரிய குறிப்பான விதிகளினாலேயே தீர்மானிக்கப்படுகின் றன. இவ்வாறு ஒரு கட்சியின் தாபனக் கட்டமைப்பையும் அகவாழ்வையும் ஆளுகின்ற பொதுவான கட்சிவிதிகளை யும் ஒவ்வொரு துறைகளிலும் நிலவக் கூடிய குறிப்பான விதிகளையும் துல்லிய மாக வரையறுப்பதோடு அவற்றை அனைத்து உறுப்பினர்களும் கண்டிப்பா கவும் பிரக்ஞை பூர்வமாகவும் பின்பற்று வதன் மூலம்தான் ஒரு புரட்சிகரக் கட்சியானது தனது அமைப்பொற்றுமை குலையாமல் தனக் குரிய இலக்கில் தொடர்ச்சியாக முன்னேறுவது சாத்திய மாகும்.

## 2. ஜனநாயக மத்தியத்துவம்

பாட்டாளி வர்க்கக் கட்சியின் அமைப்புக்கொள்கையாக (organising principles) ஜனநாயக மத்தியத்துவம் விளங்குகின்றது. கட்சி வாழ்வுக்குரிய சகல நெறிமுறைகளும் (norms) ஜனநாயக மத்தியத்துவத்திலிருந்தே வெளிப்படுகின் றன. ஜனநாயக மத்தியத்துவம் என்பது பாட்டாளி வர்க்க ஜனநாயகம் மற்றும் மத்தியத்துவம் என்பவை உயிரோட்டமான முறையில் இணைக்கப்பட்டிருப்பதையும் அவை ஒன்றுடனொன்று ஊடுருவியிருப்ப தையும் குறிக்கும்.

*"...ஜனநாயக மத்தியத்துவம் என்பது ஒரே சமயத்தில் ஜனநாயகத் தன்மையுடையதும் மத்தியப்பட்ட துமாகும். அதாவது ஜனநாயகத்தின் அடிப்படையில் மத்தியப் படுத்தப்ப ட்டதும் மத்தியப்படுத்தப்பட்ட வழிகா ட்டுதலில் உள்ள ஜனநாயகமும் ஆகும்"*

என்றார் மாவோ.

உதாரணமாக கட்சியின் நிர்வாக உறுப்புகளுக்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பது என்பது ஜனநாயக வழியில் இடம் பெறுகின்றது. எனினும் இத்தேர்வுகள் தன்னிச்சையாக விரும்பிய எவரையும் தேர்தெடுத்தல் என்றில்லாமல் மத்திய உறுப்புக்களின் வழிகாட்டலின் கீழ் நன்கு பரிசீலிக்கப்பட்டு முறைப்ப டுத்தப் பட்ட வேட்பாளர் பட்டியலின் அடிப்படையில் திட்டமிட்ட ரீதியில் இடம் பெறுகின்றன. அதே போன்று சிறுபான்மை பெரும்பான்மைக்குக் கட்டுப்பட வேண்டும். என்பது மத்தியத்துவம் சார்ந்த ஒரு நடைமுறையாகும். எனினும் இத்தகைய கட்டுப்பாடு என்பது வெறுமனே அதிகார த்தின் வெளிப் பாடாக கீழ்ப்படிவின் அடையாளமாக இல்லாமல் சுதந்திரமா னதும் ஜனநாயக பூர்வமானதுமான விவாதங்கள் மற்றும் கருத்துப் பரிமாறல் களின் விளைவாக ஏற்படுகின்ற ஒரு பொது இணக்கப்பாடாக அமைகின்றது. இவ்வாறு கட்சியின் சகல அம்சங்களிலும் ஜனநாய கமும் மத்தியத்துவமும் ஒன்றிணைக்கப் பட்டதாகவும் ஒன்றுடனொன்று ஊடுருவி இருப்பதாகவும் அமைகின்றன.

மத்தியப்படுத்தல் என்பது, ஒரு புறம் அதிகாரம் மையப்படுத்துதலையும் மறு புறம் கருத்துக்கள் மையப்படுத்துவ தையும் குறிக்கிறது. ஒரு புரட்சிகர கட்சியைப் பொறுத்தவரை அதிகாரம் மையப்படுவது என்பது அக்கட்சியின்



படிப்பகம்

www.padippakam.com

இருப்பையும் அது தனது இலக்கில் தொடர்ச்சியாக முன்னேறு வதையும் உத்தரவாதப்படுத்துகின்றது. ஏனெனில் மிகவும் மையப்படுத்தப்பட்டதாகவும் நவீன ஆயுதங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்ற அரசுக்கு எதிராக போராட வேண்டியுள்ள ஒரு புரட்சிகரக் கட்சிக்கு ஜனநாயக வழியில் மையப்படுத்தப்பட்ட அதிகார மையங்கள் காணப்படுவதே பலமிக்க ஆயுதமாக அமைகின்றது. இத்தகைய அதிகார மையங்களைக் கொண்டிருப்பதன் மூலமாகவே ஒரு புரட்சிகரக் கட்சி தனது பணிகளைத் திட்டமிடுவதும், கட்சித் தீர்மானங்களை நிபந்தனையற்ற முறையில் நிறைவேற்றுவதும், தன்னிடமுள்ள வளங்களை தேவைக்கேற்பவும் உரிய முறையிலும் பகிர்ந்து பயன்படுத்துவதும், சூழ்நிலைக்கு ஏற்ப தனது அணிகளை மீள ஒழுங்குபடுத்துவதும், பிரதான இலக்கு நோக்கி தனது ஆற்றலை தொடர்ச்சியாகக் குவிப்பதும் சாத்தியமாகின்றன.

இவ்வாறு அதிகாரம் மையப்படுவது என்பது தனிநபர்களின் விருப்பத்தின் படியோ அல்லது விரல்விட்டு எண்ணக் கூடிய சிலரது கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கின்ற தொழில்துறை அதிகாரத்துவமாகவோ அமையக் கூடாது. மாறாக பெரும்பான்மை கட்சி உறுப்பினர்களின் விருப்பத்துடன், அவர்களின் அங்கீகாரத்துடன் ஜனநாயக வழியில் மையப்படுத்தப்பட்டதாக அமைய வேண்டும். இவ்வாறு அமைவதற்கு நடைமுறையில், மையப்படுத்தப்பட்ட அதிகாரம் திறன்மிக்க கருவியாக பயன்படுத்தப்படுவது அவசியம்.

லெனின் கூறினார்.

*'மத்தியத்துவம் ஏட்டளவில் மட்டுமல்லாமல் உண்மையில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படுவதாக அமைய வேண்டும். இவ்வாறு அமைவது என்பது மத்தியத்துவத்தின் மூலம் உருவாகின்ற அதிகாரமானது பொது நடவடிக்கைகளிலும் போராட்டத்திலும் அடிப்படையிலேயே திறனுள்ள கருவியாக அமைவதை பெரும்பான்மை உணரும் போது தான் சாத்தியமாகும்.'*

மறுபுறம் மத்தியத்துவம் என்பது கருத்துக்கள் மையப்படுவதைக் குறிக்கின்றது. உண்மையிலேயே பெரும்பான்மையோரின் விருப்பத்திற்கமைய கருத்துக்கள் மையப்பட வேண்டுமாயின், கட்சிக்குள் விரிவான ஜனநாயக சூழல் நிலவுவது அவசியம். எந்தளவுக்கு சுதந்திரமாகவும் விரிவான முறையிலும் விவாதங்களும், கருத்துப் பரிமாறல்களும் இடம்பெறுகின்றனவோ அந்தளவுக்கு மையப்படுத்தப்படுகின்ற கருத்துக்களும் முடிவுகளும் பெரும்பான்மையோரின் விருப்பத்தைத் தாங்கியனவாக விளங்க முடிகின்றது, அந்தளவுக்கு இவை செயல்வடிவம் பெறுவதும் சாத்தியமாகின்றது. ஏனெனில் ஜனநாயகம் என்பது வெறுமனே கருத்துக்கள் வெளிப்படுத்துவதை மட்டும் குறிக்கவில்லை, கூடவே பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்கள்/முடிவுகள் செயல்வடிவம் பெறுவதையும் குறிக்கின்றது. இவ்வாறு முடிவுகள் செயற்படுத்தப்படுவதற்கு கண்டிப்பான மத்தியத்துவம் அவசியமாகின்றது.

லெனின் எழுதினார்:

*'ஜனநாயக மத்தியத்துவம் என்பதை விவாதச் சுதந்திரம் விமர்சனச் சுதந்திரம் செயலொற்றுமை என்று வரையறுத்துக் கூறியுள்ளோம். இத்தகைய கட்டுப்பாடு தான் வளர்ச்சியடைந்த வர்க்கத்தின் ஜனநாயக கட்சியின் மதிப்பிற்குகந்தது.... அமைப்பு என்பது செயலொற்றுமை, நடைமுறைக் காரியங்களில் ஒற்றுமை... எனவே விவாதிப்பதற்கும் விமர்சிப்பதற்கு " " சுதந்திரம் இல்லாத செயலொற்றுமை என்பதை பாட்டாளி வர்க்கம் ஏற்றுக் கொள்வதில்லை.'*



படிப்பகம்

www.padippakam.com

அதாவது கொள்கை ரீதியாக ஒரு குறிப்பிட்ட விடயத்தை தீர்மானிப்பதற்கு முன்பு அதற்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ விவாதிப்பதற்கும் கிளர்ச்சி செய்வதற்கும் அனைவர்க்கும் பூரண உரிமையுண்டு. இந்த நடைமுறை ஜனநாயக வழிபட்டது. எனினும் அமைப்பு ரீதியாக, இவ்விடயம் தொடர்பாக ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்ட பின்பு அதற்கு மேலும் விவாதங்களைத் தொடருவது என்பது, முடிவுகளைச் செயற்படுத்துகின்ற ஊழியர்களின் உணர்வுத் தரத்தை பாதிக்கும் என்பதோடு, இதன் விளைவாக கட்சியின் முழுச் செயற்பாட்டையும் பாதிப்பதாக அமைந்து விடும். இதன் காரணமாக மேற்கொண்டு அவ்விடயம் தொடர்பாக விவாதிக்கும் உரிமை மறுக்கப்படுகின்றது. இது மத்தியத்துவத்தைச் சார்ந்தது. இவ்வாறு செய்யாவிட்டால் புரட்சிகர அமைப்பானது வெறுமனே விவாத மேடையாக மாற்றப்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுவிடும்.

*'ஒரு வேலை நிறுத்தம் பற்றி மையத்தால் ஒரு முடிவு எடுக்கப்படுவதற்கு முன்பு வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் கிளர்ச்சி செய்வது அனுமதிக்கத்தக்கது என்பதையும், ஆனால் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக ஒரு முடிவு எடுக்கப்பட்டதற்குப் பின்பு வேலை நிறுத்தத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்வது என்பது வேலை நிறுத்தத்தை உடைப்பது தான் என்பதையும் புரிந்து கொள்வது அவ்வளவு கடினமானதா?'*

என்றார் லெனின்.

பொதுவாக ஒரு புரட்சிகர கட்சியில் ஜனநாயகம் சார்ந்தவையும், மத்தியத்துவம் சார்ந்தவையுமான விடயங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அங்கத்தவர்கள் அனைவரையும் பாதிக்கக்கூடிய கொள்கை சார்ந்த விடயங்கள் (திட்டம், மூலோபாயம், தந்திரோபாயம்,...) அமைப்பு விதிகள் தலைமை அங்கத்தவர்கள் போன்றவற்றைத் தீர்மானிப்பதில் ஜனநாயகமும், முடிவு செய்யப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதில் மத்தியத்துவமும் வெளிப் படுகின்றன, மேலும் அமைப்பு ரீதியான விவாதங்களில் பங்கு கொள்ளவும், தலைமை உறுப்பினர்களைத் தேர்தெடுக்கவும்/தலைமை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கபடவும் உள்ள உரிமை, தலைமை அங்கத்தினர்களுக்குள்ள பதில் சொல்லும் பொறுப்பு.. என்பவை ஜனநாயகம் சார்ந்த அம்சங்களாகும். மறுபுறத்தில் சிறுபான்மை. பெரும்பான்மைக்கும், கீழமைப்புகள் மேலமைப்புக்கும், ஏனைய குழுக்கள் மத்திய குழுவுக்கும், உறுப்பினர்கள் அனைவரும் கட்சிக்கும் கட்டுப்பட வேண்டும் என்பது மத்தியத்துவம் சார்ந்த அம்சங்களாகும்.

ஒரு புரட்சிகர கட்சியின் அமைப்புக் கொள்கையாக விளங்குகின்ற ஜனநாயக மத்தியத்துவம் பற்றி, கட்சி உறுப்பினர்கள் தெளிவான புரிதலைக் கொண்டிருப்பது அவசியம். ஏனெனில் ஜனநாயக மத்தியத்துவம் என்பது முதலாளித்துவ ஜனநாயகம் மற்றும் மத்தியத்துவமாக கருதப்படக் கூடிய சாத்தியம் எப்போதும் நிலவுகிறது. முதலாளித்துவ சூழலில் இருமைவாதம் (அதாவது தனித்தனியாகப் பிரிந்திருப்பது) வளர்ச்சியுற்று, பொது முயற்சியுடைய உயிரோட்டமான அமைப்புக்குப் பதிலாக, பயனற்ற, பெயரளவிலான ஜனநாயகத்தை வைப்பதும், சமூகத்தை ஊக்கமான நிர்வாகிகள், பயனற்ற மக்கள் என்று பிளவுபடுத்தி, அதிகாரத்தை ஒரு சிலரிடம் குவிப்பதும் வியாபித்திருக்கின்றது. இதற்கு மாறாக, புரட்சிகர கட்சியில் பின்பற்றப்படுகின்ற "ஜனநாயக மத்தியத்துவமானது பாட்டாளி வர்க்க ஜனநாயகம் மற்றும் மத்தியத்துவம் என்பவற்றின் உருக்கு வார்ப்படமாக, உண்மையான ஒன்றிணைப்பாக இருக்கின்றது." (லெனின்). இது

www.padippakam.com

கீழிருந்து மேல்வரை உறுப்பினர்கள் சுயமாகவும், ஊக்கத்துடனும் செயற்படக் கூடிய உயிரோட்டமான சூழலை ஏற்படுத்துவதையும், அதிகாரமானது அனைவரின் ஒப்புதலுடன், பொதுவான இலக்கை அடைந்து கொள்வதற்காக மையப்படுவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. இத்தகைய நிலைமையானது, கட்சி நிறுவனம் முழுவதன் இடையறாத பொதுநடவடிக்கையை, இடையறாத பொதுப் போராட்டத்தை அடித்தளமாகக் கொண்டே சாதிக்கப்பட முடியும் கட்சிக்குள்ளே தலைமை நிறுவனங்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இடையிலேயும், அதே போன்று கட்சிக்கு வெளியிள்ள திரளான மக்களுக்கும் கட்சிக்கும் இடையிலும் உயிரோட்டமான இணைப்புகளையும், பரஸ்பர உறவுகளையும் வளர்ப்பதும், நிலைநிறுத்துவதும் இதற்கான மிக அவசியமான முன்நிபந்தனைகள் ஆகும்.

ஜனநாயக மத்தியத்துவத்தின் மூலமாக கட்சியின் கொள்கையிலும் நடைமுறைகளிலும் உறுப்பினர்களின் கூட்டு அனுபவத்தையும், அறிவையும் பெற முடிவதோடு, பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்திற்கமைய கட்சி இயங்குவதும் சாத்தியமாகின்றது. மேலும் கட்சி நடவடிக்கைகள் திட்டமிட்ட ரீதியிலும் போதிய தயாரிப்புகளுடனும் மேற்கொள்ளப்பட முடிகின்றது. ஒரு புரட்சிகர அமைப்பில், ஜனநாயகபூர்வமான நடவடிக்கைகள், அவற்றின் உச்சப் பயன்பாட்டை அடைவதை உத்தரவாதப் படுத்துகின்ற விதத்தில் மாநாடுகள், கொங்கிரஸ்... போன்றவை திட்டவட்டமான தயாரிப்பு மற்றும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் நடத்தப்படுகினறன. விவாதங்கள் போதிய தயாரிப்புகளுடன் இடம்பெறுகின்றன. தலைமை உறுப்புகளுக்கான தேர்தல்கள் முன்னரே தயாரிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. இவ்வாறு ஜனநாயக மத்தியத்துவத்தின் மூலமாக, கட்சியின் அகவாழ்க்கையானது திட்டமிட்ட ரீதியிலும் முறையாகவும் முன்னெடுக்கப் படுகின்றன. இதே போன்று கட்சிக்கு வெளியே, அரசுக்கு எதிரான நடவடிக்கைகளும் திட்டமிட்ட ரீதியில், போதிய முன்தயாரிப்புகளுடன் வெற்றி கரமாக மேற்கொள்ளப்படுவதை ஜனநாயக மத்தியத்துவம் உத்தரவாதப் படுத்துகின்றது.

லெனின் கூறினார்:

*"சகல புரட்சிகர அசுத்தான்றுதல்களையும், போராட்டங்களையும் திருப்தி செய்கின்ற, சமூக-ஜனநாயகக் கொள்கை களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்கின்ற ஒரு மத்தியப்படுத்தப்பட்ட, தீவிர (militant) அமைப்பினால் மட்டுமே, தவறான தாக்குதல்களை மேற்கொள்வதற்கு எதிராக இயக்கத்தைப் பாதுகாக்கவும், வெற்றியை உறுதிப்படுத்தக் கூடிய தாக்குதல்களை தயார் செய்யவும் முடியும்."*

ஒரு புரட்சிகரக் கட்சியைப் பொறுத்த வரை சாராம்சத்தில் ஜனநாயக மத்தியத்துவம் என்பது பலமான தலைமை உருவாக்கப் படுவதைக் குறிக்கிறது. ஏனெனில் ஒரு தலைமையின் ஆற்றல் என்பது, அத்தலைமை மீது உறுப்பினர்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையினாலும் அத்தலைமைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தினாலும் தீர்மானிக்கப்படுகின்றது. ஜனநாயக மத்தியத்துவத்தின் காரணமாக, உறுப்பினர்களின் ஆதரவுடன் தலைமை உறுப்பினர்கள் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்படுவதும், அதிகாரம் மையப்படுவதும் சாத்தியமாவதால் பலமான ஆற்றல் மிக்க தலைமை உருவாக முடிகின்றது.

ஜனநாயகமும், மத்தியத்துவமும் இணைக்கப்படுவது என்பது வெறும் எண்ணிக்கை சார்ந்த விடயமல்ல. நடை



படிப்பகம்

www.padippakam.com

முறையில் ஜனநாயகமும் மத்தியத்துவமும் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றது என்பது பெரிதும் குழிநிலையில் தங்கியிருக்கின்றது. ஒரு அமைப்பினுள் விரிவான ஜனநாயகம் நிலவ வேண்டுமாயின் (1) உறுப்பினர்களை பரஸ்பரம் தெரிந்திருத்தல், (2) விரிவான தகவல் மாற்றம் ஆகிய இரண்டு அம்சங்களும் அங்கு காணப்பட வேண்டும். ஆனால் ஒரு அமைப்பு தலைமறைவாக செயற்பட வேண்டிய சூழலில் இவ்விரண்டு அம்சங்களுமே மட்டுப்படுத்தப்படுவதால், இத்தகைய அமைப்பினுள் உணர்ந்தபட்ச மத்தியத்துவம் நிலவுவது தவிர்க்க முடியாததாகின்றது. இத்தகைய நிலையிலும் கூட, அதிகரித்த மத்தியத்துமானது வெறுமனே அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான வாய்ப்பாக இல்லாமல், கட்சியை முன்னோக்கிச் செலுத்துகின்ற, திறன் மிக்க கருவியாக அமைவதை உத்தரவாதப் படுத்தக் கூடிய பொறிமுறைகளை கட்சி கொண்டிருத்தல் வேண்டும்.

## 3. விமர்சனம், சுயவிமர்சனம்

எந்தவொரு விடயத்திலும் உள்ள சரியான மற்றும் தவறான அம்சங்களை விஞ்ஞான பூர்வமான பகுப்பாய்வு செய்வதே விமர்சனம் எனப்படுகிறது. ஒருவர் தன்னைத்தானே இவ்விதம் விமர்சனம் செய்வாராயின் அது சுயவிமர்சனம் எனப்படுகின்றது.

ஒரு தாபனத்திடம் அல்லது தனி நபர்களிடம் காணப்படுகின்ற தத்துவ கோட்பாடு, அரசியல் மற்றும் தாபன ரீதியான தவறுகளே தவறான கருத்துக்களுக்கும் தவறான நடைமுறைகளுக்கும் காரணங்களாக அமைவதால் விமர்சனத்தின் முதன்மையான அக்கறையானது எப்போதும் தத்துவ, கோட்பாடு, அரசியல் மற்றும் தாபன ரீதியான தவறுகளை இனங்காண்பதாகவே இருக்க வேண்டும்.

*"விமர்சனத்தின் பிரதான கடமை அரசியல் தாபன தவறுகளைச் சுட்டிக் காட்டுவதே"*

என்றார் மாவோ.

இதன் பின்பே நபர்கள் பற்றிய பிரச்சினைக்கு வர வேண்டும். நபர்கள் பற்றிய பிரச்சினையிலும் கூட சம்மந்தப்பட்ட நபர்களின் தத்துவ, கோட்பாடு அரசியல் மற்றும் தாபன ரீதியான தவறுகளை இனங்கண்ட பின்பே தனி நபர்களது நடத்தைகள், பலவீனங்கள் போன்ற அம்சங்களை தொடவேண்டும். இதற்கு மாறான முறையில் அணுக முற்பட்டால், உதாரணமாக ஒருவரது தவறான உலகக் கண்ணோட்டத்திலிருந்து பிறக்கும் தவறுகளை உரிய முறையில் இனங்காணாது அத்தவறுகளை அவரின் தனிப்பட்ட பலவீனங்களாக எடுத்துக்கொண்டு எத்தனை தான் விமர்சித்தாலும் அத்தவறுகளிலிருந்து அவரை திருத்திவிட முடியாது. அமைப்பு என்பதை நபர்களின் தொகுப்பாக இல்லாமல், அரசியல் உறவுகளின் தொகுப்பாக புரிந்து கொள்வோமானால் நபர்களை இலக்காகக் கொள்வதை விட சம்பந்தப்பட்ட தவறுகளுக்கு காரணமாக அமைகின்ற அரசியல் சார்ந்த பிரச்சினைகளை முதன்மையாக கருத்திற் கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளலாம். எமது விமர்சனத்தின் இலக்கானது தனிநபர்கள் அல்ல. மாறாக தவறான அரசியலே நோயைக் குணப்படுத்தி நோயாளியைக் காப்பதே எமது விமர்சனத்தின் ஒரே நோக்கமாக இருக்க வேண்டும்.

அடுத்தவர்களின் தவறுகளை மனம் போன போக்கிலெல்லாம் விமர்சிக்க முனையாது அவர்களின் இடத்தில் தான் இருந்திருந்தால் எப்படி நடந்திருப்பார் என்பதையும் ஒருவர் கருதிப் பார்ப்பது அவசியம் இவ்வகையில் விமர்சனங்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் முன்வைக்கப் பட வேண்டும்.

மாவோ கூறினார்.

*"உட்கட்சி விமர்சனத்தில் அகநிலை வாதம் மனம்போன போக்கு,*



படிப்பகம்

www.padippakam.com

*விமர்சனத்தை இழிவுபடுத்துதல் ஆகியவற்றுக்கு எதிராக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கருத்துக்கள் எப்போதும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். விமர்சனம் அரசியல் அம்சத்தையே வலியுறுத்த வேண்டும்."*

விமர்சனத்தின் நோக்கம் தவறுகளைக் களைவது மட்டுமன்றி, சரியான அம்சங்களை முன்கொண்டுவருவதாகவும் அதன் மூலம் கட்சியின் ஒற்றுமையையும் அதன் போராட்ட ஆற்றலையும் பெருக்குவதாகவும் இருக்க வேண்டும்.

மாவோ எழுதினார்..

*"உட்கட்சி விமர்சனம் என்பது கட்சி அமைப்பை பலப்படுத்தி அதன் போராட்ட ஆற்றலைப் பெருக்கும் ஓர் ஆயுதமாகும்."*

*"விமர்சனத்தின் நோக்கம் வர்க்கப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்காக கட்சியின் போராட்ட ஆற்றலை பெருக்குவதே என்றும் அதைத் தனிநபர்களின் தாக்குதலுக்கான ஒரு கருவியாக உபயோகிக்கக் கூடாது என்றும் கட்சி உறுப்பினர்களுக்கு விளக்குவது அவசியம்."*

ஒரு தவறானது மிகவும் சிறிதாக இருக்கும் போதே அதனை சுட்டிக்காட்டி விமர்சிப்பதன் மூலம், சம்பந்தப்பட்டவர் அத்தவறில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வது ஒப்பீட்டளவில் சுலபமானதாகும். இதற்கு மாறாக, ஆரம்பத்திலேயே தவறுகளைச் சுட்டிக் காட்டாமல் இருந்து, அத்தவறுகள் பெருகி, ஒரு போக்காக உருவான பின்பு, அவற்றைப் பட்டியலிட்டு விமர்சிக்கும் போது, சம்பந்தப்பட்டவர் திக்குமுக்காகும் நிலை உருவாகும். மேலும் தவறுகள் ஒரு போக்காக உருவெடுத்த பின்பு, அவற்றிலிருந்து தம்மை முறித்துக் கொள்வதும் சம்பந்தப்பட்டவர்களுக்கு இலகுவாக இருக்கமாட்டாது.

*"விமர்சனத்தைப் பொறுத்த வரையில், அது சரியான சமயத்தில் செய்யப்பட்ட வேண்டும். சம்பவம் நிகழ்ந்த பின்னர் மாத்திரம் விமர்சனம் செய்யாத பழக்கமாகிவிடக் கூடாது."*

என்றார் மாவோ.

விமர்சனங்களிலேயே சிறந்த விமர்சனம் சுயவிமர்சனம் தான். அடுத்தவர்களின் தவறுகளை விமர்சிப்பதற்கு முன்பு ஒருவர் தனது தவறுகளை சுயவிமர்சனம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாக அடுத்தவரை விமர்சிப்பதற்கான தார்மீகப் பலம் ஒருவருக்குக் கிடைக்கிறது. அத்தோடு ஏனையோரது சுயவிமர்சனத்திற்கு ஒரு முன்னுதாரணமாகவும் இவர் திகழ முடியும். மேலும், தன்னைத் தானே எப்போதும் சுயவிமர்சனம் செய்து கொள்ளத் தயாராக இருக்கும் ஒருவரது விமர்சனத்தை அவரால் விமர்சிக்கப்படுபவர்கள் இலகுவில் தட்டிக் கழிப்பதோ, அல்லது அந்த விமர்சனங்களுக்கு வேறு நோக்கங்களைக் கற்பிப்பதோ சாத்தியப்பட மாட்டாது. எனவே விமர்சனங்களைக் கண்டு அஞ்சாமலிருப்பது எப்போதும் சுயவிமர்சனம் செய்யத் தயாராக இருப்பது போன்றவை புரட்சிகர அற நெறிகளில் ஒன்றாக இருக்க வேண்டும்.

மாவோ கூறினார்.

*"உணர்வுபூர்வமாக சுயவிமர்சனம் செய்துகொள்வது நமது கட்சியை இதர அரசியல் கட்சிகள் எல்லாவற்றிலிருந்தும் பிரித்துக் காட்டுகின்ற இன்னொரு தெளிவான எல்லைக்கோடாகும். எமது தோழர்களின் உள்ளங்களிலும் நமது கட்சியின் வேலையிலும் கூட தூசி படியலாம். நமது வேலையை அடிக்கடி பரிசீலிப்பது, அதனூடாக ஜனநாயக வேலைமுறை ஒன்றை விருத்தி செய்வது விமர்சனத்துக்கோ சுயவிமர்சனத்துக்கோ அஞ்சாமல் இருப்பது... நமது தோழர்களின்*

படிப்பகம்

www.padippakam.com

*சிந்தனைகளும் நமது கட்சியில் உடலும் அரசியல் தூசிகள் கிருமிகள் எவற்றாலும் பாதிக்கப்படாமல் தடுக்கின்ற பயனுள்ள ஒரேயொரு வழி இதுவேயாகும்.'*

கட்சி உறுப்பினர்கள் தமது தவறுகள் குறித்து சுய விமர்சனம் செய்வது போன்று புரட்சிகர கட்சியும் தனது தவறுகள் குறித்து மக்கள் மத்தியில் சுய விமர்சனம் செய்து கொள்வது அவசியம். இதன் மூலம் கட்சிக்கும் மக்களுக்கும் இடையிலான பிணைப்புகள் மேலும் ஆழமாகி, வலுவடைவதும் சாத்தியமாகின்றது.

லெனின் கூறியதாவது..

*'எமது அரசியல் கட்சி தனது சொந்த தவறுகள் மீது மேற்கொள்ளும் நிலைபாடே அது எவ்வளவு நேர்மையான கட்சி அது தனது வர்க்கத்துக்கும் உழைக்கும் மக்களுக்கும் தனக்குள்ள கடமைகளை நடைமுறையில் எப்படி நிறைவேற்று கின்றது என்பதை மதிப்பிடுவதற்கான மிக முக்கிய மிக நிச்சயமான வழிகளில் ஒன்றாகும். ஒரு தவறை வெளிப்படையாக ஒப்புக்கொள்வது அதைக் செய்வதற்கு காரணமாக இருந்த நிலமைகளை பகுப்பாய்வு செய்வது அதைச் சரி செய்வதற்கான வழிமுறைகளை தீர ஆராய்வது இவை எல்லாம் ஒரு தீவிரமான (mili-tant) கட்சிக்குரிய அடையாளமாகும். தனது கடமைகளை அது இவ்வாறு தான் நிறைவேற்ற வேண்டும்.'*

இவ்வகையில் விமர்சனம் சுயவிமர்சனம் என்பவை புரட்சிகர கட்சியும் அதன் உறுப்பினர்களும் தமது தவறுகளை உரிய நேரத்தை களைந்து, தமது இலக்கில் தொடர்ச்சியாக முன்னேறுவதை உத்தரவாதப்படுத்துகின்ற நிச்சயமான தாபன நடைமுறைகளாக அமைகின்றன.

## 4. உட்கட்சிப் போராட்டம்

ஒரு புரட்சிகர கட்சிக்குள் கொள்கை (principle) மற்றும் சித்தாந்த (ideology) ரீதியான முரண்பாடுகள் தோன்றும் போது அவற்றை தீர்ப்பதற்கு கையாளப்படுகின்ற ஒரு வழிமுறையாக உட்கட்சிப் போராட்டம் அமைகின்றது. ஒரு கட்சிக்குள் கொள்கை ரீதியாக அல்லது சித்தாந்த ரீதியாக முரண்பாடுகள் தோன்றுகின்ற போது கட்சி உறுப்பினர்களிடையே சித்தாந்த ரீதியிலான ஒற்றுமை சிதைவதோடு அவர்களுக்கிடையே அமைப்பு மற்றும் செயல் ரீதியான ஒற்றுமையிலும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இந்நிலையில் இத்தகைய முரண்பாடுகளைத் தீர்த்து கட்சி உறுப்பினர்களிடையே சித்தாந்த அமைப்பு மற்றும் செயல் ரீதியிலான ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு உட்கட்சிப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

*'இவ்விதமான உட்கட்சிப் போராட்டம் முற்றிலும் அவசியமானதும் தவிர்க்க முடியாததுமாகும்'*

என்றார் லியூஷோசி.

ஒருகட்சியின் உறுப்பினர்களிடையே கொள்கை மற்றும் சித்தாந்த ரீதியான முரண்பாடுகள் மற்றுமன்றி முற்றிலும் நடைமுறைரீதியிலான முரண்பாடுகளும் தோன்றுகின்றன. எனினும் நடைமுறை சார்ந்த முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு உட்கட்சிப் போராட்டம் முன்னெடுக்கப் படுவதில்லை. பதிலாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுடன் விரிவாக கலந்துரையாடுவதன் மூலம் இம்முரண்பாடுகள் தீர்க்கப்படலாம். ஒரு புரட்சிகர கட்சிக்குள் நடைமுறை சார்ந்த முரண்பாடுகள் அடிக்கடி தோன்றுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும் ஏனெனில்

*'ஸ்தூலமான நடைமுறைப் பிரச்சினைகளுக்கு சாத்தியமான பல தீர்வுகள் எப்போதும் இருக்கும் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பல சாத்தியமான பாதைகள் எப்போதும் இருக்கும். இவ்வாறு கொள்கை சாராத முற்றிலும்*



படிப்பகம்

*ஸ்தூலமான நடைமுறை சார்ந்த இத்தகைய விடயங்களில் வேறுபட்ட பார்வைகள் தோன்றும் போது ஏனையோரின் பார்வைகளுடன் எவ்வாறு சமரசம் செய்வது ஒத்துப் போவது மற்றும் ஏற்றுக்கொள்வது என்பதை நாமறிந்து தெரிந்து கொள்ள வேண்டும்.'*

லியூஷோசி.

எனினும் முற்றிலும் கொள்கை சித்தாந்த ரீதியிலான முரண்பாடுகளை தீர்ப்பதற்கு விமர்சனம், சமரசம், மற்றும் உடன்பாடு காணுகின்ற வழிமுறைகளை கட்சி உறுப்பினர்கள் பின்பற்றக் கூடாது. இவற்றைத் தீர்ப்பதற்கு உட்கட்சிப் போராட்டம் அவசியமாகின்றது.

*'...கட்சித் தலைவர்களுக்கு மார்க்ஸ் எழுதினார் நீங்கள் ஐக்கியப் பட வேண்டுமாயின், இயக்கத்தின் நடைமுறை குறிக்கோள்களை திருப்தி செய்யக்கூடிய உடன்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள். ஆனால், கொள்கை சம்பந்தமாக எவ்வித பேரம் பேசலையும் அனுமதிக்க வேண்டாம். கோட்பாட்டு ரீதியான 'உடன்பாடுகளை' (concessions) மேற்கொள்ள வேண்டாம்...'*

லெனின்.

உதாரணமாக பெண்ணடிமைத்தனத் தின் சின்னமாக அமைகின்ற அனைத்து நடைமுறைகளையும் கட்சி உறுப்பினர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்ட பின்னர் குறிப்பிட்ட சூழலில் ஒரு உறுப்பினர் தாலி கட்டிக்கட்டப்பட வேண்டிய நிலையை எதிர்கொள்வது ஒரு நடைமுறை சார்ந்த விடயமாகும் இதைத் தீர்ப்பதற்கு உட்கட்சிப் போராட்டம் அவசியமில்லை. ஆனால் கட்சி உறுப்பினர்கள் தாலி கட்டுவதை-கட்டப்படுவதை அனுமதிக்க வேண்டுமென்று கட்சியிலுள்ள ஒரு பிரிவினர் கோரும் போது அது கொள்கை சார்ந்த பிரச்சினையாகி விடுகின்றது. இதன் பின்னர் இப்பிரச்சி னையைத் தீர்ப்பதற்கு உட்கட்சிப் போராட்டம் அவசியமாகின்றது.

இவ்வாறு கொள்கை மற்றும் சித்தா ந்த ரீதியாக கட்சிக்குள் ஏற்படுகின்ற முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக உரிய முறையில் முன்னெடுக்கப்படுகின்ற உட்கட்சிப் போராட்டங்கள் உண்மையில் அக்கட்சி இயங்குவதற்கான அக விசைகளாக அமைகின்றன. எந்தவொரு பொருளிலும் முரண்பட்ட கூறுகள் காணப்படுவதும் இத்தகைய முரண்பட்ட கூறுகளின் போராட்டத்தினூடாகத்தான் அப்பொருள் இயங்குகின்றது என்பது ஒரு புரட்சிகரக் கட்சியைப் பொறுத்தவரை கூட உண்மையே. இவ்வகையில் கட்சிக்குள் முரண்பாடுகள் எழுவது என்பது இயல்பானதே. ஆனால் இந்த முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஆரோக்கியமான வழிமுறைகள் எம்மிடம் உள்ளனவா என்பது தான் உண்மையில் பிரச்சினைக்குரிய விடயமாகின்றது.

லெனின் கூறினார்.

*'வேறுபட்ட கருத்துகளுக்கிடையில், சாயல்களுக்கிடையில் (shades) போராட்டம் கட்சிக்குள் தோன்றுவது தவிர்க்க முடியாதது. அத்தியவசியமானது. அது அரசியல் அராஜகத் துக்கும் பிளவுக்கும் இட்டுச் செல்லாத அளவுக்கு மட்டும் நல்லது.'*

*'கட்சிக்குள் எவ்வித முரண்பாடு களும் இல்லாவிட்டால் அவற்றைத் தீர்ப்பதற்கான போராட்டங்கள் இல்லாவிட்டால் கட்சியின் வாழ்வு நின்று விடும்'*

என்றார் மாவோ.

இவ்வகையில் கட்சிக்குள் ஏற்படுகி ன்ற சித்தாந்த மற்றும் கொள்கை சார்ந்த முரண்பாடுகள் உட்கட்சிப்போராட்டங்கள் மூலமாக பொருத்தமான முறையில் தீர்க்கப்படும் போது அதனால் கட்சியின் ஐக்கியம் மேலும் பலப்படுகிறது.

மாவோ எழுதினார்...

*'நாம் ஐக்கமான சித்தாந்த போராட்ட த்திற்காக நிற்கிறோம் காரணம் அது நமது போராட்டத் திற்கு உதவியாக கட்சிக்குள்ளும் புரட்சித் தாபனங்களுக்குள்ளும் ஐக்கியத்தை உருவாக்குகின்ற ஆயுதமாக விளங்குகின்றது.'*

எனினும் மறு புறத்தில், தவறாக முன்னெடுக்கப்படுகின்ற உட்கட்சிப் போராட்டத்தினால் ஏற்படக் கூடிய விளைவுகள் ஒரு கட்சியின் ஐக்கியத்தையும் அதன் தொடர்ச்சியான இயக்கத்தையும் பாதிப்பனவாக அமைந்து விடும். இத்தகைய நிலைமை தோன்றுவதைத் தவிர்க்க வேண்டுமாயின் உட்கட்சிப் போராட்டமானது மிகுந்த கவனத்தோடும் பொறுப்புணர்வோடும் முன்னெடுக்கப் படவேண்டும்.

லியூஷோசி கூறினார்..

*'எங்களுக்கு முன்னால் உள்ள கேள்வி மிகத் தெளிவானது நாம் உட்கட்சிப் போராட்டத்தை சரியாகவும் உரிய முறையிலும் நடத்துவது எப்படி?*

*'...முதலாவதாக உட்கட்சிப் போராட்டமானது கட்சியின் மீதும் புரட்சியின் மீதும் மிக உயர்ந்த பொறுப்புணர்வைக் கோருகின்றது.*

*இரண்டாவதாக உட்கட்சிப் போராட்டமானது, அடிப்படையில் எதிரெதிரான சித்தாந்தங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இடையிலான போராட்டமாக இருப்பதால் சித்தாந்த மற்றும் கொள்கை சார்ந்த வேறுபாடுகள் தொடர்பாக ஒரு தெளிவான கோட்டை வரைந்து கொள்வது முற்றிலும் அவசியமானது எனினும் அமைப்பு ரீதியாக போராட்ட வழியிலும் பேசுகின்ற மற்றும் விமர்சிக்கின்ற தன்மையிலும் உறுப்பினர்கள் விரோத உணர்வற்றவர்களாகவும் விடயங்கள் சம்மந்தமாக விவாதிக்கின்ற போது அல்லது கலந்துரையாடுகின்ற போது அமைதியான முறையிலும் நடந்துகொள்ளவேண்டும். எங்களுடைய போதனையூட்டும் பணிக்கூடாக சித்தாந்த மற்றும் கொள்கை ரீதியான ஒற்றுமையை அடைந்து கொள்வதற்காக முடிந்த அளவுக்கு நேர்மையாகவும் வெளிப்படையாகவும் இருக்க வேண்டும்.*

*மூன்றாவதாக, கட்சி அமைப்புகளுக்கு எதிராக அல்லது தோழர்களுக்கும் அவர்களது பணிகளுக்கும் எதிராக முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் பொருத்தமானதாகவும் நன்கு அளவிடப் பட்டதாகவும் (measured) இருக்க வேண்டும்.*

*நான்காவதாக...முதலில் விடயத்தையும் பின்னரே நபரையும் அணுக வேண்டும்.*

*ஐந்தாவதாக, விமர்சிக்கப்பட்ட அல்லது தண்டிக்கப்பட்ட தோழர்கள் முறையீடு செய்வதற்கான சகல சந்தர்ப்பங்களும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்...'*

இவ்வாறு முன்னெடுக்கப்படுகின்ற உட்கட்சிப்போராட்டங்கள் மூலமா கட்சிக்குள் சித்தாந்த ரீதியா கொள்கை ரீதியான ஐக்கியம் உயர்ந் மட்டத்தில் பேணப்படுவது சாத்தியமா கின்றது.

## 5. சீர்செய் இயக்கம்.

சாதாரணமாக ஒரு புரட்சிகர அமைப்பினுள் அங்கொன்றும் இங்கொன் றுமாக தவறுகள் ஏற்படுகின்ற போது அவற்றை அந்தந்த மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற விமர்சன சுய விமர்சனத்தின் மூலம் சீர்செய்து விடலாம் ஆனால் குறிப்பிட்ட சில நிலைமைகளில் தவறான போக்குகள் அமைப்பு முழுவதும் பரவி விடுகின்றன. இதற்குமேல் இவற்றை அந்தந்த மட்டங்களில் நடைபெறும் விமர்சன சுயவிமர்சனங்களினால் மட்டும் களைந்துவிட முடியாது

தவறுகளைக் களைவதற்கு அமைப்பு முழுவதுமே திட்டமிட்ட ரீதியில், ஒரு முழுமையான அளவில் ஒரு இயக்கத்தை நடத்தியாக வேண்டும். இத்தகைய இயக்கமே சீர்செய் இயக்கமாக அமைகின்றது.

சீர்செய் இயக்கத்தின் நோக்கமானது, குறிப்பிட்ட தவறுகளுக்கான தத்துவ, கோட்பாடு, அரசியல், தாபன மற்றும் நடை முறை ரீதியான காரணங்களை சரிவர இனங்கண்டு, இத்தகைய தவறான போக்கின்மீது ஒட்டுமொத்தமாக விமர்சனங்களை தொகுப்பதுடன் இத்தகைய போக்குகள் வெவ்வேறு மட்டங்களில் எடுக்கின்ற குறிப்பான வடிவங்களை சரியாக இனங்கண்டு இத்தவறான போக்குகள் மீது ஒட்டுமொத்தமாக ஒரு போரைத் தொடுப்பதும் ஆகும்.

உதாரணமாக, கட்சி உறுப்பினர்களுக்கிடையேயான தாபன உறவுகள் அவற்றின் அரசியல் பணியிலிருந்து விலகி, தனி நபர் உறவுகளாக மாறும் போது கட்சியில் தாராள வாதம் மேலோங்குகிறது. இந்நிலையில் கட்சியானது, புரட்சிகர அரசியல் நிறுவனம் என்ற நிலையிலிருந்து வெறும் நட்புறவுச் சங்கமாக சீரழிந்து விடக்கூடிய அபாயம் தோன்றுகிறது இதற்குமேல் கட்சியின் புரட்சிகர பண்பை மீட்டெடுப்பதற்கு தாராளவாதத்திற்கு எதிராக அமைப்பு முழுவதும் சீர்செய் இயக்கம் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

சீர் செய் இயக்கமானது தலைமை அமைப்புகளின் வழிகாட்டலின் கீழ், அமைப்பு முழுவதும், சகல மட்டங்களிலும் ஒரு நேரத்தில் விரிவான அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும். சீர்செய் இயக்கத்தின் வெற்றிக்கு நேர்மையான விமர்சனமும் சுயமதிப்பீடும் அவசியம். தம்மிடம் காணப்படுகின்ற தவறான போக்குகளை அடையாளம் கண்டு நேர்மையாக அவற்றுடன் கணக்குத் தீர்க்கின்ற தயார் நிலைகளையும், நெஞ்சுறுதியையும் உறுப்பினர்கள் வரித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்ய மறுத்து, தொடர்ந்தும் அதே தவறான போக்குகளைக் கொண்டிருக்கின்ற உறுப்பினர்களுடன் தாபனமானது அமைப்பு ரீதியாக கணக்குத் தீர்த்துக்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

ஒரு புரட்சிகர கட்சியின் வரலாற்றில், சீர்செய் இயக்கமானது, வெவ்வேறு கால கட்டங்களில், வெவ்வேறு தவறான போக்குகளுக்கு எதிராக முன்னெடுக்கப் படக்கூடிய நிலை தோன்றுகிறது உதாரணமாக, அதிகாரத்துவ போக்குக்கு எதிராக, தாராளவாதத்திற்கு எதிராக ஆணாதிக்க சிந்தனை மற்றும் நடைமுறைகளுக்கு எதிராக, விரயம் மற்றும் வீண் செலவுகளுக்கு எதிராக தன்னியல்புவாதம் பொறுப்புத்தி என்பவற்றுக்கு எதிராக என பல்வேறுபட்ட தவறான போக்குகளுக்கு எதிராக சீர்செய் இயக்கம் முன்னெடுக்கப் படுகின்றது. இவ்வாறு ஒரு புரட்சிகர அமைப்பினுள் தோன்றி படிப்படியே ஒரு போக்காக உருவெடுத்து விடுகின்ற தவறுகளுக்கு எதிராக அமைப்பானது ஒட்டுமொத்தமாக தன்னை பரிசீலனை செய்து அத்தவறுகளிலிருந்து தன்னை திருத்திக்கொள்வதே சீர்செய் இயக்கத்தின் ஒரே நோக்கமாகும்.

## ௯. ஊழியர் கொள்கை

ஊழியர்களே ஒரு தாபனத்தின் மிகப் பெரும் சொத்து. தாபனத்தின் சரியான கொள்கைகள் செயல்வடிவம் பெறுவது என்பது முழுக்க முழுக்க ஊழியர்களின் செயல் ஆற்றலிலேயே தங்கியிருக்கிறது. இவ்வகையில், ஊழியர் தொடர்பாக ஒரு தாபனம் கொண்டிருக்கின்ற கொள்கைகளே அத்தாபனத்தின் அச்சாணியாக முதுகெலும்பாக அமைகின்றது.

ஊழியர் கொள்கை என்பது (1) ஒவ்வொரு வேலைக்கும் பொருத்தமான ஊழியர்களைத் தெரிவு செய்து, அவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தல், (2) ஊழியர்களை அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

ரீதியாகவும், செயல்நுட்பங்களிலும், முன்கையெடுப்பு (initiation) மற்றும் தலைமைப் பண்பை பெறுதல் போன்றவற்றிலும் பயிற்றுவித்தல், (3) ஊழியர்களின் ஆற்றல்களை மதிப்பிடவும், அவர்களது நடவடிக்கைகளை தோழமை பூர்வமாக கண்காணிக்கவும், தவறுகளை விமர்சிக்கவும் செய்தல், (4) ஊழியர்களின் ஆற்றல்களை அடையாளம் கண்டு, உயர் பொறுப்புகளுக்கு அவர்களை உயர்த்துதல், (5) கட்சிக் கட்டுப்பாடுகளை தொடர்ச்சியாக மீறுபவர்களுக்கும், கட்சிக்கு விரோதமாகச் செயற்படுபவர்களுக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அத்தகையோரை, கட்சியிலிருந்து களையெடுத்தல்... போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.

ஊழியர் கொள்கையானது முற்றிலும் தாபன உறவை, அரசியல் உறவை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது ஊழியர் கொள்கை என்பது, அரசியல் பிரக்ஞை, தாபன உணர்வு, தோழமை, பரஸ்பர அக்கறை, முன்முயற்சி, பொறுப்புணர்ச்சி போன்றவற்றின் மீது எழுப்பப்பட்டதாக இருக்க வேண்டும். ஊழியர்களின் தனிப்பட்ட பலவீனங்களுக்குப் பதிலாக அவர்களிடம் காணப்படக்கூடிய புரட்சிகர அரசியல் அம்சங்களை முதன்மைப்படுத்துதல் ஒவ்வொருவரிடமும் காணப்படுகின்ற ஆற்றல்களுக்கு அவை எவ்வளவு தான் சிறிதாகத் தோன்றினாலும் சமமான அரசியல் முக்கியத்துவம் வழங்குதல் பலரது சிறிய பங்களிப்புகள் தான் ஒரு முழுமையான பாரிய செயலின் வெற்றியை சாத்தியமாக்குகின்றது என்ற பிரக்ஞையை நிலைநாட்டுதல்... போன்றவை ஊழியர்களிடையே புரட்சிகர தாபன உறவு நிலவுவதற்குரிய வலுவான அடிப்படைகளாக அமைகின்றன.

லெனின் எழுதினார்..

*'நமது பொது இலட்சியப் பணியில் ஒவ்வொரு தனித்தனி 'செயற் கூறும்' எவ்வளவுக்கெவ்வளவு சிறியதாயிருக்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு அப்படிப்பட்ட செயற் கூறுகளை செய்து முடிக்கத் திறமையுள்ள நபர்கள் அதிகமாகக் கிடைப்பார்கள். அவ்வளவுக்கவ்வளவு பொலிசுக்கும் இந்த நுணுக்கப் பிரிவு 'ஊழியர்கள்' அனைவரையும் 'பிடிப்பது' அதிகக் கஷ்டமாயிருக்கும்."*

*'இந்தச் சேவை ஒவ்வொன்றும் தன்னளவில் 'சிறியது' ஆயினும் மொத்தத்தில் பார்க்கையில் விலைமதிக்க முடியாதவை. தொழிற்சாலையிலுள்ள அலுவலகப் பணியாளர்களும் அதிகாரிகளும் மட்டுமல்லாமல், அஞ்சல், ரயில்வே, சுங்கத் துறைகளிலும் பிரபு வம்சத்தினர், பாதிரிமார் இடையேயும் பொலிஸ், அரசவைத் துறைகளிலும் உள்ளிட்ட எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் அலுவலகப் பணியாளர்களும் அதிகாரிகளும் நமக்கு இந்தச் சிறிய சேவைகளை அளிக்க முடியும். அளிப்பார்கள். நம்மிடம் உண்மையான கட்சியிருந்தால் புரட்சியாளர்களைக் கொண்ட உண்மையான செயல்துடிப்புள்ள அமைப்பு இருந்தால் இந்த 'துணையாட்கள்' ஒவ்வொருவரிடமும் தகுதிக்கப்பாற்பட்ட காரியங்களைச் செய்ய கொடுக்கமாட்டோம். நம் 'சட்டவிரோத நிலையின்' மையத்திற்கு எப்போதும் அவர்களைக் கொண்டு வரத் துடிக்க மாட்டோம் மாறாக அவர்களைப் பத்திரமாகக் கவனித்துக்கொள்வோம். குறிப்பாக இப்படிப்பட்ட வேலைகளுக்கென்று நபர்களை பயிற்றுவிக்கவும் செய்வோம். 'குறுகிய கால' புரட்சியாளர்களாக இருப்பதைவிட, ஏதாவது அதிகாரபூர்வமான பதவியை வகுத்துவரும் நிலையில் பல மாணவர்கள் 'உதவியாளர்கள்' கட்சிக்கு எவ்வளவோ அதிகமாக சேவை செய்யக் கூடியவர்களாக*



படிப்பகம்

www.padippakam.com

இருப்பார்கள்."

"புரட்சிப்பணியின் பல்வேறு வேலைக ளுக்கு பலவிதமான திறமைகள் தேவை. சில சமயங்களில் தாபன அமைப்பாளனாக வேலை செய்ய முடியாத திறமையற்ற ஒருவர் பிரச்சார கிளர்ச்சியாளராக இருப்பார். அல்லது இரகசிய வேலைக் குரிய கடுமையான மனோதிடம் இல்லாதவர் தலைசிறந்த பிரச்சார கர்த்தாவாக இருப்பார் என்பதை நினைவில் கொண்டு உழைப்பு பிரிவினையை இயன்ற அளவுக்கு முழுமையாக நிறைவேற்ற கொமிட்டி முயல வேண்டும்."

இவ்வகையில், ஒரு தாபனம் தனது இலக்கில் தொடர்ச்சியாகவும், உறுதியாகவும் முன்னேறுவது என்பது, அது தனக்கு முன்னுள்ள பணிகளையும் தன்னிடமுள்ள வளங்களையும் துல்லியமாக மதிப்பிடு செய்வதிலும் ஒவ்வொரு பணிகளுக்கும் பொருத்தமான ஊழியர் களை தெரிவு செய்வதிலும் தங்கியிருக் கிறது.

மேலும், ஊழியர் கொள்கையானது ஊழியர்களை அரசியல் ரீதியில் தொடர்ச்சியாக பயிற்றுவிப்பதையும், அவர்களின் அரசியல் பிரக்ஞையை உயர்த்துவதையும் இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.

லெனின் கூறினார்...

"முழு நேர கிளர்ச்சியாளனாகவும் தாபன அமைப்பாளனாகவும் பிரச்சார கர்த்தாவாகவும் மாறத் திறமையுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் உதவி புரிவதே எமது கடமை"

"நமது முதன்மையான முக்கியமான கடமை தொழிலாள வர்க்க புரட்சியாளர் களை பயிற்றுவிக்க வேண்டியதே. இவர்கள் கட்சி நடவடிக்கை விஷயத்தில் அறிவு ஜீவிகளிடையே இருந்து வரும் புரட்சியாளர்களுக்கு சமமாக இருப்பார்கள். எனவே தொழிலாளர்களை புரட்சியாளர்களின் தரத்திற்கு உயர்த்துவதில் முதன்மையான கவனம் செலுத்த வேண்டும்."

இத்தகைய பயிற்றுவிப்பானது ஆற்றலும் ஆர்வமும் கொண்ட ஊழியர் கள் முழு நேர புரட்சியாளர்களாக தம்மை மாற்றிக் கொள்வதற்கு உதவும் வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும். ஏனெனில் ஒரு புரட்சிகர அமைப்பின் செயல் திறனானது அது கொண்டிருக்கக் கூடிய ஆற்றல் மிக்க அரசியல் உணர்வுமிக்க முழு நேர ஊழியர்களில் தங்கியிருக்கின்றது. அரசியலை கலையா கக் கையாளவும், எத்தகைய சூழலிலும் தாபன வேலைக ளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லவும், இத்தகைய முழு நேர ஊழியர்கள் கட்சிக்கு அவசியமாகின் றார்கள்.

லெனின் எழுதினார்...

"புரட்சியாளர்களைக் கொண்ட அமைப்பை தாருங்கள், ருஷ்யாவை புரட்டிக் காட்டுவோம்."

"விரிவான தயாரிப்புக்கு ஆளாகி, உருப்பெற்று, தனிச்சிறப்பான பயிற்சி பெற்ற தொழிலாளி புரட்சியாளர் களின் சக்திகள் நமக்கு கிடைக் கின்ற பொழுது, உலகத்தில் எந்த அரசியல் போலீசாரும் அச்சக்தி களை எதிர்த்து சமாளிக்க முடியாமல் போகும்... தொழிலாளர்க ளுக்கும் அறிவு ஜீவிகளுக்கும் பொதுவான தாக விளங்கும் முழு நேர புரட்சியாளராக்கும் பயிற்சிக் குரிய இப்பாதையில் செல்லும்படி 'ஊக்கமிட்ட் செயலாற்றுவது' மிகக் குறைவாக இருப்பதற்கான பழி நேரடியாக நம்மையே சேரும்."

"சிறிதளவேனும் ஆற்றலுள்ளவரா கவும்" முன்னுக்கு வரக்கூடியவராகவு முள்ள தொழிலாளிக' கிளர்ச்சியா ளரை தொழிற்சாலையில் பதினொரு மணிநேரம் வேலை செய்யும்படி விட்டு வைக்கக் கூடாது. அவரை, கட்சி



படிப்பகம்

*காத்து பேணி வரும்படி நாம் ஏற்பாடு செய்ய வேண்டும் காலாகாலத்தில் அவர் தலைமறைவாகச் செல்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அவர் வேலை செய்யும் இடத்தை மாற்றிக் கொள்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.'*

புரட்சிகர கட்சி என்பது சாராம்சத்தில் பிரக்ஞைபூர்வமான அரசியல் நிறுவனமாகும் அதாவது மக்களின் நலன்களை வென்றும் கொள்ளவும், அவற்றைத் தொடர்ந்தும் பேணவும் அரசியல் தளத்தில் திட்டமிட்ட ரீதியில் பிரக்ஞை பூர்வமாக செயற்படுகின்ற நபர்களின் தொகுப்பாக கட்சி விளங்குகின்றது. இவ்வகையில் ஊழியர் கொள்கையானது, பொருத்தமான ஊழியர்களை தேர்வது, பயிற்றுவிப்பது, வழிகாட்டுவது, மதிப்பிடுவது போன்ற அனைத்து நடைமுறைகளும் பிரக்ஞை பூர்வமாக மேற்கொள்வதை உறுதிபடுத்த வேண்டும். மறுபுறத்தில் ஊழியர்களை மேலும் மேலும் பிரக்ஞை மிக்கவர்களாக, பிரக்ஞைபூர்வமாக செயல்படுகின்றவர் களாக வளர்த்தெடுப்பதையும் ஊழியர் கொள்கை இலக்காக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வாறு நிகழும் போதுதான், "கட்சியின் ஒவ்வொரு உறுப்பினர்களும் கட்சிக்குப் பொறுப்பானவர் கட்சியும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொறுப்பானது என்ற லெனின் கூற்றை முழு அளவில் நடைமுறைபடுத்துவது சாத்தியமாகும்.

ஒரு புரட்சிகர கட்சியின் ஊழியர்களிடையே நிர்வாக ரீதியான படிநிலை ஒழுங்குகள் நிலவுவது ஒரு தவிர்க்க முடியாத நிகழ்வாகும். கட்சியின் ஒழுங்குகள் கட்சியின் நடவடிக்கைகளை ஆற்றலுடனும், ஒழுங்காகவும் முன்னெடுக்கவும், இரகசியம் பேணவும் இத்தகைய நிர்வாகப் படிநிலை ஒழுங்குகள் அவசியமாகின்றன. எனினும் நிர்வாகப் படிநிலை ஒழுங்கானது ஊழியர்களிடையே அதிகாரப் படிநிலை உறவுகள் உருவாவதற்கான அடிப்படையா மாறிவிடாமல் கண்காணிப்பது அவசி இந்நிலை உருவாகாமல் தடுப்பதி கட்சியின் ஊழியர் கொள்கை முக் பங்கு வகிக்கின்றது அதாவது கட் ஊழியர்கள் அனைவரும் சமமானவர்க என்ற அடிப்படைக் கொள்கை உயர்த்திப் பிடிப்பதன் மூலமும், கட் பணிகளின் எவ்வித வேறுபாடுமின் அனைவரும் பங்குகொள்ளக் கூடி நிலையை உருவாக்குவதன் மூல அதிகாரப் படிநிலை உறவுக தோன்றுவது தவிர்க்கப்பட முடியும்.

*'தங்களது எல்லா உள்விவகாரங்களிலும் இந்தக்குழுக்கள் எல்லாவற்றின் உறுப்பினர்கள், கமிட்டியின் உறுப்பினர்கள் எப்படி ஒருவருடன் ஒருவர் சமமானவர்களோ, அதே போன்று சமமானவர்கள் என்பது சொல்லாமலேயே சொல்லாமலேயே அமையும். உள்ளூர் கமிட்டியுடனும் (மத்தியக் கமிட்டி மத்திய வெளியீடு போன்றவற்றுடன்) குவிப்பட்ட முறையில் தொடர்புகொள்ளும் உரிமை இந்த கமிட்டியால் நியமிக்கப்பட்ட நபருக்கு (அல்லது நபர்களுக்கு) மட்டுமே உண்டு என்பது தான் ஒரே விதிவிலக்காக இருக்கும் மற்றைய எல்லா விடயங்களிலும் இந்த நபர் மற்றவர்களுடன் சமமானவர் இவ்வாறாக மேலே குறிப்பிட்ட விதிவிலக்கு சமத்துவத்தை மீறுவதைக் குறிக்காது மாறாக இரகசியத்தை காப்பாற்றுவதற்காக வேறுவழியின்றி எடுக்கப்படும் ஒரு அவசியமான இணக்கம் தான்...'*

*'நாம் ஒரு உண்மையான கட்சியை கட்டத்தொடங்கும் போது, உணர்வு பெற்ற தொழிலாளி, பாட்டாளிப் படையின் போர் வீரனது மனப்பான்மையை, அராஜகக் சொற்களை பகட்டாக விளம்பரப்படுத்தும் பூர்ஷ்வா அறிவாளியின் மனப்பான்மை*

www.padippakam.com

யில் இருந்து வேறுபடுத்திப் பார்க்க தெரிந்துகொள்ள வேண்டும். கட்சி உறுப்பினர்களுக்கான கடமைகளை அவர்கள் மட்டுமல்ல 'வெளிவட்டத்திலிருப்பவர்களும்' கூட நிறைவேற்ற வேண்டும் என்பதை வற்புறுத்த அவர் தெரிந்துகொள்ள வேண்டும்.' என்றார் லெனின்.

[illegible] கொள்கையில் அடங்கியுள்ள இன்னுமொரு முக்கிய அம்சம் உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடைவடிக்கை எடுத்தல் மற்றும் கட்சியிலிருந்து களையெடுத்தல் ஆகும். கட்சி விதிகளையும் கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறுகின்றவர்கள் மீதும் கட்சியை அமைப்பு ரீதியாகவும் செயற் பாட்டு ரீதியாகவும் பலவீனப்படுத்துகின்ற உறுப்பினர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதும் தேவை ஏற்படின் அவர்களை கட்சியிலிருந்து வெளியேற்றுவதும் ஒரு அவசியமானதான நடவடிக்கையாக இருக்கின்றது. கட்சியின் அமைப்பு வடிவத்தையும் அதன் இயக்கத்தையும் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் பேணுவதற்கு இத்தகைய ஒழுங்கு நடவடிக்கைகளும் களையெடுப்புக்களும் அவசியமாகின்றன.

கட்சியின் அங்கமாகத் தங்களைக் கருதிக்கொள்வதிலிருந்து பல்வேறு நபர்களையும், வட்டங்களையும் தடை செய்வதை பொறுத்தவரை இவ்வட்டங் களும் நபர்களும் கட்சியை சிதைப்பார்களானால் ஊழலுக்குள்ளாகினால், அல்லது அமைப்பைக் குலைத்தால் அவற்றை நிச்சயமாக தடை செய்ய வேண்டும்'

என்றார் லெனின்.

ஒரு உறுப்பினரை கட்சியிலிருந்து வெளியேற்றுவதைபொறுத்தவரை அது முறையான நடவடிக்கைகளுக்கூடாக இடம்பெறல் வேண்டும். குற்றம் சாட்டப் படுகின்ற உறுப்பினர் தொடர்பாக சகல விடயங்களும் நன்கு பரிசீலிக்கப்பட வேண்டும். அவர் கட்சிக்கு விரோதமாக செயல்படுகின்றார் என்பது உறுதிபடுத்தப் பட்ட பின்னர் அது குறித்து அவரிடம் விளக்கப்பட்டு, அவர் தன்னை திருத்திக் கொள்வதற்கும், தனது தவறுகள் குறித்து சுயவிமர்சனம் செய்துகொள்வதற்கும் போதிய அவகாசம் வழங்கப்படவேண்டும். தனது கருத்துக்களை கூறுவதற்கான சகல சந்தர்ப்பங்களும் அவருக்கு வழங்கப்பட வேண்டும். இத்தனைக்கும் பின்னரும்அவர் கட்சிக்கு விரோதமாகவே செயல் படுவாராயின் அவரை கட்சியிலிருந்து வெளியேற்றுவது அவசியமாகின்றது. இவ்வாறு ஒரு உறுப்பினர் வெளியேற்றப்படுவது என்பது அவர் சார்ந்த குழுவிலுள்ள பெரும்பான்மையினரின் அங்கீகாரத்துடனோ அல்லது மத்திய குழுவின் தீர்மானத்துக்கு அமைவாகவோ இடம்பெறுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

# 3.கட்சியின் நிறுவனக் கட்டமைப்பு (organisational structure of a party)

ஒரு புரட்சிகரக் கட்சியானது பல்வேறு குழுக்கள்-அமைப்புகளின் தொகுப்பாக அமைகின்றது. இத்தகைய குழுக்கள் அமைப்புகளே கட்சியின் அங்கங்களாக அமைகின்றன.

லெனின் கூறினார்...

*'கட்சியென்பது குழுக்களின் கூட்டுத் தொகையை/ (எல் களிறுத் கூட்டுத் தொகையாக அல்ல மாறாக சிக்கலானதாக) இருக்க வேண்டும் என்பது நான் கூறும் போது கட்சியானது வர்க்கத்தின் முன்னணிப்படை என்ற வகையில் சாத்தியமான அளவுக்கு அமைப்பாக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தை, கோரிக்கையை நான் துல்லியமாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்துகின்றேன்.'*

இத்தகைய குழுக்கள் பல்வேறு அடிப்படைகளின் கீழ் (உதாரணமாக கட்சியின் செயல்பாடு, பிரதேசம், தொழில்... என) உருவாக்கப்படுகின்றன. பொதுவாக ஒரு புரட்சிகரக்கட்சியின்/ தாபன/நிறுவன கட்டமைப்பு பின்வருமாறு அமைகின்றது.

1. தலைமை அமைப்புகள்
   - அ. காங்கிரஸ் / கட்சிப் பேரவை
   - ஆ. மத்தியக் குழு
   - இ. மகாநாடு
   - ஈ. மாவட்ட - பிராந்தியக் குழுக்கள்
2. உள்ளூர் குழுக்கள்
3. அடிப்படைக்குழுக்கள்
4. விசேட குழுக்கள்
5. முன்னணி அமைப்புக்கள்

## 1. தலைமை அமைப்புக்கள்

### அ. காங்கிரஸ் கட்சிப் பேரவை

காங்கிரஸ் என்பது புரட்சிக கட்சியின் உறுப்பினர்கள் அனைவரு நேரடியா கவோ அல்லது அவர்களு பிரதிநிதி களுக்கூடாகவோ கலந் கொள்கின்ற ஒரு விரிவான ஜனநாய பூர்வமான நிகழ்வாகும். இவ்வகையி கொங்கிரஸ் ஆனது ஒரு கட்சியின் அ யுயர் அதிகார பீடமாக அமைகின்றது.

பொதுவாக ஒரு புரட்சிகர கட்சியி கொங்கிரஸானது குறிப்பிட்ட ஒரு கா இடைவெளியில் கூட்டப்படுகின்ற இவ்வாறு கொங்கிரஸைக் கூட்டுவத காக மத்திய குழுவானது ஒரு ஏற்பாட்டு குழுவை நியமிக்கின்றது. கொங்கிரஸை கூட்டுவதற்கும் அதை ஒழுங்காக வ நடத்திச் செல்வதற்குமாக சகல பொறு புக்களும் இவ்வேற்பாட்டுக் குழுவினிட ஒப்படைக்கப்படுகின்றன. ஒரு கொங்கி ஸை வெற்றிகரமாக நடத்தி முடிக் வேண்டுமாயின், ஏற்பாட்டு குழுவான பின்வரும் முக்கிய விடயங்களில் போதி தயாரிப்புக்களை மேற்கொள்வ அவசியமாகின்றது.

1. கொங்கிரசுக்கான நிகழ்ச்சிநிரலை தயாரித்தல்.

2. கொங்கிரசில் ஒவ்வொ தலைப்பின் கீழும் சமர்ப்பிக்கப்பட வேண் ள்ள அறிக்கைகள், ஆவணங்கள் என்ப வற்றை தயாரிப்பதற்கான பொறுப்பு களை உரிய உறுப்பினர்களி ஒப்படைத்து அவற்றை தயார் செய்தல்.



படிப்பகம்

www.padippakam.com

3. ஏதேனும் விடயம் தொடர்பாக அங்கத்தினர்களிடையே முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்ற சந்தர்ப்பத்தில் தேவை ஏற்படின் முரண்பட்ட கருத்துக்களை கொண்டிருப்பவர்களிடமிருந்து ஆவணங்களை பெற்றுக்கொள்ளுதல்.

மேற்படி ஆவணங்கள் அனைத்தும் கட்சிக் குழுக்களுக்கிடையேயும் முறையாக விவாதிக்கப்படுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல்.

5. கொங்கிரசுக்குரிய விதிகளை வகுப்பதோடு அவற்றை கொங்கிரஸில் கலந்து கொள்கின்ற அனைவரும் ஏற்றுக் கொள்வதை உத்தரவாதப் படுத்துதல்.

6. கொங்கிரஸில் கலந்துகொள்கின்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை தகுதிகளை (அதாவது வாக்களிக்கும் தகுதி பெற்றோர் பார்வையாளர்களாக கலந்து கொள்வோர் கருத்துக்கள் கூறும் தகுதியுடையோர் என) தீர்மானித்தல்.

7. தலைமை உறுப்புக்களுக்கும் (உதாரணமாக மத்திய குழு) ஏனைய மத்திய உறுப்புக்களுக்கும் (உதாரணமாக கட்சிப் பத்திரிகை) தேர்ந்தெடுக்கப் படுவதற்கான தகுதிகளைக் கொண்ட உறுப்பினர்கள் அடங்கிய வேட்பாளர் பட்டியலைத் தயாரித்தல்.

8. கொங்கிரஸை நடைமுறையில் கூட்டுவதற்கான இட ஏற்பாடு இரகசிய ஒழுங்குகள், உணவு, போக்குவரத்து மற்றும் இவை போன்ற விடயங்களில் தயாரிப்புகளைச் செய்தல்.

இவ்வாறு கொங்கிரஸ் அமர்வைப் பொறுத்தவரை ஏற்பாட்டுக் குழுவின் பங்களிப்புகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஒரு புரட்சிகரக்கட்சியின் இருப்பைப் பொறுத்தவரை கொங்கிரஸ் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. கட்சியை சித்தாந்த ரீதியாகவும் செயல் ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் தீர்மானிக்கின்ற அளவுக்கு முக்கியத்துவம் பெற்ற கட்சித் திட்டம், மூலோபாயம், தந்திரோபாயம், கட்சி விதிகள், தலைமை உறுப்புக்கள் போன்றவை தீர்மானிக்கப்படுகின்ற இடமாக கொங்கிரஸ் விளங்குகிறது. மேலும் ஒரு புரட்சிகரக் கட்சியை சேர்ந்த முக்கிய உறுப்பினர்களில் கிட்டத்திட்ட அனைவரும் கலந்து கொள்கின்ற ஒரு நிகழ்வாக கொங்கிரஸ் இருக்கின்றது. இதனால் பாதுகாப்பு ரீதியாக இவ்வுறுப்பினர்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துகள் இக்கட்சியின் இருப்பை தீவிரமாக பாதிக்கக் கூடியன என்ற வகையிலும், கொங்கிரஸ் முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே கொங்கிரஸ் ஆனது மிகவும் கவனமாகவும் நேர்த்தியாகவும் திட்டமிடப்பட்டு, தயாரிப்புக்குட்பட்டு நடத்தப்படுவதோடு, அதில் கலந்து கொள்கின்ற பிரதிநிதிகள் அனைவரும் கொங்கிரஸின் முக்கியத்துவத்தையும் தமது பொறுப்புக்களையும் பிரக்ஞை பூர்வமாக புரிந்துகொள்வதும் கொங்கிரஸை வழிநடத்துகின்ற விதிகளை முறையாகப் பின்பற்றுவதும் கொங்கிரஸில் எடுக்கப்படுகின்ற முடிவுகளுக்கு கட்டுப் படுவதும் அவசியம்.

கொங்கிரஸில் கலந்துகொள்கின்ற உறுப்பினர்களை (பேராளர்களை அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குழுக்கள் கட்டுப்படுத்தமுடியாது இவ் வகையில் ஒரு பேராளர் கொங்கிரஸில் தான் சரியென கருதுகின்ற எந்தவொரு நிலைப்பாட்டையும் ஆதரிக்கின்ற சுதந்திரத்தையும் கொண்டிருக்கின்றார். எனினும் கொங்கிரஸில் கலந்து கொள்கின்ற பேராளர்கள் உண்மையில் கட்சியின் பல்வேறு குழுக்களை கொங்கிரஸில் பிரதிநிதித்துவம் செய்கிறவராக இருக்கின்றார்கள். இந்நிலையில் பேராளர்கள், தாம் பிரதிநிதித்துவம் செய்கின்ற குழுக்களின் உணர்வுகளையும் முடிவுகளையும் கொங்கிரஸில் தெளிவாக பிரதிபலிக்க வேண்டுமாயின் கொங்கிரஸில் இடம்பெறவிருக் கின்ற முக்கிய விடயங்கள் தொடர்பான விவாதங்கள் ஏற்கெனவே குழு ரீதியில்



படிப்பகம்

www.padippakam.com

மேற்கொள்ளப் பட்டிருப்பது அவசியம் இதன் மூலம் ஒவ்வொரு குழுவின் அங்கத்தினர்களும் தமது கருத்துக் களை பிரதி பலிக்கக் கூடிய விதத்தில் பேராளர்களை கொங்கிரஸிற்கு அனுப்பி வைக்கவும் இதன் விளைவாக கொங்கிர சானது கட்சி உறுப்பி னர்களின் கருத்துக் களை உண்மையா கவே பிரபதிநித்துவம் செய்வதாகவும் அமைய முடியும்.

மேலும், கொங்கிரஸில் முடிவு செய்யப் பட வேண்டிய விடயங்கள் தொடர்பான அறிக்கைகளும் ஆவணங்களும் கொங்கி ரஸிற்கு முன்பே அங்கத்தினர்கள் மத்தியில் விவாதத்திற்கு விடப்படுவதால் ஒவ்வொரு பேராளரும் இவ்விடயங்கள் குறித்து போதிய பரிச்சயத்துடனும், இவை தொடர்பாக அமைப்பில் நிலவுகின்ற முரண்பட்ட போக்குகள் பற்றிய விழிப்புணர் வுடனும், இவை குறித்து தமது சொந்த மற்றும் குழுவின் கருத்துக்களை கொண்டவராகவும் கொங்கிரஸில் கலந்துகொள்ள முடிகின்றது இத்தகைய முன்தயாரிப்புகள் இன்றி ஒரு பேராளர் கொங்கிரஸில் கலந்துகொள்கின்ற போது பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அங்கு ஏற்படக்கூடிய அமளிதுமளியில் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட சிக்கலான கருத்துக்களை ஒரே சமயத்தில் எதிர்கொள்கின்ற போது அவற்றைச் சரிவரப் பகுத்தாய்வு செய்வதற்கு போதிய அவகாசமும் சந்தர்ப்பமும் இல்லாததாலும் உணர்ச்சிவசப்பட்ட நிலையிலும் தவறான முடிவுகளையும் தொலைநோக்கற்ற முடிவுகளையும், அவர் மேற்கொள்ள வேண்டி வரலாம்.

கொங்கிரஸின் போது மேற் கொள்ளப்படுகின்ற சகல தீர்மானங்களும் விரிவாக விவாதிக்கப்பட்டு, தேவை ஏற்படின் வாக்கெடுப்பின் அடிப்படையி லேயே முடிவு செய்யப்படுகின்றன. இங்கு வாக்கெடுப் பானது பல விதமாக இடம் பெறலாம். உதாரணமாக ஒரு விடயத் துக்கு ஆதர வாக உள்ளவர்களும் எதிரானவர்களும் தனித்தனியே அணிகளாகப் பிரிந்து கொள்வது(Roll call voting), பிரதிநி திகள் தமது கைகளை உணர்த்துவதன் மூலமாக ஆதரவு - எதிர்ப்பைத் தெரிவித்தல்(normal voting) இரகசிய வாக்கெடுப்பு(secret voting) என இவை அமைகின்றன. பொதுவாக கொள்கை ரீதியான விடயங்களில் தேவை, கால அவகாசம் என்பவற்றுக்கு ஏற்ப முதலிரண்டு வாக்கெடுப்பு முறைகளும் மேற்கொள்ளப் படுகின்றன. எனினும் தலைமை அங்கத்தவர் களுக்கான தெரிவை பொறுத்தவரை அனாவசியமான சங்கடங்களை தவிர்க்கும் பொருட்டு இரகசிய வாக்கெடுப்பு முறை பின்பற்றப்படுகின்றது.

தலைமை உறுப்பினர்களுக்கான தேர்தல்களின் போது தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அதனால் வாக்கெடுப்பின் மூலமாகவே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய நிலை ஏற்படும் போது ஒருவர் தெரிவு செய்யப்படுவது என்பது அவருக்கு வழங்கப்பட்ட கௌரவமாகவோ அல்லது ஒருவர் தெரிவு செய்யப்படாத போது அது அவரை அவமானப்படுத்துவதாகவோ அர்த்தம் கொள்ளப்படக்கூடாது.

*'...அங்கத்தினர் ஒருவர் தான் அல்லாது வேறு ஒருவர் மத்திய கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் வருத்தத்திற்குள்ளாக மாட்டார்.' தோழர்களே, இது நம்மை எங்கே இட்டுச் செல்லப்போகின்றது. நாம் இங்கு கூடியிருப்பது பரஸ்பரம் <u>பாராட்டுரை களை பரிமாறிக் கொள்ளவும் அப்படியாக உணர்ச்சி</u> பசுட்டுகளில் ஈடுபடவுமல்ல. மாறாக கட்சியொன்றை உருவாக்கும் நோக்கத்துக்காக நாம் கூடியோம் என்றால் இவ்வாறன கருத்தை நாம் ஒரு போதும் ஒத்துக்கொள்ள முடியாது. <u>நாம் பல பதவிகளுக்கு நபர்களை</u> தேர்ந்தெடுக்கப்*



படிப்பகம்

www.padippakam.com

*போலிருப்பவை... தேர்ந்தெடுக்கப்படாத எவர் மீதும் நம்பிக்கை இல்லை என்று சொல்வதற்கே இடமில்லை. செய்யப்பட வேண்டிய பணியின் நலன்களும் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நபரின் தகுதியுமே நமது ஒரே நோக்கமாக இருக்க வேண்டும்.'*

என்றார் லெனின்.

இவ்வகையில் முன்மொழியப்படுகின்ற வேட்பாளர்களைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்ளக் கூடிய உரிமை காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு இருக்கின்றது. இதனால் அவர்கள் உரிய பதவிகளுக்கு ஏற்ற மிகத் தகுதியானவர்களைத் தெரிவு செய்ய முடியும்.

*இந்த கொங்கிரஸ்களில் கோட்பாடு சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி பிரதானமாக விவாதிக்க இயக்கத்தின் பிரதிநிதிகள் கூடுகின்ற போது, நபர்களைப் பற்றி பாரபட்சமின்றி கருதவும் மற்றும் அவர்கள் வேட்பாளர்களைப் பற்றி தேவையான எல்லா விபரங்களையும் கோரிப் பெற்றுக் கொள்ள நிலைமையைத் தருபவர்களாக (அது ஒரு கடமை) இருக்கிறார்கள். இறுதி வாக்கு அளிப்பதற்கு முன்பு இவ்வாறு விபரங்களை அங்கே அறிந்து கொள்ள முடியும்.'*

என்றார் லெனின்.

கொங்கிரஸில் மேற்கொள்ளப்படுகின்ற சகல தீர்மானங்களும் தேர்வுகளும் அடுத்த கொங்கிரஸ் வரை செல்லுபடியாகக் கூடியவை. இந்த இடைப்பட்ட காலத்தில் கட்சி அங்கத்தினர்கள் அனைவரும் இவற்றுக்கு கட்டுப்பட்டு செயற்படுவது அவசியம். ஒரு கொங்கிரஸைக் கூட்டுவதற்காகச் செலவிடப்படுகின்ற உழைப்பு, காலம், நிதி மற்றும் எதிர்கொண்டு சமாளிக்கின்ற கஷ்டங்கள்... போன்றவை அர்த்தமற்றதாகக் கூடாது என்றால் கட்சி தனது போக்கில் தடையின்றி தொடர்ச்சியாக இயங்குவதை உறுதிப்படுத்த வேண்டுமென்றால் இத்தகைய வரையறைப்புக்கள் கட்டாயம் அவசியமாகின்றன.

இரண்டு கொங்கிரஸ்களுக்கு இடைப்பட்ட காலத்தில் கட்சியின் உயர் அதிகார பீடமாக மத்திய குழு விளங்குகின்றது. இந்த இடைப்பட்ட காலத்தில் காங்கிரசின் தீர்மானங்களுக்கு ஏற்ப அவற்றின் வழிகாட்டுதலின் படி மத்திய குழு செயற்படுகின்றது.

இரு கொங்கிரஸ் அமர்வுகளுக்கு இடைப்பட்ட கால இடைவெளியானது கட்சி விதியின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. எனினும் நெருக்கடியான சூழ்நிலைகளின் காரணமாக அடுத்த காங்கிரஸ் அமர்வு தாமதமாகின்ற சந்தர்ப்பமும் ஏற்படலாம். உதாரணமாக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கொங்கிரஸ் கூடுவதற்கான கால இடைவெளி இரண்டு வருடங்கள் என நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் புரட்சிக்கு முந்திய சீனாவில் தொடர்ச்சியாக நிலவிய யுத்த நிலை காரணமாக அதன் ஆறாவது கொங்கிரசுக்கும் ஏழாவது கொங்கிரசுக்கும் இடைப்பட்ட காலம் 17 வருடங்களாக இருந்தன. மேலும் ஒரு புரட்சிகர கட்சி தீவிரமாக நெருக்கடிகளை முகம் கொடுக்கின்ற நிலையில் (உதாரணமாக தீவிர உட்கட்சி முரண்பாடு அந்நிய தலையீடு போன்றவை) மத்திய குழு உறுப்பினர்களின் தீர்மானத்திற்கு அமையவோ அல்லது கட்சியின் மொத்த உறுப்பினர்களுக்கு மூன்றில் ஒரு பங்குக்கு குறையாதோரின் வேண்டுகோளிற்கு இணங்கவோ விசேட கொங்கிரஸ்கள் கூட்டப்பட்டு புதிய நிலைமைக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கப்படலாம்.

தொகுத்துக் கூறினால், கடினமான நிலைமைகளை சமாளித்து, கணிசமான காலம் மற்றும் நிதி என்பவற்றை செலவிட்டு கூட்டப்படுகின்ற, கட்சியின் உயர் அதிகார பீடமாக அமைகின்ற கொங்கிரஸானது பூரண வெற்றியைப் பெற வேண்டுமாயின் கட்சி அங்கத்தினர்களிடையே உயர்ந்த கட்சி உணர்வும்,



படிப்பகம்

www.padippakam.com

போதிய முன் தயாரிப்புகளும், கொங்கிரஸ் தொடர்பான விடயங்களில் பிரக்ஞை பூர்வமான பங்குபற்றுதலும் அவசியப் படுகின்றன.

## ஆ. மத்திய குழு

ஒரு கட்சியின் மத்திய குழுவானது அக்கட்சியின் கொங்கிரஸில் தேர்ந்தெடுக் கப்படுகின்றது. தெரிவு செய்யப்பட வேண்டிய மத்தியகுழு உறுப்பினர்களின் எண்ணிக்கை சூழ்நிலைக்கேற்ப மாறு படலாம். உதாரணமாக ரஷ்யாவில் 1898இல் சமூக-ஜனநாயகக் கட்சியின் மத்திய குழுவுக்கு மூன்று உறுப்பினர் களே தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் இவ்வெண்ணிக்கை ஐந்து, ஏழு என அதிகரிக்கப்பட்டு, ஒக்டோபர் புரட்சியின் போது ஒன்பதாக அமைந்திருந்தது. இவ்வாறு மத்திய குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்துவத ற்கான பிரதான காரணங்களாக, மத்திய குழுவின் செயல்திறனை விரைவுபடுத்து வதும் முடிவுகள்/தீர்மானங்கள் எடுப்பதை துரிதமாக்குவதும், பாதுகாப்பு மற்றும் இரகசியங்களைப் பேணுவதும் சந்திப்புக ளுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தவிர்ப்பதும் அமைகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மத்திய குழு அவசியப்படும் போது, மேலதிக உறுப்பினர்களை மத்திய குழுவிற்குள் சேர்த்துக் கொள்ள முடியும். ரஸ்ய சமூக-ஜனநாயகக் கட்சியின் இரண்டாவது கொங்கிரஸில் மத்திய உறுப்புகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்து லெனின் முன்வைத்த திட்டம் பின்வருமாறு.

> 'மத்திய ஏட்டின் ஆசிரியர் குழுவி ற்கு மூன்று பேர்களையும் மத்திய கமிட்டிக்கு மூன்று பேர்களையும் கொங்கிரஸ் தேர்ந்தெடுக்கும் அவசியமானால் இந்த ஆறுபேர்க ளும் சேர்ந்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் மத்திய ஏட்டிற்கும் மத்திய கமிட்டிக்கும் மேலும் அதிக அங்கத்தினர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம் இதைக் கொங்கிரஸுக்கு அறிவிக்க வேண்டும். கொங்கிரஸ் அந்த அறிக்கையை ஒப்புக் கொண்ட பிறகு, மத்திய ஏட்டின் ஆசிரியர் குழுவும், மத்திய குழுவும் தனித்தனியாக, அதற்குப் பிந்திய உறுப்பினர் சேர்த்துக் கொள்வ தலை மேற்கொள்ளும்."

ஒரு மத்திய குழுவின் ஆயுட் காலம் கட்சி விதிகளினால் தீர்மானிக்கப் படுகின்றது. எனினும் பல்வேறு நெருக் கடிகளின் காரணமாக அடுத்த கொங்கிரஸ் உரிய காலத்தில் கூட்டப்பட முடியாம போகுமிடத்து புதிய மத்திய குழு தேர்நதெடுக்கப்படுவதும் தாமதமாகி ன்றது.

கட்சியின் இரண்டு கொங்கிரஸ் ளுக்கு இடைப்பட்ட காலத்தில் கட்சியி அதியுயர் அதிகாரமுள்ள அங்கமா மத்தியகுழு அமைகின்றது. எனவே மத்திய குழு உறுதியாக அமைக்கப் படுவதோடு, அது தனது அதிகாரங்களை நேரடியாக கொங்கிரஸிடமிருந்து பெற்று கொள்வதாகவும் இருக்க வேண்டும்.

> "...கட்சித் தலைமை நிறுவனத் தின் இயைபு (composition) நிலையா னதாக இருக்க வேண்டும். மத்திய உறுப்புக்களின் இயைபு (சில வேளைகளில் கைது செய்யப் படுவதால்) தற்செயல் மாற்றங்களை யிது சார்ந்ததாக இருக்கக் கூடாது. தலைமை நிறுவனம், கட்சிக் கொங்கிரஸோடு நேரடியான உறவுடையதாக இருக்க வேண்டும் கட்சிக் கொங்கிரஸிடமிருந்து தனது அதிகாரங்களைப் பெற வேண்டும்..."

என்று லெனின் வலியுறுத்தினார்.

மத்திய குழுவானது, கொங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை முன்னெடுத்துச் செல்லவும், கட்சியை அதன் இலக்கு நோக்கி வழிகாட்டவும்

படிப்பகம்

www.padippakam.com

கட்சிக் குழுக்களின் செயற்பாடுகளைத் தீர்மானித்து, ஒப்படைக்கவும், கட்சிக் குழுக்கள் மற்றும் உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கம் கோரவும் சூழ்நிலைக்கேற்ப போராட்ட முறைகளைத் தீர்மானித்து நடைமுறைப் படுத்தவும் பூரண அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது. மேலும் குழுக்களை அமைப்பதற்கும் கட்சியின் கொள்கைகள், அமைப்பு விதிகள், மத்திய குழுவின் தீர்மானங்கள் மற்றும் வழிகாட்டல்கள் போன்றவற்றிற்கு முரணாகச் செயற்படுகின்ற குழுக்களைக் கலைப்பதற்குமான பூரண அதிகாரங்களையும் மத்திய குழு கொண்டிருக்கின்றது.

*'நமது கட்சி விதிகளின் ஆறாவது பாராவின்படி, குழுக்களை அமைக்கும் உரிமை மத்திய குழுவிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு குழுவின் சுயாதீனத்தின் எல்லைகளை வரையறுக்கும் அறுதியான உரிமை கட்சியின் உள்ளூர் நிறுவனத்திடம் அல்லாமல், மத்திய நிறுவனத்தைச் சேர்ந்ததாகும்...'*

*'மத்திய ஸ்தாபனங்களின் தெரிவான வல்லமையை ஏற்றுக்கொள்ள மறுத்தல், கட்சியில் இருக்க மறுப்பதற்கு ஒப்பானது, கட்சியைச் சீர்குலைப்பதற்கு ஒப்பானது. அது அழிக்கும் ஒரு வழிமுறையேயொழிய அது மற்றவர்களை நம்பிக்கை கொள்ளச் செய்யும் வழிமுறையல்ல...'*

என்று லெனின் வாதிட்டார்.

மத்திய குழு, ஒரு கட்சியின் தலைமை அங்கமாகும். தலைமை என்பது அரசியல் ரீதியதாகவும், நடைமுறைரீதியாகவும் தலைமைதாங்கி வழிநடத்துவதைக் குறிக்கின்றது. இவ்வகையில் ஒரு தலைமை உறுப்பு அரசியல் மற்றும் நடைமுறை ரீதியான தலைமைப் பண்பைக் கொண்டிருக்க வேண்டும். எனினும் பொதுவாக, இவ்விரு தலைமைப் பண்புகளும் ஒரே நபரில் சம அளவில் காணப்படுவதில்லை என்பதால், குறிப்பிட்ட ஒரு பண்பை அதிகமாகக் கொண்டிருக்கின்ற உறுப்பினர்களைக் கொண்டு தனித்தனியான இரு துணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இவை அரசியல் குழு, அமைப்புக்குழு என அமைகின்றன. இக்குழுக்களுக்கென குறிப்பான பொறுப்புக்களை ஒப்படைப்பதன் மூலம், மத்திய குழுவின் செயற்திறன் அதிகரிக்கப்படுகின்றது.

இத்துணைக்குழுக்களில், அரசியல் குழுவானது உறுதியான, மற்றும் நிச்சயமான கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றது. இக்குழு கட்சியின் சிக்கலான வேலைகளைக் கையாளக் கூடியதாகவும், மத்திய குழுவின் செயற்பாடுகளை வழிகாட்டுவதாகவும் உருவாக்கப்பட வேண்டும். அமைப்புக் குழுவானது, பொருத்தமான குழுக்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றிடம்/அவர்களிடம் கட்சிப் பணிகளை ஒப்படைப்பதிலும், கட்சித் தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும் பிரதானமாக ஈடுபடுவதன் மூலம் கட்சியின் நாளாந்த செயற்பாடுகளை வழிநடத்துகின்றது. இவ்விரு துணைக்குழுக்களும் மத்திய குழுவுக்கு பதில் சொல்லும் பொறுப்புடையதாகவும் அதற்குக் கட்டுப்பட்டதாகவும் இருக்கின்றது. இவற்றைவிட, மத்திய குழு தனது உறுப்பினர்களில் இருந்து பொதுச் செயலாளர் ஒருவரையும் தெரிவு செய்கின்றது. இவர் மத்திய குழுவின் தீர்மானங்களை உத்தியோகபூர்வமாக அறிவிப்பவராகவும், மத்திய குழுவின் நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பவராகவும் செயற்படுகின்றார்.

மேலும் மத்திய குழுவின் பிரதிநிதிகளும், அதனால் அதிகாரம் வழங்கப்பட்டவர்களும் தேவையேற்படும்போது, மாநாடுகளிலும், ஏனைய குழுக் கூட்டங்களிலும் (உதாரணமாக, மாவட்டக் குழுக்கள், உள்ளூர்க்குழுக்கள்...) கூட்டத் தொடர்களிலும் தீர்மானிக்கின்ற உரிமைகளுடன்

அனுமதிக்கப்படுவார்கள். மேலும் மத்திய குழு, பூரண அதிகாரமும் பொறுப்பும் உள்ள பரதிநிதிகளை தன்வசம் கொண்டிருக்க வேண்டும். இவர்கள் பல்வேறு மாவட்ட/பிராந்திய குழுக்களுக்கும், பொறுப்புள்ள அமைப்புகளுக்கும் தமது சுற்றறிக்கைகள் கடிதங்கள் மூலமாகவும், மற்றும் நேரடியாகவும் வாய்வழியாகவும் அரசியல், நிறுவன பிரச்சினைகள் பற்றி அறிவுறுத் தவும், அறிவிக்கவும் அனுப்பப்படுகின் றார்கள்.

மத்திய குழுவின் நடவடிக்கைகளில் அதிருப்தியுற்றவர்களும் உடன்பாடற்றவர்களும் தமது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் மத்திய குழுவிற்கு நேரடியாக சமர்ப்பிக்க முடியும். இதன் பின்பும் மத்திய குழுவின் செயற்பாடுகளில் உடன்பாடில்லாதவர்கள், கட்சியின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு பெரும்பான்மையுடன் விசேட கொங்கிரஸைக் கூட்டி, மத்திய குழுவின் செயற்பாடுகள் குறித்து தமது முறையீடுகளை, அக் கொங்கிரஸ் முன் வைக்க முடியும்.

ஒவ்வொரு மத்திய குழுவும், தனது செயற்பாட்டுக் காலத்தின் இறுதியில், கட்சிக் கொங்கிரஸைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அதற்கென ஒரு ஏற்பாட்டுக் குழுவை நியமிக்கவும். வேண்டும். மேலும் தனது செயற்பாட்டுக் காலத்தின் போது கட்சியின் நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை கொங்கிரஸில் சமர்ப்பிக்கவும் தனது நடவடிக்கைகள் தொடர்பாக பதில் சொல்லவும் கடமைப்பட்டிருக்கின்றது.

## இ. மாநாடுகள்

பொதுவாக மாநாடுகள் பிராந்திய மட்டங்களிலோ அல்லது குறிப்பான பிரச்சினைகள் தொடர்பாகவோ (உதாரணமாக, தாழ்த்தப்பட்டோர், மாணவர், பெண்கள்... தொடர்பான பிரச்சினைகள் குறித்தோ) நடத்தப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு மாவட்டம்/பிராந்தியத்திலுள்ள மாவட்டம்/பிராந்திய குழுக்களினதும் உள்ளூர் குழுக்களினதும் அடிப்படை குழுக்களினதும் பிரதிநிதிகள் இம்மாநாடுகளில் கலந்துகொள்கிறார்கள். ஒரு பிராந்தியத்திலுள்ள குறிப்பான பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தவும் அங்குள்ள கட்சி உறுப்பினர்களின் அரசியல் உணர்வையும் செயல் திறனையும் உயர்த்தவும் கட்சிக்கும் குறித்த பிராந்தியத்திலும் உள்ள மக்களுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிகளை ஆராயவும் இத்தகைய மாநாடுகள் உதவுகின்றன.

கட்சி மகாநாடுகள் மத்திய குழுவின் வழிகாட்டலில், அதன் மேற்பார்வையின் கீழ் இடம் பெறுகின்றன. மாநாட்டில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப் படுகின்ற தீர்மானங்களும் முடிவுகளும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டியவையாக இருப்பினும் கூட கட்சியின் ஒட்டு மொத்த நலன்களுக்கும் காங்கிரசின் தீர்மானங்களுக்கும் முரணாக அமையக் கூடியனவற்றை நிராகரிக்கக் கூடிய அதிகாரத்தை மத்திய குழு கொண்டிருக்கிறது. எனினும் இத்தகைய நிலமை ஏற்படாதவாறு மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து ஏற்கெனவே குழு மட்டத்தில் விவாதங்களை நடத்தி பொது முடிவை எட்டுவது அவசியம்.

## ஈ. பிராந்திய / மாவட்டக் குழுக்கள்

பொதுவாக பாராளுமன்ற கட்சிகள் தேர்தல் தொகுதிகளை தமது பிராந்திய மாவட்ட/தொகுதி அமைப்புகளைக் கொண்டு செயற்படுகின்றன. இன்னும் சில அரசியற் கட்சிகள் முதலாளித்துவ அரச இயந்திரத்தின் அதே நிர்வாக அலகுகளைத் தமது அலகுகளாகவும் கொண்டுள்ளன. ஆனால் ஒரு புரட்சிகர

www.padippakam.com

கட்சியானது நடப்பிலுள்ள அரசின் அதே நிர்வாக அலகுகளை அல்லது தேர்தல் தொகுதிகளையே தானும் பயன்படுத்த வேண்டும் என்பது அவசியமில்லை. மாறாக புவியியல் தொடர்ச்சி மக்கள் பிரிவினரின் சொந்த தன்மைகள் (உதாரணமாக விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்... ) குறிப்பான சமூகப் பிரிவினரின் நலன்கள் பாதிக்கப்படுகின்ற விதம்.. போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தனது சொந்த செயற்பாட்டு அலகுகளை உருவாக்கிக் கொள்கின்றது. இத்தகைய ஒரு குறிப்பிட்ட அலகுக்குள் அடங்குகின்ற பகுதி முழுவதையும் இணைத்ததாக பிராந்திய/ மாவட்டக்குழு அமைக்கப்படுகின்றது.

இக்குழு அப்பிராந்தியத்தைச் சேர்ந்த உள்ளூர்க் குழுக்களினது உறுப்பினர்களின் நெருங்கிய தொடர்புகளுடன் கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அப்பிராந்தியத்திலுள்ள கட்சி ஊழியர்கள் படிப்படியே பிராந்தியக் குழுவுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். இதன் மூலம் பிராந்திய குழுவுக்கும் அப்பிராந்திய மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் ஏற்படுகின்றன. பிராந்திய குழு அப்பிராந்தியத்தின் அரசியல் தலைமையாக தன்னை வளர்த்துக் கொள்வதோடு மத்திய குழுவுடன் இணைந்து கட்சியின் உண்மையான தலைமைப் பொறுப்பை ஆற்றக் கூடிய அமைப்பாகவும் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

## 2. உள்ளூர்க் குழுக்கள்

கிராமங்கள், சிறு நகரங்கள் பெரு நகரங்களிலுள்ள வெவ்வேறு பகுதிகள் என்பவற்றை சார்ந்த குழுக்கள் உள்ளூர் குழுக்களில் அடங்குகின்றன. இவை ஒன்றுக்கு மேற்பட்ட அடிப்படைக் குழுக்களை இணைத்து உருவாக்கப்படுகின்றன இத்தகைய உள்ளூர்க் குழுக்களில் சிலவற்றை இணைத்து கூட்டு அமைப்பாகவும் நிறுவலாம் இவை மாவட்டக் குழுக்களின் வழிகாட்டலின் கீழ் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

## 3. அடிப்படைக்குழுக்கள்.

இவை மக்களுக்கு மிக நெருக்கமானதாகவும் கட்சியின் தீர்மானங்களை அடிநிலை வரை எடுத்துச் செல்லவனவாகவும் இருக்கின்றன ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் இத்தகைய அடிப்படைக் குழுக்களில் உறுப்பினராக இருந்திருக்க வேண்டும். இவற்றுக்கூடாகத்தான் புதிய உறுப்பினர்கள் கட்சி அங்கத்துவத்துக்காக விண்ணப்பிக்ககட்சிக்குள் இணைக்கப்பட முடியும் ஒரு அடிப்படைக் குழு அமைக்கப்படுவதற்கு குறைந்தது மூன்று உறுப்பினர்கள் தேவைப்படுகின்றனர். இவர்களில் ஒருவர் அக்குழுவின் நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பவராகவும் குழுநடவடிக்கைகள் குறித்து மேற்குழுக்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பவராகவும் செயற்படுகிறார்.

## 4. விசேட குழுக்கள்

கட்சி ஊழியர்கள், அமைப்புச் செயற்பாடுகளின் வெவ்வேறு கிளைகளிலும் தேர்ச்சியை அடைவதற்காகவும் சமூகத் தில் காணப்படக்கூடிய குறிப்பான நிலைமைகளைக் கையாள்வதற்காகவும் ஒவ்வொரு மேல் மட்டக் குழுவும் (தலைமைக் குழுக்கள்) தனது உறுப்பினர்களுக்கிடையில் தனது வேலையை பிரித்துக் கொள்வது அவசியம் இதற்கென பல்வேறு விசேட குழுக்கள் அமைக்கப்படுகின்றன. உதாரணமாக பிரச்சார குழு பத்திரிகைக் குழு தாழ்த்தப்பட்டோர் பெண்கள், விவசாயிகள், மீனவர்கள் தொடர்பான குழுக்கள் என இவை அமையலாம். இத்தகைய விசேட குழுக்கள் கட்சியின் மத்திய குழுவுக்கோ அல்லது பிராந்திய குழுவுக்கோ கட்டுப்பட்டவை. அமைப்பு வேலைகளில் அதிகம் பாதிப்பு ஏற்படாது என கருதுகின்ற பட்சத்தில் இவ் விசேட குழுக்களில் பணிபுரிபவர்களை குறிப்பிட்ட



படிப்பகம்

www.padippakam.com

காலத்துக்கு ஒருமுறை மாற்றுவது சிறந்தது. இதனால் ஒருவர் பல துறைகளில் தேர்ச்சியடைவது சாத்தியமாகின்றது. இவ்விசேட குழுக்களில் பணிபுரிபவர்கள் கட்சியின் ஏனைய குழுக்களில் ஒன்றில் உறுப்பினர்களாக இருந்து கொண்டு, முறையான கட்சிப் பணிகளில் பங்கேற்க வேண்டும்.

## 5. முன்னணி அமைப்புகள்

முன்னணி அமைப்புகள் என்பவை கட்சி சார்ந்தவை, கட்சிக்கு ஆதரவானவை முற்றிலும் கட்சி சாராதவை என பல தரப்பட்டவைகளாக அமைகின்றன. தேவைக்கேற்ப கட்சி சாராத முன்னணி அமைப்புகளிலும் கட்சி அங்கத்தினர்கள் இணைந்து செயற்படல் வேண்டும். இதன் மூலமாகவே கட்சியின் செல்வாக்கு மக்களின் மத்தியில் மிகவும் விரிவான அளவில் கொண்டு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

பொதுவாக முன்னணி அமைப்புகள் கட்சியில் நேரடியாக அங்கத்துவம் பெற்றவை அல்ல என்ற வகையில் இத்தகைய அமைப்புகளை கட்சி தனது நேரடியான ஆணைகள் மூலம் கட்டுப்படுத்த முடியாது. பதிலாக அரசியல் ரீதியாகவும் இவற்றின் கட்சி உறுப்பினர்கள் அதிகளவில் பங்கு பற்றுவதினூடாகவுமே இவற்றைத் தமது செல்வாக்கில் வைத்திருக்க கட்சி முயற்சிக்க வேண்டும்.

## குழு வேலை முறை (Committee system)

ஒரு புரட்சிகர கட்சி என்பது பல்வகைக் குழுக்களின் கூட்டுத்தொகை என்று லெனின் வழியுறுத்தியதை மேலே பார்த்தோம் இவ்வகையில் ஒரு புரட்சிகரக் கடசியின் அடிப்படை அலகாக அமைகின்ற குழுக்களின் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பங்கு கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும் குழுச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டிய முறை குறித்தும் விரிவான புரிதலைப் பெறுவது கட்சி உறுப்பினர்களுக்கு அவசியமாகின்றது.

அரசியல் செயற்பாட்டை (Political practice) அரசியல் உற்பத்தி (Political Production) என்கின்றார் அல்துாசர். இந்த அரசியல் உற்பத்தியின் போது சமுதாயத்திலுள்ள குறிப்பிட்ட விதத்தில் அமைந்த சில உறவுகள் புரட்சிகர தாபனம் என்ற சாதனத்தின் துணை கொண்டு சில அரசியல் வழிமுறைகளால் அரசியல் உழைப்பின் மூலமாக இன்னொரு விதத்திலான சமூக உறவுகளாக மாற்றப்படுகின்றன. இப்படிப்பட்ட பாரிய அளவிலான அரசியல் உற்பத்தியானது சமூக அளவில் வெற்றிகரமாக நடைபெறுவதை உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்கு முதலில் சிறிய அளவிலான அரசியல் உற்பத்தியானது அமைப்பினுள் நடந்தாக வேண்டியுள்ளது. மக்களிடம் கருத்துக்களை கொண்டு போவதற்கு முன்பாக கட்சி அங்கத்தவர்களை மக்களைப் போலக் கருதி அவர்களிடத்தில் முதலில் அந்தக் கருத்துக்களை கொண்டு போக வேண்டியதன் அவசியம் குறித்து மாவோ குறிபபிடுகின்றார். இந்த வகையில் அமைப்பினுள் நடைபெறும் அரசியல் உற்பத்திக்கான தளங்களாக குழுக்கள், மகாநாடுகள் கொங்கரஸ் என்பன அமைகின்றன. இவ்வகையில் குழுக்கள் என்பவை ஒரு புரட்சிகர அமைப்பின் அடிப்படையான அலகுகளாகும்.

ஒரு புரட்சிகரதாபனத்தில் அதன் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு குழுவில் அங்கம் வகிப்பது தொடர்பான பிரச்சினையானது புரட்சிகர அரசியலில் ஒரு பழைய போர் களமாகும். ருஷ்ய சமூக-ஜனநாயகக் கட்சியில் "போல்ஷிவிக்குகள்", "மென்ஷிவிக்குகள்" என்ற பிளவுகள் தோன்றுமளவுக்கு இந்தப் பிரச்சினைகள் மிகவும் தீர்க்கமானதாகவும் அமைந்திருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

கட்சியின் அரசியல் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, நடை முறையில் கட்சிக்கு உதவிகளைச் செய்து கட்சியால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு குழுவில் அங்கம் வகிப்பவரே கட்சி அங்கத்தவராக கருதப்படலாம் என்பது லெனினுடைய வரையறுப்பாக இருந்தது. இதற்குமாறாக மார்டோவின் வரையறுப்பானது முதலிரு அம்சங்களை மாத்திரம் கொண்டிருந்தால் போதுமானது. கட்சியால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு குழுவில் அங்கம் வகிப்பதை கட்டாயப்படுத்துவது அவசியமற்றது என்றது.

மேலெழுந்தவாரியாக பார்க்கும் போது இந்த இரண்டு வரையறுப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடானது மிகவும் சிறிதாகத் தோன்றினாலும், நடைமுறையில் இந்த வேறுபாடானது கட்சியின் ஒழுங்கமைப்புக்கும், ஒழுங்கமைப்பின்மைக்கும் (organaising and disorganising) புரட்சிகர கட்டுப்பாட்டிற்கும் அமைப்புத்துறையில் அராஜகவாதத்திற்கும் (anarchysm) இடையிலான வேறுபாடுகளை குறிப்பதால் இவ்வேறுபாடானது தீர்க்கமான அம்சமாக அமைகின்றது. ஒவ்வொரு புரட்சியாளரும் ஏதாவது ஒரு குழுவில் அங்கம் வகித்தால் மட்டுமே அவர்களை கட்டுப்படுத்துவது, வழிநடத்துவது, ஒழுங்காற்றுப்படுத்துவது,(Control, Direction Dicipline) போன்ற அனைத்தும் சாத்தியப்படும் மாறாக, வேலை நிறுத்தம் செய்யும் ஒவ்வொருவரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கட்சி அங்கத்தவர் என்று அழைத்துக்கொள்ளும் உரிமையை கொடுப்பது என்பது நடைமுறையில் கட்சி அமைப்பின் நம்பகத் தன்மையை (reliablity) சிதைத்து விடும் என்கிறார் லெனின்.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் மாணவர்கள் போன்றோரை ஏதாவது ஒரு குழுவில் அங்கம் வகிக்குமாறு வலியுறுத்துவதானது அவர்களுக்கு அவமானமாகப் படும் என்பது எதிர் தரப்பாரது வாதம். இதற்கு பதிலளித்த லெனின் "தொழிலாளர் வர்க்கத்துக்கு இப்படிப்பட்ட குழுக்களில் அங்கம் வகிப்பது கட்டுப்பட்டு நடப்பது என்பது மிகவும் இயல்பானது எனவும் ஒரு குழுவில் அங்கம் வகிப்பதை அவமானமாகக் கருதும் எவரும் கட்சிக்குத் தேவையில்லை" எனவும் கூறிவார். ஏனெனில் இந்த வரையறுப்பைத் தளர்த்துவது என்பது குட்டி பூர்ஷ்வா தனிநபர்வாதத்திற்கும், அராஜகவாதத்திற்கும் அமைப்புத் துறையில் சந்தர்ப்பவாதத்திற்கும் இடமளிப்பதாகவும் அமைந்துவிடும் என்றும் சாடுகிறார். இப்படியாக கட்சியில் ஏதாவது ஒரு குழுவில் அங்கம் வகிப்பது என்பது கட்சி அங்கத்தவர்களை ஏனைய கட்சி ஆதரவாளர்கள் அனுதாபிகள் போன்றவற்றிலிருந்து வேறு படுத்தும் ஒரு தீர்க்கமான அம்சமாக அமைகின்றது. எனவே குழு வேலை முறை என்பது ஒரு புரட்சிகர தாபனத்தின் மிகவும் அடிப்படையான அம்சமாகின்றது. ஒரு புரட்சிகர தாபனத்தின் அங்கத்தவர்களிடையே நிலவும் அரசியல் உறவின் ஸ்தூலமான வடிவமே இந்தக் குழுக்கள் தான். ஒரு புரட்சிகர கட்சியை ஏனைய பூர்ஷ்வா கட்சிகளிலிருந்தும் நண்பர்கள் வட்டம் கலை இலக்கிய வட்டம் போன்ற அமைப்புகளிலிருந்தும் வேறுபடுத்துகின்ற ஒரு தீர்க்கமான அம்சமாகவும் இது அமைகின்றது.

புரட்சிகர அமைப்பின் ஏதாவது ஒரு குழுவில் அங்கம் வகிப்பதினாலேயே புரட்சியாளர்கள், முக்கியமாக அரசியல் மற்றும் அமைப்பு விடயங்கள் தொடர்பான விவாதங்களில் ஜனநாயகபூர்வமாக பங்கு பற்றி அவை தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதில் தமது திட்டவட்டமான முடிவுகளை வழங்குவது சாத்தியப்படும். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுக்கு கட்டுப்பட்டு செயற்படுவதும் அவ்வாறு செயற்படுவதை சக தோழர்கள்

www.padippakam.com

பரஸ்பரம் தோழமைபூர்வமாக கண்காணிப்பதும் சாத்தியப்படும் அதாவது குழுமுறை மூலமாகத் தான் அமைப்பினுள் ஜனநாயக மத்தியத்துவம் கடைப்பிடிக்கப்படுவது சாத்தியப்படும். இவ்வாறே அமைப்பினுள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வது, செய்யப்பட்ட வேலைகளை மதிப்பிடுவது, தோழர்கள் தமக்கிடையே பரஸ்பரம் மதிப்பீடுகளை மேற்கொள்வது, கற்பது, கற்றுக்கொடுப்பது, காலாதிகாலமாக தமக்குள் ஊறிப்போன ஆதிக்க சித்தாந்தங்கள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றை களைந்து தம்மை புடம்போட்டுக்கொள்வது விமர்சனம், சுயவிமர்சனம் செய்வது, உட்கட்சிப் போராட்டங்கள் நடத்துவது, சீர்செய் இயக்கத்தை மேற்கொள்வது, புரட்சியாளர்கள் கோட்பாட்டு அரசியல் அமைப்புத் துறை மற்றும் பல்வேறு புரட்சிகர நடைமுறைகளிலும் போதியளவு தேர்ச்சிபெற்று தொழில்முறை புரட்சியாளர்களாக தம்மை பயிற்றுவித்துக்கொள்வது மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் அறிக்கைகள் சமர்ப்பிப்பது பதில் சொல்லல் பொறுப்பெடுத்தல்... இது போன்ற பல்வேறு முக்கியமான நடவடிக்கைகளும் குழு முறை மூலமாகவே சாத்தியப்படும்.

"நிலமைகளை மதிப்பிடுவது, உணர்வுத் தரத்தை உயர்த்துவது சமூக வரலாறு பற்றிய அறிவை வளர்ப்பது போன்ற அனைத்துப் பணிகளும் அமைப்பின் வலைப்பின்னலினுள் மக்களின் அமைப்பினுள் மாத்திரமே சாத்தியப்படும்" என்கிறார் பெலன். இங்கு அமைப்பின் "வலைப்பின்னல்" என்று பெலன் குறிப்பிடுவது குழு வேலைமுறையைத் தான் என்பது தெளிவு.

குழு என்பது ஒரு மந்திர தளமல்ல குழுக்களை அமைத்துவிட்டாலே அனைத்தும் சரியாக நடந்து விடும் என்பதோ அல்லது ஒரு அமைப்பு முகம் கொடுகின்ற அத்தனை பிரச்சினைகளுக்கும் குழுக்களை முறையாக அமைத்து விடுவது பூரண தீர்வை அமைந்துவிடும் என்பதோ உண்மையில்லை தான், ஆனால் குழு வேலைமுறையின்றி ஒரு புரட்சிகர தாபனமானது தன பணிகளை சிறப்பாகவும் முறையாகவு செய்வதை உத்தரவாதப்படுத்திக்கொள் முடியாது. அந்த வகையில் குழுக்க என்பது எந்தவொரு புரட்சிக தாபனத்தின் சீரான செயல்பாட்டிற்கு மிகவும் அடிப்படையான அம்சமா அமைகிறது இந்த அடிப்படை அம்சத்தி லேயே தவறிழைத்துவிட்டால் அதற்கு மேல் எந்தவிதமான நல்லெண்ணங்களும் முயற்சிகளும் அவற்றிற்குரிய பயனை த மாட்டாது.

ஒரு புரட்சிகர தாபனத்தைப் பொறு தவரை குழு வேலை முறையென்ப மிகவும் அடிப்படையானது எனினு குழுக்களை அமைத்துவிட்டபின் அமைப்பின் செயற்பாடுகள் வெற்றிபரமா அமைவது என்பது இக்குழுக்க எவ்வளவு தூரம் ஆரோக்கியமா செயல்படுகின்றன என்பதிலேயே தங்கியுள்ளது. ஒரு புரட்சிகர தாபனத்தி குழுக்கூட்டங்களை எவ்வாறு நடத்துவ என்பதற்கு தனிச்சிறப்பான சி வழிமுறைகள் உள்ளன. இந்த வழிமுறை களை சரிவரப் புரிந்துகொண்டு த செயற்பாடுகளில்முறையாக கைக்கொ டால் மட்டுமே குழுக்களால் பெறக்கூடி அதி உச்ச பயன்பாட்டை கு அங்கத்தவர்களும் ஒட்டுமொத்தமா அமைப்பும் பெற முடியும்.

குழுக்களில் 'அரசியல் உற்பத்தியானது' சரிவர நடைபெற வேண்டுமான அதன் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரு போதியளவு மூலப் பொருள்களுட அதாவது முறையான தயாரிப்புகளுட குழுக்கூட்டங்களில் பங்குபற்ற வேண்டு குழுக் கூட்டங்கள் அதன் அங்கத்தவ களின் பங்கு பற்றுவதுடன் முன்னரே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலி அடிப்படையில் நடத்தப்படவேண்டும்.

குழுக்கூட்டங்களுக்கு முன்பே அத



படிப்பகம்

www.padippakam.com

அங்கத்தவர்களுக்கிடையே முக்கியமான தகவல்கள் போதியளவு பரிமாறப்பட்டிருப்பது விரிவான கலந்தாலோசனைகளை நடத்தி முக்கியமான விடயங்களில் தீர்மானங் களை எடுப்பதற்கு சாதியாக சில முன்மொழிவுகளையும் முன்வைத்துவிட்டு குழுக்கூட்டங்களை கூட்டி அதற்கேயுரிய முறையில் நடத்தினால் மட்டுமே எதிர் பார்க்கப்பட்ட விளைவுகளை பெறுவது சாத்தியப்படும். இவ்வாறே ஒவ்வொரு குழுச் சந்திப்புகளிலும் அதன் ஒவ்வொரு அங்கத்தினரும் முனைப்பாக பங்குபற்றவதை உத்தரவாதப்படுத்திக்கொள்ள வேண்டும். அத்தோடு அமைப்பின் அரசியல் திட்டம் வேலை திட்டம் மற்றும் குழுவின் முன்னைய தீர்மானங்கள் என்பவற்றை வழிகாட்டியாகக் கொண்டும் அடுத்தடுத்தக் குழுக்கூட் டங்களின் தொடர்ச்சியை கிரமமாகப் பேணிக்கொண்டும் நடைபெறல் வேண்டும் ஒவ்வொரு குழுவுக்குமான குறிப்பான வேலைகளும் குழுவினுள் முறையான வேலைப் பங்கீடும் பரஸ்பர கண்காணிப்பும் இருக்க வேண்டும். குழு அங்கத்தினர் ஒவ்வொருவருமே தாம் "அரசியல் உற்பத்தியில்" ஈடுபடுவதாக உணர்ந்து அதற்கேயுரிய பொறுப்புணர்வுடன் பங்கு பற்ற வேண்டும். இவ்வாறு குழுக்கூட்டங்கள் முறையான தயாரிப்புகளுடன் உரிய விதிமுறைகளுடன் அங்கத்தவர்களின் உயர்ந்தபட்ச அக்கறையுடன் தொடர்ச்சி யாகவும் கிரமமாகவும் நடைபெறுமானால் குறிப்பிட்ட ஒரு காலத்தில் சில திட்டவட்டமான "விளை பொருட்களை" இக் குழு வேலை முறைகளினால் "உற்பத்தி" செய்ய முடியும் அப்போது தான் குறிப்பிட்ட குழுவில் அரசியல் உற்பத்தி நடைபெறுவதாகக் கருத முடியும்.

தொகுத்துக் கூறினால், புரட்சிகரக் கட்சி என்பது ஒரு அரசியல் நிறுவனம். அத்தகைய அரசியல் நிறுவனத்தில் புரட்சியாளர்களிடையே நிலவுகின்ற அரசியல் உறவுகளின் ஸ்தூலமான வடிவமாக அங்கு காணப்படுகின்ற குழுக்கள் அமைகின்றன. இத்தகைய குழுக்களினூடாகத் தான் கட்சி உறுப்பினர்களிடையே உறுதியான அரசியல் உறவுகள் நிலைநாட்டப்படுவது சாத்தியமாகின்றது. இவ்வகையில் குழுவேலைமுறையை உயர்ந்த அரசியல் தளத்தில் பிரக்ஞை பூர்வமாக முன்னெடுப்பதன் மூலமாக ஒரு புரட்சிகரக் கட்சி தனது இலக்கில் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் முன்னேறுவதை உத்தரவாதப்படுத்த முடிகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்